5547

# தமிழர் உளவியலும் கலையும்

கலாநிதி சபா.ஜெயராசா




JPL
C5547

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் உளவியலும் கல்வியும்

03 OCT 2001
2003
KOHA JPL
131094
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பேராசிரியர் சபா. ஜெயராசா

5547.N.B
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

வெளியீடு:
போஸ்கோ பதிப்பகம், நல்லூர்.
2001

131094CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150.37/R


| | |
|---|---|
| நூற்பெயர்: | தமிழர் உளவியலும் கல்வியும் |
| நூலாசிரியர்: | பேராசிரியர் சபா. ஜெயராசா |
| முகவரி: | கல்வியியல் துறை,<br>யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |
| பதிப்புரிமை: | நூலாசிரியர் |
| பதிப்பு: | முதல் - 2001 |
| முன் அட்டை: | ரமணி |
| அச்சுப்பதிப்பும் வெளியீடும்: | போஸ்கோ - நல்லூர். |
| விலை: | ரூபா: 100/- |

| | |
|---|---|
| Title: | THAMILAR ULAVIYALUM KALVIYUM |
| Author: | Prof. S. JAYARASAH M. A. (Ed) Ph. D. |
| Address: | DEPT. OF EDUCATION<br>UNIVERSITY OF JAFFNA |
| Edition: | FIRST - 2001 |
| Copyright: | AUTHOR |
| Subject: | TAMILIAN SOCIAL PSYCHOLOGY |
| Cover Design: | RAMANI |
| Printer and Publisher: | BOASCO - NALLUR, JAFFNA. |
| Price: | Rs. 100/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பல்வேறு பயில்துறைகளின் வழியாக ஆராயும் செயற்பாடுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் மத்தியில் வளர்ச்சியுற்று வருதல் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. உளவியல், அறிகை மானிடவியல், கல்வியியல் முதலாம் துறைகளின் வழியாகத் தமிழர்களது பண்பாட்டின் ஆழ்ந்த வேர்களையும், அவற்றின் வளர்ச்சிகளையும் தேடும் முயற்சியைப் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் இந்நூலிலே மேற்கொண்டுள்ளார். இந்நூலைப் படிக்கும் பொழுது மேலும் பல ஆய்வுகளைச் செய்வதற்குரிய வாய்ப்புக்கள் இத்துறையில் இருத்தல் தெரிய வருகின்றது. உளவியல் நிலைப்பட்ட பல ஆய்வுகளை எமது பண்பாட்டினை அடியொற்றிச் செய்வதற்குரிய முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்ட நூலாசிரியரின் பணிகள் பாராட்டுக்குரியவை.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை

துணைவேந்தர் அலுவலகம்,
யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரைச் சுருக்கம்

யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் மேற்கொள்ளப் பட்ட கள ஆய்வுகளையும் முதியோரிடத்துப் பெறப் பட்ட தகவல்களையும் சமூக மானுடவியல் ஆதா ரங்களையும் இலக்கியங்களையும் அடிப்படையாகக் கொண்டு தமிழரின் சமூக உளவியலையும் கல் விச் செயற்பாடுகளையும் கண்டறியும் ஒரு முன் னோடி நடவடிக்கையாக இந்நூல் அமைகின்றது. ஆய்வுக்கும் நூலாக்கத்துக்கும் ஒத்துழைத்த அனை வருக்கும் நன்றி.

சிறப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும், வாழ்நாள் பேராசிரியர் வ. ஆறு முகம் அவர்களுக்கும் மற்றும் பேராசிரியர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி.

- நூலாசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | தமிழர் மரபில் குழந்தை உளவியலும் அறிகையும் ... | 01 |
| 02. | பூர்வீக உணர்வுகளை நெறிப்படுத்தல் ... | 06 |
| 03. | சொல்லறிவும் கையறிவும் ... ... | 11 |
| 04. | குழு உளவியல் ... ... ... | 15 |
| 05. | உணர்வின் மீப்பெருக்க நிலை ... ... | 20 |
| 06. | சிரித்தல் என்ற நடத்தைக் கோலம் ... | 26 |
| 07. | பயம் என்ற எண்ணக்கரு ... ... | 31 |
| 08. | பற்றுப் பதிகை ... ... ... | 38 |
| 09. | கனவுகள் பற்றிய பகுப்பாய்வு ... ... | 42 |
| 10. | உளப்பிணி ... ... ... | 56 |
| 11. | புத்தாக்க உளவியல் ... ... ... | 62 |
| 12. | தமிழர் மரபில் சிறுவர் கல்வியும் சிறுவர் அரங்கும் ... | 67 |
| 13. | இலக்கியங்கள் வழியாகப் பண்டைத் தமிழர் கல்வியை அணுகுதல் ... | 77 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் மரபில் குழந்தை உளவியலும் அறிகையும்

உடல் வலுவும், உழைப்பும், உற்பத்திப் பெருக்கினுக்கு அடிப்படைகளாக வேண்டப்பட்டமையால் தமிழர் மரபில் குழந்தை என்பது செல்வத்துக்குப் பிரதியீடாகக் கருதப்பட்டது. உற்பத்திப் பெருக்கையும் மகப் பேற்றினையும் குறிக்கும் பொதுச் சொல்லாக 'புறந் தருதல்' என்பது (புறநானூறு 312) பயன்படுத்தப் பட்டது.

திருமணமாகாத பெண்கள் கொடிக்கும், பருவம் எய்துதல் பூத்தலுக்கும் (பூப்பு), விவாகம் என்பது மணத்தலுக்கும், பிள்ளைகள் கொடிக்காய்களுக்கும் ஒப்பிடப்படுதல் கிராமிய மரபு. இப்பண்புகள் இலக்கிய வழக்கிலும் காணப்படுகின்றன.[1] குழந்தைகள் உற்பத்திப் பெருக்கினுக்குரிய குறியீடாகவும் செல்வமாகவும் கருதப் பட்டமையால் அவற்றோடு இணைந்த எண்ணக்கரு வாகக் 'காப்பு' (காத்தல்) வளர்ச்சியடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி கருப்பந்தரித்து இருக்கும் பொழுது, கணவனுக்கு நோய்கள் ஏற்படின் அவன் மனைவியின் கருப்பச் சுமையின் ஒரு பகுதியைத் தாங்குகின்றான் என்பதும் கிராமிய மரபிலே காணப்பட்டது. அத்துடன் மனைவி கருப்பந் தரித்து இருக்கின்றாள் என்பதற்குக் குறிகாட்டியாகத் 'தாடி' வளர்த்தல் வேண்டும் என்ற கிராமிய மரபும் காணப்பட்டது.[2]

குழந்தை வளர்ப்பில் உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி என்ற இரண்டு இயல்புகள் தமிழர் மரபில் இனங்காணப்பெற்றன. குழந்தைகளுக்கு வீட்டுப்பெயர், வெளிப்பெயர் என்ற இரண்டு பெயர்கள் இடப்பெற்றன. உடல் வளர்ச்சியைச் சுட்டும் குறியீடாக வீட்டுப் பெயர் அமைந்தது. உள வளர்ச்சியைச் சுட்டும் குறியீடாக வெளிப்பெயர் அமைந்தது. வெளிப்பெயர், பள்ளிக்கூடப் பெயர், இடாப்புப் பெயர் என்றும் பின்னர் அழைக்கப்படலாயிற்று. சமூக நிரலமைப்பில் உயர்ந்தோர் மத்தியில் இவ்வாறு இருவகைப் பெயர் நிலைபெறலாயிற்று. உடல் விருத்திக்குரிய நடவடிக்கைகளிலும் சமூக நிரலமைப்புக்குரிய வேறுபாடுகள் காணப்பட்டன. சமூக நிரலமைப்பின் உயர் நிலையில் இருந்தோர் தமது குழந்தைகளை இளஞ் சூடான நீரில் குளிக்கச் செய்தனர். ஏனையோர் தண்ணீரிலே குளிக்கச் செய்தனர்.[3]

உடல் உள்ள விருத்தியைப் பொறுத்தவரை முதிர்ந்தோரின் செயல்களைப் பின்பற்றுதல் அல்லது பார்கோடல் (Imitating) என்ற செயற்பாட்டுக்கு ஊக்கல் வழங்கப்பட்டது. வளர்ந்தோரைப் பார்த்துப் பின்பற்றும் விளையாட்டுக்கள் உடல் உள்ள வளர்ச்சியை மேம்படுத்த உதவும் என நம்பப்பட்டது.

சிறுவர்களிடத்துப் பொறுப்புக்களைக் கையேற்கும் திறன்களை வளர்க்கும் பொருட்டு சிறுவிலங்குகள் கையளிக்கப்பட்டன. ஆண் குழந்தைகளுக்கு ஆடு, மாடு, நாய் போன்ற விலங்குகளும், பெண்களுக்கு கோழி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி போன்ற பறவைகளும் பொறுப்பாக வழங்கப்பட்டன. அவற்றை வளர்ப்பதாலும், உணவு ஊட்டுவதாலும், அவற்றுக்குப் பயிற்சி தருவதாலும், உடல் உள இயக்க ஒன்றிணைப்பு மேம்பாடு நிகழும் என்று கருதப்பட்டது.[4] இது நவீன உளவியலில் Psycho-Motor development எனப்படும்.

பிரச்சினைகளை வழங்கி அவற்றுக்குரிய தீர்வுகளைக் கண்டறிதல் வாயிலாகக் குழந்தைகளைக் கற்கச் செய்யும் முறைமை (Problem solving) 'முடக்கு அவிழ்த்தல்' என்ற எண்ணக்கருவால் விளக்கப்பட்டது. பிரச்சினையை விடுவித்தல் 'விளக்கம்' என்ற சொல்லால் அழைக்கப்பட்டது. நெடுநல்வாடை (143), மதுரைக் காஞ்சி (719) என்பவற்றில் பிரச்சினை தீர்ப்போருக்கு வெகுமதியாக மோதிரம் வழங்கப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன. மோதிரம் என்பது 'விளக்கம்' என்ற சொல்லாலும் அழைக்கப்பட்டது. பிரச்சினையை விளங்கிச் செயற்படல் விளக்கம் என்ற சொல்லால் உணர்த்தப்பட்டது.

சொல் சார்ந்த படிமங்களின் வளர்ச்சி அறிகைச் செயல்முறையிலே சிறப்பிடம் பெறுகின்றது. சொல் சார்ந்த படிமம் (Verbal Imagery) கிராமிய வழக்கிலே 'சொற்கட்டு' என்று குறிப்பிடப்பட்டது. உருவ நிலையான சொற்கட்டுகள் சிறுவர்களுக்கு முதலிலே அறிமுகம் செய்யப்பட்டன. படிப்படியாக அருவநிலையான சொற்கட்டுக்கள் கட்டியெழுப்பப்பட்டன. கற்களைக் கொண்டு சுவர் கட்டப்படுதலுக்கும் சொற்களைக் கொண்டு சிந்தனைகள் பின்னப்படுவதற்குமிடையே ஒப்புமை காணப்பட்டது. 'கல்லாடல் - சொல்லாடல்' என்ற தொடர் நிலவிவருகின்றது. விளையாட்டிலே கற்களை வைத்து ஆடுவதற்கும், கற்றலிலே சொற்களை ஆடுவதற்குமிடையே ஒப்புமை விரிவாக்கப்பட்டது.[5]

பண்டங்களுக்கும் சொற்களுக்குமிடையே ஒப்புமை காணும் மரபும் கிராமிய மரபுகளிலே காணப்பட்டது. பண்டங்களைக் குறிக்கும் பொருள் என்ற எண்ணக்கரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொருளைக் (Meaning) குறிப்பிடுவதாக அமைந்தது. உற்பத்தி முறைமை, வாழ்க்கைத் தொழிற்பாடு, கற்றல் என்பவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்புகள் இருந்தமை இதனாற் புலப்படுகின்றது.

'கேட்ட வினாவுக்கு விடை தருக' என்பது கிராமிய மரபில் 'பொட்டகந்திறந்து பொருளை அள்ளித் தருக' என்றும் பேசப்பட்டது. கருத்து என்பது 'சாறு' என்ற சொல்லாலும் அழைக்கப்பட்டது. 'சாறு பிழிதல்' என்பது கருத்தெடுத்தல் ஆயிற்று. நிலத்தைப் பண்படுத்தல் 'சாறுதல்' எனப்பட்டது. கருத்துக் கூறி விளக்குதலும் 'சாறுதல்' என்று கிராமிய வழக்கிலே குறிப்பிடப்பட்டது.[6]

வயது வேறுபாடின்றி ஆண், பெண் வேறுபாடின்றி, எல்லோராலும் கற்க முடியும். அறிகை அமைப்பாக்கங்களை ஏற்படுத்த முடியும் என்பதைக் கருதும் குறியீடாக 'பொட்டு' அமைந்தது. பொட்டு என்பதற்கு 'நுழைவு' என்ற கருத்தும் கிராமங்களில் நிலவுகின்றது. அறிவுக்குரிய குறியீடாகிய பொட்டு பின்னர் அழகுக்குரிய குறியீடாக மாறியது.[7]

அறிதலும், அறியும் உபாயங்களும் தொடர்ச்சியானவை என்பது அசையும் நீரினால் அல்லது பாயும் நீரினாற் குறிப்பிடுதலும் கிராமிய மரபுகளிற் காணப்படுகின்றன. (இதன் திரிபடைந்த வடிவமாகப் பின்னர் ஓடும் நீரில் ஏடுகளை எறியும் வழக்கம் ஏற்பட்டது). அறிவின் தொடர்ச்சியைக் காட்டுவதற்கு பருத்திநூலை ஒன்றுடன் ஒன்று தொடுத்துக் காட்டும் குறியீடும் நிலவியது. கற்றலும், கல்வியும் 'நூல்' என்ற குறியீட்டினாற் சுட்டிக்காட்டப்படுதல் உண்டு. ஏடு தொடக்கும் பொழுது தொடுக்கப்பட்ட நூலின்மேல் மாணவர்களை அமரச் செய்தலும் கிராமங்களிலே நிலவின. இவ்வாறாக உடல், உள்ளம், மனவெழுச்சிகள் தழுவிய ஒன்றிணைந்த வளர்ச்சிகளை முன்னெடுக்கும் செயற்பாடுகள் நிலைபேறு கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புகள்:

1. S. Singaravelu, Social life of the Tamils - Classical period, Dept. of Indian studies, University of Malaya, Kuala Lumpure, 1966, p. 202.

2. கள ஆய்வு, மட்டுவில், 12-05-74.

3. மேலது.

4. கள ஆய்வு, வரணி, 15-05-74

5. கள ஆய்வு, ஊரெழு, 22-05-74.

6. மேலது.

7. மேலது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூர்வீக உணர்வுகளை நெறிப்படுத்தல்

தமிழர் சமூக உளவியலிலும் மானுடவியலிலும் பூர்வீக உணர்வுகளை அல்லது இயல்பூக்கங்களை நெறிப் படுத்தல் என்பது பல்வேறு தளங்களில், பல்வேறு பரி மாணங்கள் பொருந்தியதாக அமையப்பெற்றது. விலங்கு களின் இயல்பூக்கங்கள் அவற்றின் சமூக நடத்தைகளால் நெறிப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. இயல்பூக்கம் சார்ந்த நடத்தைகள் பொதுவாக எளிமையானவையா யும், சமூக நெறிப்பாடு கொண்ட நடத்தைகள் பெரும் பாலும் சிக்கல் (Complexity) பொருந்தியவையாயும் இருக்கும்.

பூர்விக உணர்வு அல்லது 'இயல்பூக்கம்' என்பது Instinct என்பதைச் சுட்டும். தமிழர் பாரம்பரியத்தில் 'மிருகவிசை', 'மிருகமனம்', 'மிருக உபாதை', 'விலங்கு மனம்', 'விலங்கு ஆட்சி', 'விலங்கம்', 'திமிறல்', 'உள் வீச்சு' போன்ற சொற்கள் நிலவின.[1]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பூக்கங்களை நெறிப்படுத்துதல் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செல்லும் செயல்முறை என்று தமிழர் பாரம்பரியத்திலே கருதப்பட்டது. 'உள்வீச்சை வெளிவீச்சு சாடும்' என்ற தொடர் இயல்பூக்கத்துக்கும் சமூக நடத்தைகளுக்குமிடையே காணப்படும் முரண்பாட்டைச் சுட்டுவதுடன் அந்த முரண்பாடு நித்திய மானது என்பதையும் உணர்த்துகின்றது. தமிழ் மரபிலே சுட்டப்பெறும் 'அகம்', 'புறம்' என்ற எண்ணக்கருக்கள் இயல்பூக்க நடத்தை, சமூக நடத்தை என்ற பரிமாணங்களில் இருந்து தோன்றியிருக்கலாம்.

இயல்பூக்க நெறிப்பாடு சமூகப்பதிகை (Social formation) சார்ந்ததாக அமைந்தது. நில உரிமைப் பகிர்வின் வேறுபாடுகளும், தொழிற் பிரிவுகளுடன் இணைந்த சாதி முறைமையும் அவற்றிலே செல்வாக்குச் செலுத்தின. தமிழர் வாழ்வில் இயல்பூக்க நெறிப்பாடு சமூக நிரலமைப்புடன் இணைந்து காணப்பட்டது. 'ஒப்புரவு', 'இசைவு', 'ஒப்புமானம்', 'நிரவல்', 'உறைவு', 'கோப்பு', சகட்டுக்கு வாழ்தல்' முதலிய தொடர்கள் இயல்பூக்கங்களைக் கட்டுப்படுத்தி நெறிகை செய்வதைச் சுட்டிக்காட்டுகின்றது.[2]

உடல் இயக்கங்களுடனும் உள்ளார்ந்த விசைகளுடனும் தொடர்புபட்டதாகிய இயல்பூக்கங்கள் மன வெழுச்சிகளுடனும் (Emotions) இணைந்து தொழிற்படும். கோபம், அச்சம், மகிழ்ச்சி முதலாம் மனவெழுச்சிகளை விலங்குகள் நேரடியாக வெளிப்படுத்த, மனிதர்களின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் கூடிய அளவு சமூக நெறிகைக்கு உட்பட்டதாக அமைகின்றது. இது கிராமிய மரபில் 'அடக்கல்', 'ஒடுக்கல்', 'புரிமாற்றுதல்', 'தணித்தல்', 'வெழுத்தல்', 'புடம்பண்ணல்' முதலிய சொற்களால் சுட்டப்படுகின்றது.[3] மனவெழுச்சி வெளிப்பாடுகள் ஒருவித உளவியற் 'காப்பரணாக' அமைந்து உள நிறைவையும் உளப்பாதுகாப்பையும் வழங்குகின்றன. மனவெழுச்சிகளுடன் இணைந்த இயல்பூக்க வெளிப்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலான வாழ்க்கை நீடிப்புப் பெறுமானத்தைக் (Survival value) கொண்டதாக இருக்கும் என்பது உளவியலாளரின் கருத்து.

இயல்பூக்கங்களுடன் இணைந்து வலுப்பெறும் கற்பனைகள் 'ஆகாயக்கோட்டை', 'மனச்சிற்பம்', 'உள்ளியம்', 'பொந்துப் பின்னனல்', 'கருஞ்சுழி' போன்ற தொடர்களால் கிராமிய மரபுகளிலே சுட்டப்படுகின்றது'

சமூகத்தினால் உருவாக்கப்படும் 'நேரியம்' (Rational process of thought) இயல்பூக்க நடத்தைகளை நெறிப்படுத்த உதவியது. அதன் வழியாக 'சுட்டி ஒருவரைக் குறிப்பிடும்' செயற்பாடு தமிழர் மரபிலே பின்பற்றப்பட்டது. தமிழ் இலக்கிய மரபிலே புறத்திணை என்பது இவ்வகையிலே குறிப்பிடத்தக்கது. நற்செயல்களைப் பாராட்டும்பொழுதும் பெயர் சுட்டப்பட்டது. விரும்பத்தகாத எதிர் நடவடிக்கைகளைத் திருத்த முனையும்பொழுதும் பெயர் சுட்டிக் கூறப்பட்டது. இவை முறையே 'தவப்பெயர்' என்றும் 'அவப்பெயர்' என்றும் கிராமிய மரபிலே கூறப்பட்டன.

இயல்பூக்கங்களை இனங்கண்டு வகைப்படுத்தி அவற்றுக்குரிய தனித்தனியான நெறிப்படுத்தலைப் பயன்படுத்திய நுண்முறைகளும் இடம்பெற்றன. உணவுதேடூக்கம், மகப்பேற்றூக்கம், குழு ஊக்கம் முதலியவை பல்கிப் பெருகவேண்டும் என்ற தூண்டல் கிராமிய மரபுகளில் நிலைபேறு கொண்டிருந்தது. இவற்றைப் பெருக்குவதற்கான உற்சாகத் தொடராகப் 'பொலி' என்பது பயன்படுத்தப்பட்டது.

சமூக நிரலமைப்பின் பண்புகள் தற்பாதுகாப்பு ஊக்கத்திலே நேரடியான செல்வாக்கைச் செலுத்தின. 'தற்காப்பு' என்பது நிலமுடையோரை நடுநாயகமாகக் கொண்டே விளக்கப்பட்டது. சமூக அடுக்கமைப்பில் நலிந்தோர், நிலமுடையோரின் பாதுகாப்பையே பெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெனப் போற்ற வேண்டியிருந்தது. 'ஆண்டார் காப்பு நங்காப்பு' என்ற தொடர் இதனைத் தெளிவாகப் புலப்படுத்தும்.[5]

நவீன உளவியலிலே குறிப்பீடப்படும் புறவயப் படுத்தல் (Objectification) தமிழர் மரபிலும் காணப் பட்டது. விறல் இயல்பூக்கம் (Aggressive instinct) புற வயப்படுத்தலால் நெறிப்படுத்தப்பட்டமை விவசாயப் பின்புலத்தில் மேலோங்கியிருந்தது. காளைகளை மடக் கிப் பிடிப்போரைப் பார்ப்பதன் வாயிலாக விறல் இயல் பூக்கப் 'புறவயப்படுத்தல்' வளர்ச்சியடைந்தது. அதாவது கூரிய கொம்புகளுடன் வளர்ந்து திரண்ட எருத்துடன் போராடி அதனை மடக்குவதை ஏனையோர் பார்த்து உள நிறைவு கொள்ளல் வளர்ச்சியடைந்தது. மாடு மடக்கல், பின்னர் மாடு விரட்டும் வண்டிச் சவாரியாக மாற்றமடைந்தது.[6]

புறவயப்படுத்தலின் இன்னொரு வளர்ச்சி 'தாச்சி' அல்லது 'கிளித்தட்டு' விளையாட்டாக அமைந்தது. கூடியளவு தசைநார்ப் பிரயோகங்களையும், கட்டுப்பாடு களையும் பிரயோகிக்கும் தாச்சி விளையாட்டானது பாரம்பரிய போர்க்காட்சி இன்பத்தைக் கொடுத்துப் புறநிலைப்படுத்தும் வலிமையைக் கொண்டது.

விறல் இயல்பூக்கத்தைப் புறநிலைப்படுத்தி நெறிப் படுத்துவதற்கு 'சேவற்போர்' என்ற விளையாட்டும் கிராமிய மரபுகளிற் காணப்பட்டது. வலிமையும் ஆற்ற லும் மிக்க சேவல்களைப் போராட வைத்து அவற்றின் வீராவேசங்களையும் இரத்தக் கசிவுகளையும் பார்க்கும் மரபு நிலவியது.

கிராமிய சமூகத்தில் 'புலால் உண்ணல்', 'புலால் மறுப்பு' என்ற மோதல்கள் சமூக நிரல் அமைப்பு அல்லது அடுக்கமைப்பைத் தழுவி எழுந்தது. 'புலால் மறுத்தல்' என்ற கருத்தியல் நிலவுடைமையாளருக்குப் பக்கபலமாக அமைந்தது. பயிர்ச் செய்கைப் பண்பாட்

5547



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டில் விலங்குகளில் இருந்து தொடர்ச்சியான பயனைப் பெறுதல், அவற்றைக் கொல்வதிலும் பார்க்க வளர்ப்பதே ஒப்பீட்டளவிற் கூடிய நன்மை தருவதாக அமைந்தது. இந்நிலையிற் 'போர்த் தேங்காய்' என்ற விளையாட்டு 'சேவற் போருக்கு'ப் பிரதியீடாக அமைந்தது. ஒரு தேங்காயால் இன்னொரு தேங்காயை அடித்து நொருக்கும் விளையாட்டு போர்த்தேங்காய் எனப்பட்டது. வலிமையான ஓடுகளைக் கொண்ட சிறிய தேங்காய்கள் இதன் பொருட்டுத் தெரிவு செய்யப்பட்டன. தேங்காயின் பலமும் அடிப்பவரின் பலமும் இவ்விளையாட்டிலே ஒன்று சேர்ந்து நிற்கும்.

சடங்குகளும், சமயமும், கலையாக்கங்களும், கல்வியும் இயல்பூக்க நெறிப்பாட்டைச் சமூகக் கட்டமைப்புக்கேற்றவாறு கட்டியெழுப்பி வந்துள்ளன. அவற்றின் வழியாகச் சமூகம் விரும்பும் பழக்க வழக்கங்கள் (Habits) உருவாக்கப்படுகின்றன. பழக்க வழக்கங்கள் வெளித்துலங்கும் உடல்சார் அசைவுகளைக் கொண்டதாக அமையும். இந்நிலையில் உடல் உறுப்புக்களைத் தொடர்புபடுத்தும் ஆளுமை வகைப்படுத்தல் கால்கோள் கொண்டது. 'கையன்', 'தோழன்', 'மார்பன்', 'கண்ணி', 'அலகி', 'திமிறன்' போன்ற சொற்கள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை.

அடிக்குறிப்புகள்:

1. கள ஆய்வு, ஏழாலை, 22-03-1995

2. மேலது

3. கள ஆய்வு, மட்டுவில், 21-02-1995

4. மேலது

5. கள ஆய்வு, நாவற்குழி

6. கள ஆய்வு, கட்டுவன், 19-01-1995.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லறிவும் கையறிவும்

அறிவுக் கையளிப்பானது சமூக உளவியலுடன் இணைந்த ஒரு செயல்முறையாகும். கல்விச் செயல் முறையின் வழியாக மிக உயர்ந்த நிலைப்பட்ட கருத் தேற்றம் செய்யப்படுகின்றது. கல்வி வழங்குவோரது கண்ணோட்டத்தில் அறமும் சிந்தனை ஆதாரங்களும், ஒழுக்கமும் கருத்தேற்றம் செய்யப்படுகின்றன. கல்வி முறைமையின் வழியாக வழங்கப்படும் தகவல்கள் மேலோங்கிய கருத்தியலுடன் (Ideology) இணைந்ததாக இருக்கும்.

ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட தமிழகக் கல்வியானது "பாரம்பரியங்களை"க் கட்டிக்காக்கும் செயற்பாடாக அமைந்தது. பொருண்மிய நிலையில் நிலமும், பயிர்ப் பெருக்கமும், முதன்மைகொண்டிருந் தமையால் அவற்றுடன் இணைந்த விழுமிய மேலாண்மை கள் கல்விச் செயல்முறையின் வழியாக முன்னெடுக்கப் பட்டன. 'பாய்ச்சுதல்', 'பண்படுத்துதல்', 'ஒப்புரவு', 'கல்லுதல்', 'வரம்பிடல்', 'நேர்ப்படுத்தல்' போன்ற பல எண்ணக்கருக்கள் பயிர்ச் செய்கைக்கும் கல்விச் செயல்முறைக்கும் பொதுவாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக உளவியலிலே கல்வியின் ஆற்றுகையானது பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்படுதல் உண்டு:

1) கருத்தியற் பணி
2) கருத்தேற்றப் பணி
3) பொருண்மியப் பணி
4) இசைவாக்கப் பணி
5) பௌதிகப் பணி.

கடந்த காலத்தைய இறுகித் திரண்ட தரிசன வடிவங்கள் (Crystalized Wisdom) கல்விச் செயல்முறை யினூடாகக் கையளிக்கப்படுகின்றன. சமூகச் செயல் முறையின் வழியாகக் கையளிக்கப்படும் இவ்வாறான திரண்டெழுந்த வடிவங்கள் கிராமிய மரபில் 'வனப்பு' என்றும் கூறப்பட்டது. இவ்வெண்ணக்கரு 'கண்வனப்பு' 'எண்வனப்பு', 'பண்வனப்பு' என்றவாறு சிறு பஞ்ச மூலத்திலும் (9) காணப்படுகின்றன.

இந்நிலையிற் 'சொல்லறிவு', 'கையறிவு' என்ற இருமைப்பாடுகள் கிராமிய மரபுகளிலே வளரத்தொடங் கின. சொல்லறிவு என்பது ஏட்டுக் கல்வியையும், 'கை யறிவு' என்பது தொழில் அனுபவக் கல்வியையும் குறித்து நின்றன. சமூக நிரலமைப்பின் உயர்ந்தோர்க் குச் 'சொல்லறிவும்' ஏனையோருக்குக் 'கையறிவும்' என்ற இருவகைக் கல்விச் செயற்பாடுகளும் அவற்றுக் குரிய சமூக மனோபாவங்களும் வளர்ச்சியடையத் தொடங்கின.

சமூகத்தோடு மக்களை ஒட்டிஉறவாட வைக்கும் உளவியற் செயல்முறை கல்வி வாயிலாக முன்னெடுக் கப்பட்டது. கிராமிய மரபில் இது 'இசைவம' எனப் பட்டது.

கைவினைகள் வாயிலாக கையறிவு வளர்க்கப் பட்டது. அதாவது உடலியக்கம், உள இயக்கம் என்ப வற்றுக்கிடையே இசைவாக்கம் நிகழ்த்தப்பட்டது. இந் நிலையானது 'கையறிவு' படைத்தோருக்கு உளச் சுகத்தை உண்டாக்கியது. ஆனால் இவ்வாறான உளச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகம் 'சொல்லறிவு' அல்லது முற்றுமுழுதாக ஏட்டுக் கல்வியைப் பயின்றோரிடத்து ஏற்படமுடியாமல் இருந்தது. சொல்லறிவு படைத்தோர் உடல்வலுப் பிரயோகத்தில் பின்தங்கியிருந்தனர்.

கையறிவில் சரியென்பதும் தவறு என்பதும் செய்யப்படும் பொருள்களால் விளக்கப்படக்கூடியதாக இருந்தது. ஆனால் சொல்லறிவைக் கொண்ட ஏட்டுக் கல்வியில் இவ்வாறான காட்சி வடிவ ஒப்பீடு இலகுவிலே மேற்கொள்ளப்படமுடியாதிருந்தது. இந்நிலையானது ஏட்டுக் கல்வியில் ஈடுபட்டோரிடத்து அருவ நிலையான அளவையியலை வளர்ப்பதற்கு உதவியதுடன் ஒருவித உளவியற் பதகளகத்தையும் தூண்டுவதற்குத் துணை செய்தது.

இவற்றின் பின்புலத்திலே உளச்சுகம் தரும் சொற்களின் தேடல்கள் நிகழ்ந்தது. வடஇந்திய மரபில் அவ்வாறான சொற்கள் 'மந்திரங்கள்' என அழைக்கப்பட்டன. சொற்களுக்கும் உளச்சுகத்துக்குமுள்ள தொடர்புகள் பற்றிய தேடல் பாரதியாரின் புதிய ஆத்திசூடியிலே தெறித்து நிற்பதைக் காணலாம்.

'சொல்வது தெளிந்து சொல்' (34)
'நேர்படப் பேசு' (61)
'மந்திரம் வலிமை' (75).

KOHA JPL

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

பொருத்தமற்ற சொல்லறிவின் இடர்கள் 'சொல் அலைச்சல் நாய் அலைச்சல்' என்று நாட்டார் வழக்கிற் குறிப்பிடப்பட்டது. நடைமுறை வாழ்க்கையோடு பயன் படாது நிற்கும் அறிவு 'முடங்கல்' என்று அழைக்கப்பட்டது. முடங்கல் நிலையை ஏற்படுத்தும் அறிவு 'வறட்டுத்தி' வழங்கப்படும் அறிவாக மாறியது.[3]

அறிவு, அனுபவம், வாழ்க்கைப் பயன் என்ற அனைத்தும் பொதிந்து உளச்சுகம் தரும் நிலை நாட்டார் மரபில் 'அடங்கல்' என்று கூறப்பட்டது. பால் வேறுபாடுகளுக்கேற்ப இந்த எண்ணக்கரு அடங்கல்

131094



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ச்சியர், அடங்கல் அண்ணர், அடங்கல் அப்பு என்ற வாறு அழைக்கும் மரபும் நிலவியது. சிறந்த ஆசிரியரும் எடுத்துக்காட்டாக விளங்கிய ஆசிரியர்களும் 'அடங்கற் பெருமான்' என்று குறிப்பிடப்பட்டனர்.[4] நாட்டார் வழக்கிற் காணப்படும் 'அடங்கல்' என்ற எண்ணக்கரு வெற்றிவேற்கை (14)யிலும் காணப்படுகின்றது.

தமது மாணவரிடத்தும் தாம் வாழும் சூழல் மாந்தரிடத்தும் உளச்சுகத்தைக் கட்டியெழுப்புதல் நல்லா சிரியர்களின் சமூகப் பணியாகக் கருதப்பட்டது. ஏட் டறிவை வளர்ப்போர், கையறிவை வளர்ப்போர் என்ற இரு நிலையாக ஆசிரியத்துவம் அமைந்தது. இந்த இரு வகை ஆசிரியர்களும் தத்தம் செயற்பாடுகளின் வழி யாகச் சமூக உளநலத்தை மேம்படுத்தவேண்டியிருந்தது. இவ்வாறான செயல்களை மேற்கொள்ளும் பொழுது ஆசிரியர்கள் 'ஆயத்தர்' என அழைக்கப்பட்டனர். 'ஆயத்தர் தந்த தாயத்து' என்ற தொடரும் வழக்கில் உண்டு. உளச்சுமைகள் வலுவடையாது தடுக்கும் ஒரு வகைத் தடையாகத் தாயத்து அமைந்தது.[5]

உள்ளத்தைச் சுட்டிக்காட்டும் குறியீடுகளாகக் கைவினைப் பொருள்கள் கருதப்பட்டன. அதாவது செய்யப்படும் பொருள்களில் ஏற்படும் கோணல்மாணல் கள், குறைபாடுகள், பிறழ்வுகள் முதலியவை உள்ளத் தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன என்ற கருத்து நிலவி வந்தது. சரியான வடிவைப் பெறாத பொருள்கள் 'ஊமை'ப் பொருள்கள் எனப்பட்டன. ஊமைச்சுட்டி, ஊமைப்பெட்டி, ஊமைக்கோலம், ஊமைப் பின்னல் என்ற வழக்குகள் நிலவின.[6] குறைபாடு என்பது 'ஊமை' என்ற எண்ணக்கருவால் புலப்படுத்தப்பட்டது.

**அடிக்குறிப்புகள்:**

1. கள ஆய்வு, வடலியடைப்பு.
2. கள ஆய்வு, சங்கானை.
3. மேலது.
4. மேலது.
5. கள ஆய்வு, சுதுமலை.
6. மேலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழு உளவியல்

தமிழரின் சமூக வாழ்வின் "முதன் நிலை"க் குழுவாகக் குடும்பம் அமைகின்றது. ஆண்வழிச் சுட்டும் குடும்ப முறைமை (Male line), பெண் வழிச் சுட்டும் குடும்ப முறைமை (Female line) ஆகிய இரண்டும் தமிழர் மரபிலே காணப்படுகின்றன. இவற்றுள் எது மேலோங்கி யிருந்தது என்பதைக் கள ஆய்வுகளில் இருந்து திட்ட வட்டமாக நிறுவ முடியாமல் இருக்கின்றது.

குடும்பங்களை அவற்றின் தொழிற்பாட்டுப் பண்பு களின் அடிப்படையிலே சுட்டிக்காட்டும் மரபு காணப் பட்டது. மல்லன்குடி (போராடும் குடும்பம்), மேய்ப் பன்குடி (ஆயர் குடும்பம்), சாமிக்குடி (தினை வளர்ப் போர் குடும்பம்), ஆட்டு வேலன்குடி (ஆடு வளர்ப்போர் குடும்பம்), மூத்தார்குடி (பழைய குடும்பம்) என்றவாறு பண்பு நிலைப் பாகுபாடுகள் காணப்பட்டன.[1]

மனித உறவுகள் குடும்பங்களின் அடிப்படையிலே நெறிப்படுத்தப்பட்டமையால் 'கிராமிய உணர்வு' என்பதிலும் குடும்ப உறவே மேலோங்கியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் தொழிற்பாட்டுப் பண்புகளுக்கு ஏற்றவாறு சமூகப் பண்பாக்கம் (Socialization), சமூக விழுமிய ஆக்கம் முதலியவை முன்னெடுக்கப்பட்டன. தமிழர் சமூக உளவியலிற் குடும்பக் குழு என்பது அருவ உறுப்பினர்களையும் (Abstract members) கொண்டதாக அமைந்தது. அதாவது குடும்ப உறுப்பினர் இறந்திருந்தால் தொடர்ந்தும் ஏதோ ஒரு வடிவில் அவர்கள் குடும்பத்தின் சுக துக்கங்களிலே கலந்து கொள்ளுகின்றார்கள் என்ற உளத் திட்டம் நிலவியது. இதன் இன்னொரு விரிவு, குடும்பம் என்பது காவல் உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும் என்ற நம்பிக்கையாகும். அதாவது இறந்த குடும்ப உறுப்பினர், நாயாக, மாடாக, பசுவாக, பாம்பாக வந்து குடும்பத்துக்கு உழைப்பையும் காவலையும் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை நிலவியது.[2]

குடும்பக் குழுவின் ஐக்கியம், உணவு தேடும் முறைமையால் மாத்திரமன்றி வழிபாட்டு முறைமை, கூத்து முதலியவற்றினாலும் மீள வலியுறுத்தப்பட்டது. இடநிலைய கட்டமைப்பிலும் பூர்விக சாதிக் கட்டமைப்பே குடும்பங்களுக்கிடையிலான தொடர்புகளைத் தொடுத்து நின்றது. குடும்பங்களுக்கிடையே காணப்பட்ட அகமுரண்பாடுகள் 'பேசாநிலை இடைவெளியினால் தீர்த்துவைக்கப்பட்டன. அதாவது கோபப்பட்டோர் கோபத்தின் செறிவுக்குத் தகுந்தவாறு சிலகாலம் பேசாது, உறவாடாது இருப்பர். குடும்பத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளின்பொழுது பேசாநிலை இடைவெளி பொதுவாக நீக்கப்படும். உதாரணமாக திருமணம், இறப்பு போன்ற நிகழ்ச்சிகளில் இது மேற்கொள்ளப்படும். முரண்பாடுகளைத் தீர்க்கும் உளவியற் செயற்பாடு 'மெழுகல்' என்று கிராமிய வழக்கிற் குறிப்பிடப்பட்டது. இது பேச்சு வழக்கில் 'மெழுகியாச்சு' என்று கூறப்பட்டது. குடும்பக் கட்டமைப்பை மீறிய புற முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு சண்டையிடும் முறைமை பயன்படுத்தப்பட்டது.[3] குடும்ப உறுப்பினர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கையைச் சொத்துரிமையோடு தொடர்பு படுத்திக் கூறும் உளவியல் சார்ந்த திருப்தியும் காணப் பட்டது. 'பத்துப்பேரும் முப்பது மாடும்', 'இருபது பேரும் அறுபது பரப்பும்' முதலியவை சில எடுத்துக் காட்டுகளாகும்.[4]

குடும்பங்களுக்கு அடுத்ததாக அமையும் சமூகக் குழுவாக ஒத்த தொழிற்பாடுகளையும் இயல்புகளையும் கொண்ட குடும்பங்களின் தொகுதி விளங்கியது. இது 'அயல்' எனப்பட்டது. சாதிக் கட்டமைப்பு, பொதுவான குளம், பொதுக்கிணறு, பொது வழிபாட்டிடம் முதலியவை 'அயல்' என்ற சமூகக் குழுவை இணைத்தன. சமூக மயமாக்கலும், குழுமக்கட்டுப்பாடுகளும் 'அயல்' என்ற அமைப்பினால் நெறிப்படுத்தப்பட்டன. கல்வி வாயிலான சமூக அசைவியக்கம் (Social Mobility) நிகழ்வதற்கு முன்னைய காலகட்டங்களில் 'அயல்' என் பது மிகுந்த கட்டுக்கோப்புடைய சமூக நிறுவனமாக அமைந்தது. அயல் என்பது சொந்த பந்தங்களை உள் ளடக்கியதாக அமைந்தது. திருமணமும் 'அயல்' என்ற அமைப்பினுள்ளே நிகழ்ந்தன. அயல் என்பது 'அயல் அட்டை' என்ற தொடராலும் அழைக்கப்பட்டது.

பல்வேறு அயல்களை உள்ளடக்கிய சமூக அலகாக ஊர்' அல்லது கிராமம் அமைந்தது. வேறுபட்ட சமூக தராதரங்களையும், நிரலமைப்புக்களையும் ஊர் உள்ள டக்கியிருந்தது. ஊரிலும் அயல் என்ற சமூக நிறுவனத் தின் செல்வாக்கு தனிமனித ஆளுமை வளர்ச்சியிலே பெரிதாக அமைந்தது.

மொழியாட்சி, தொழிற்றிறன், கருவிக் கையாட்சி, நடிபங்குகள், ஒழுக்கம், நடத்தை, உருவாக்கம், மனோ பாவம், விழுமியங்கள் முதலியவற்றை வளர்ப்பதிற் குடும்பமும் அயலுமே கூடிய செல்வாக்கைச் செலுத்தின. 'பேரர்-பேரப்பிள்ளைகள் உறவு' சமூக மயமாக்கலிலே கூடிய வலிமையுடன் செயற்பட்டது. சமூக மயமாக்கலில் ஏற்படும் தெறிப்பு 'தறுதலை' என்ற எண்ணக்கருவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தப்பட்டது. சமூக இசைவாக்கம் இழந்தோர் 'தறுதலை' எனப்பட்டனர். பேரர்களின் பெயர்களைப் பேரப்பிள்ளைகளுக்கு வைத்தல் தலைமுறை இணைப்பை மேற்கொள்ளும் சமூகச் செயல்முறையாக இடம்பெற்றது. பேரர் பெயரைப் பேரப்பிள்ளைகளுக்கு வைக்காதுவிடில், தறுதலைப் பண்புகள் தலைதூக்கும் என்ற நம்பிக்கையும் நிலவியது.[5]

அயல் என்ற குழுவின் உள்ளமைந்த குழுவாக ஒத்த வயதுக் குழுக்கள் அல்லது சம வயதுக் குழுக்கள் அமைந்தன. சமவயதுக் குழுக்கள் 'பட்டி', 'ஒக்கல்' 'நோடாலம்', 'வட்டம்', 'குதிர்' போன்ற சொற்களால் அழைக்கப்பட்டன.[6] சமூக மயமாக்கற் செயல் முறையிலும், மறைபொருள் தேடலிலும் சம வயதுக் குழுக்கள் பலம் மிக்குடையனவாக விளங்கின. சிறப்பாகப் பாலியலோடு தொடர்புடைய சமூக மயமாக்கலில் சமவயதுக் குழுக்கள் பெரிதும் செல்வாக்குச் செலுத்தின. ஆண் முதியவர்களின் சமவயதுக்குழு 'அப்புமை' என்றும், பெண் முதியவர்களின் சமவயதுக்குழு 'ஆச்சிமை' என்றும் அழைக்கப்பட்டது. சமவயதுக் குழுக்கள் உளவியற் பாதுகாப்பை வழங்கும் குழுக்களாக அமைந்தன. ஒத்த வயதுக் குழுக்களை நெறிப்படுத்தும் அனுபவம் மிக்கவர் 'மூத்தார்' என அழைக்கப்பட்டனர்.

சமூக இசைவாக்கத்தின் பொழுது எதிர்கொள்ளப்படும் இடர் 'கூன்விழுத்தல்' எனப்பட்டது. 'கூன்விழுத்தல்' என்பது 'தடங்கல்' என்ற சொல்லாலும் அழைக்கப்பட்டது. குழுக்களோடு இணங்கிவாழமுடியாத சுயாதீனமான போக்குடையோர் 'விட்டேறு கட்டைகள்' எனவும், 'தனிக்கட்டைகள்' எனவும் 'தமரிகள் எனவும் அழைக்கப்பட்டனர்.[8]

'கூத்துக்கூட்டம்' என்ற அழகியற் குழுவும் தமிழர் மரபிற் காணப்பட்டது. ஓர் அண்ணாவியாரின் கீழிருந்து கூத்துப் பழகுவோரும், கூத்தாடுவோரும் கூத்துக் கூட்டத்தில் இடம் பெற்றனர்.[9] அழகியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளின் வழியாக உளச்சுகம் வழங்கும் நிகழ்ச்சிகள் அங்கு இடம்பெற்றன. மனவெழுச்சிகளை நெறிப்படுத்துவதற்கும், புடமிடுவதற்கும் சமூக இசைவாக்கத்தினை நெகிழ்ச்சிப்படுத்துவதற்கும் 'கூத்துக் கூட்டம்' துணைசெய்தது. அண்ணாவியாரிடத்து, அழகியற் பரிமாணங்களுடன் உளவியற் பரிமாணங்களும் காணப்பெற்றன. கூத்துக் குழுவை உளவியல் நிலைப்பட்ட அறைகூவற் குழுவாக (Encounter Group) மாற்றியமைக்கும் திறனும் அண்ணாவியாரிடத்துக் காணப்பட்டது.

**அடிக்குறிப்புகள்:**

1. கள ஆய்வு, இணுவில், 19-02-95
2. மேலது
3. கள ஆய்வு, உரும்பராய், 21-02-95
4. கள ஆய்வு கொடிகாமம், 14-02-95
5. கள ஆய்வு, இணுவில், 19-02-95
6. மேலது
7. மேலது
8. கள ஆய்வு, தாவடி, 11-01-95
9. மேலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் மீப்பெருக்க நிலை

உணர்வின் மீப்பெருக்க நிலை (Explosion in Consciousness) அறிதல், கற்றல், வெளிப்படுத்துதல், துலங்குதல் என்ற செயற்பாடுகளில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த அசாதாரண வெளிப்பாடுகளில் இருந்து புதிய சிந்தனைத் தெறிப்புக்கள் அல்லது புதிய ஆக்கங்கள் தோன்றுகின்றன. தெளிவிலிருந்து சிக்கல் தோன்றி அழுத்தும் பொழுதும் சிக்கலில் இருந்து தெளிவு புலப்பட்டுச் செறிவடையும் பொழுதும் உணர்வின் மீப்பெருக்கநிலை ஏற்படுகின்றது. கட்டுப் பாடுகளிலிருந்து உள்ளம் விடுதலைபெறும் இந்நிலை யானது தமிழர் உளவியலிலும் மானுடவியலிலும் 'தற்பெருக்கம்' என்று குறிப்பிடப்பட்டது. இது 'உரு' 'கலை' என்றும் பேச்சு வழக்கிலே சுட்டப்படுகின்றது.[1]

உடல்-உளச் சிக்கல் அமைப்பினூடே நிகழும் நிலைமாற்றச் செயல்முறையாக (Transformative process) இது அமைகின்றது. பழைய உளநிலை புதிய உளநிலையாக மாற்றப்படுவதற்கும், பழைய கருத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் புதிய கருத்துக்களாக வடிவமைக்கப்படுவதற்கு முரிய உந்தலாக இது அமைகின்றது. உந்தச் செய்யும் விசை, உந்திவிடும் வெளிச்சம், அருகேயிருக்கும் மனிதர் களையோ வேறு பொருள்களையோ அறிய முடியாது விடப்படும் நிலை முதலியவை உணர்வின் மீப்பெருக் கத்தில் ஏற்படுகின்றது. புற மனிதர்களையும், பொருள் களையும் அறியமுடியாது அல்லது பொருட்படுத்தா திருத்தல் 'தன்மீட்பு' என்று குறிப்பிடப்படும்.[2]

உணர்வின் மீப்பெருக்க நிலையானது மன வெழுச்சி கொப்பளிக்கும் ஒரு நிலையாக மட்டும் அமைவதில்லை. அந்நிலையில் உள்ளம் புடமிடப்படு கின்றது. உடலும் உள்ளமும் ஒருவித ஆழ்ந்த பயிற்சியைப் பெறுகின்றன. புதிய உளத் தளத்திலே சஞ்சரிக்கும் அனுபவங்கள் பெறப்படுகின்றன. திடீ ரெனப் பளிச்சிடும் காட்சிகளின் குவிப்பு மனத்திலே இடம்பெறுகின்றது. சாதாரண உளநிலையையும் மீறிய இச்செயற்பாட்டின் பின்னர் உணர்வின் மீப்பெருக்க அநுபவம் பெற்றோர், தமது அனுபவங்களை உடனடி யாக விளக்க முடியாதிருந்தனர் அல்லது மறந்திருந்தனர்.[3]

உணர்வின் மீப்பெருக்க நிலையில் உள்ளமானது அசாதாரண நிலைக்குப் பெயர்ந்து செல்கின்றது என்று கூறுவதிலும் பார்க்க சிறப்பு உயர் நிலைக்குச் (Super-Normal state) செல்கின்றது என்று கூறுவதே பொருத்தமானது. தம்முள்ளே அனுபவிக்கப்படும் ஒரு சுகமும் வெளிச்சமும் அவர்களாற் கண்டறியப்படு கின்றது. உள்ளார்ந்த வலுவை உணரும் நிலையாக அது அமைகின்றது. இது "நோத்தாங்கல்" நிலை என்று விளக்கப்படுகின்றது. வெப்பத்தைத் தாங்கும் நிலையாகவும், உடல் நோவைத் தாங்கும் நிலையாகவும் இது அமைகின்றது. "வெறியாட்டம்", "பேயாட்டம்" போன்ற தொடர்கள் உடல் நோவைத் தாங்கும் பரிமாணங்களை மாத்திரமே குறிப்பிடுகின்றன.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வின் மீப்பெருக்க நிலையைக் குறிப்பிடும் 'கலை', 'உரு' என்பவற்றில் உயிரியல் வலு (Bio-energy) உளநிலை வலுவாக (Psychic-energy) மாற்றமடைந்து செறிவான தாக்கங்களை ஏற்படுத்துதலைக் காணலாம். உளவலுவானது அறிகை அமைப்புக்களிலே புதிய புதிய வடிவங்களை ஏற்படுத்துகின்றது. உணர்வின் மீப்பெருக்க நிலையில் உள்ளோர்க்கு மட்டுமன்றி அவர்களைப் பார்த்து உள்ளம் ஈடுபாடு கொள்பவர்களுக்கும் அறிகை அமைப்பிலே புதிய புனைவுக் கோலங்கள் தோன்றும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. குண்டலினி பற்றி ஆராய்ச்சி செய்வோர் உணர்வின் மீப்பெருக்க நிலையைக் குண்டலினியின் எழுச்சியோடு தொடர்பு படுத்திப் பார்த்தலும் குறிப்பிடத்தக்கது.[5]

உணர்வின் மீப்பெருக்க நிலையில் தெளிவிலிருந்து தெளிவின்மை பற்றிய அசைவும் அதற்கு மாறுபாடான வகையில் தெளிவின்மையிலிருந்து தெளிவுக்குரிய அசைவும் வேகமாக நிகழ்ந்தவண்ணமிருக்கும். மிக வேகமாக ஏற்படும் இந்த அசைவுகளின் வழியாகப் புதிய அறிகைக் கோலங்கள் வெளிப்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது. புதிய கலை வடிவங்களை உருவாக்கு வதற்குரிய விசையும் அதன் வழியாகத் தோன்றமுடியும்.

உணர்வின் மீப்பெருக்க நிலையானது அசாதாரண சாதனைக்குரிய சந்தர்ப்பமாகக் கொள்ளப்படுகின்றது. இந்நிலை "கூவல்" என்ற தொடராலும் அழைக்கப் படும். "உடலியக்கக் கூவல்", "உள இயக்கக் கூவல்" என்ற இரண்டு தொழிற்பாடுகள் கிராமிய மரபில் இனங்காணப்பட்டன. உடலியக்கக் கூவலின் பொழுது பனை தூக்கியோர், பாறை பிளந்து நீர் அள்ளியோர் பற்றிய செய்திகள் உண்டு. உள இயக்கக் கூவலில் பாகட்டுதல், உருவம் செதுக்குதல், எதிர்வு கூறல் முதலியவை இடம்பெற்றமைக்குச் சான்றுகள் உண்டு.[6]

உணர்வின் மீப்பெருக்க நிலையில் உடல் சுருங் குதல், உடல் பருத்து ஓங்குதல், உடல் மிகுந்த இலே சாதல், மிதந்து பறத்தல், எட்டாத பொருள்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டிவிடல் போன்ற அருட்டல் அனுபவங்கள் தோன்றும் சாதாரண நிலையிலே தோன்றாத சிந்தனைப் பளிச்சீடுகளை அனுபவிக்கும் உளச்சுகம் தோன்றும். இந்நிலையில் இரண்டு விசைகள் விரிவடைய முடியும். பேச்சு வழக்கில் இது 'இருவாட்டி' எனப்பட்டது.

1) பௌதிகப் பொருள்கள் அல்லது உருவ நிலைப் பட்ட பொருள்கள் மீது ஆட்சி செலுத்தி இன்பம் பெறும் நிலை.

2) தெய்விகவயப்படல் அல்லது அருவ நிலை உயர் உணர்வுகள்மீது ஈடுபாடு கொண்டு இன்பம் பெறும் நிலை.

உணர்வின் மீப்பெருக்க நிலையில் ஏற்படும் அசாதாரண அனுபவம் 'வலங்கை' என்றும் அழைக்கப் பட்டது. இதனுடைய தொடர்பிலேதான் 'வலம் வருதல்', 'வலம் சுற்றுதல்' போன்ற சடங்குகள் அழுத்தம் பெறலாயின. 'வலஞ்சுழி', 'வலம்புரி' போன்ற குறியீடுகளும் இவற்றோடு இணைந்ததாகக் கிராமிய மரபிலே வளர்ச்சியுற்றன. வலஞ்சுழியாக அமைந்த கோல்களை வைத்திருத்தல், வலம்புரிச் சங்கை வைத்திருத்தல் போன்றவை மீப்பெருக்க உணர்வுகளுக்கு இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கைகளும் காணப்பட்டன.[7]

உணர்வின் மீப்பெருக்க நிலையின் பொழுது எழும் பௌதிக விசை, தெய்விக விசை என்பவற்றைக் காட்டுவதற்குக் கிராமிய மரபிலே இடம்பெற்ற கலை வடிவக் குறியீடாக 'யாழி' அமைந்தது. வலப்புறம் நோக்கும் யாழி தெய்விக விசையையும், இடப்புறம் நோக்கும் யாழி பௌதிக விசையையும் குறித்து நிற்கும். பொங்கிவரும் உணர்வைக் காட்டும் சித்திரிப்பு யாழியில் அமைந்துள்ளமை தெளிவாகும்.

தனிமனித இலட்சிய உச்சங்களை அடைவதற்கும் உணர்வின் மீப்பெருக்கம் துணை செய்கின்றது. அதாவது மீப்பெருக்க உணர்வினால் தனிமனிதரும் பல நன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பெறுகின்றனர். சமூகமும் பல நன்மைகளைப் பெறுகின்றது. இவ்வாறான நன்மைகளை அடைவதற்கு கட்டுப்பாடுகள் அல்லது நெறிப்படுத்தல்கள் துணை செய்கின்றன. கிராமிய மாபிலே மீப்பெருக்க உணர்வை அடைவோருக்குக் 'கையேந்திகள்' கொடுக்கப்படுதல் உண்டு. நெறிப்படுத்தலை உணர்த்தும் குறியீடாகக் கையேந்தி அமையும். கையேந்தி என்பது கையில் வைத்திருக்கப்படும் பொருள்களைக் குறிப்பிடும் வேல், சூலம், உடுக்கு, பாதசரம், சதங்கை, மாலை, எழுத்தாணி, ஏடு முதலியவை கையேந்திகளாகக் கொடுக்கப்படுதல் உண்டு.[8]

மீஉணர்ச்சிகளை நெறிப்படுத்தாவிடில் அவை எதிர்த்தாக்கங்களை உருவாக்கும் என்றும் அதனால் உளநலம் கெட்டுவிடும் என்றும் கருதப்பட்டது. இவ்வாறாக ஏற்படும் உளத்தாக்கமும், உளநலன் பாதிப்பும் 'மொய்ப்பு' எனப்பட்டது. மீஉணர்ச்சி எழலைத் தெய்விக மீட்புடன் தொடர்புபடுத்தாவிட்டால் மொய்ப்பு ஏற்படும் சாத்தியக் கூறுகள் கூடுதலாக இருக்கும் என நம்பப்பட்டது.

வாழ்க்கையின் வெற்றியானது உள வலுவைப் பிரயோகித்தலிலும் தங்கியுள்ளது. உளவலு வீணாக்கலைக் கட்டுப்படுத்துவதற்கு பூர்வீக சமூகங்களில் இருந்தே குழுமத் தடைகள் (Toboos) உருவாக்கப் பட்டன. பூர்வீக சமூகங்களிலிருந்தே உளவலுப் பயன் பாட்டை மேம்படுத்துவதற்கு கல்விச் செயல்முறை கையாளப்பட்டு வருகின்றது. உளவலுவின் பிழையான பிரயோகமும், பிறழ்வான பிரயோகமும் அழுத்தங் களை ஏற்படுத்தும். பிறழ்வான உளவலுப் பிரயோகம் பிறழ்வான மீப்பெருக்க உணர்வுகளைத் தூண்டும். இந் நிலையில் உளவியலாளர் சிலர் மீப்பெருக்க உணர்வின் மோதல் தளங்களைக் கண்டறிய முயன்றனர்.

பாலியல் சார்ந்த மீப்பெருக்க உணர்வு பிறழ் வான வலுப்பிரயோகத்திற்கு இட்டுச் செல்லும் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக மீப்பெருக்க உணர்வு சீர்மிக்க உளவலுப் பிரயோகத்தை வளர்க்கும் என்றும் கருதுகின்றனர். தமிழர்தம் நாட்டார் கலைகளிலும் இலக்கியங்களிலும் பாலியல் சார்ந்த மீப்பெருக்க உணர்வுகளின் பிறழ்வு களும் அவலங்களும், பல்வேறு பரிமாணங்களிலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. பாலியல் சார்ந்த குழுமத்தடை கள் (Taboos) தமிழர் பண்பாட்டில் ஒப்பீட்டளவில் மிகையாக இருத்தலைக் காணலாம்.

மீஉணர்ச்சி என்பது தனியாள் வேறுபாடுகளைக் கொண்டது. "வேப்பம்பூ எத்தனை எத்தனை, விரற் கீறல் எத்தனை" என்ற கிராமியப்பாடல் ஒன்று உண்டு.[9] உலகில் உள்ள ஒவ்வொரு மனிதரதும் விரல் அடையாளங்கள் தனித்துவமானவை என்றும் ஒருவரது விரல் அடையாளம் போன்று மற்றையவரது விரல் அடையாளம் அமைய மாட்டாது என்றும் உடற் கூற்றியலாளர் குறிப்பிடுகின்றனர். வேப்பம் பூக்களின் எண்ணிக்கை முடிவிலியாய் இருத்தல் போன்று விரல் அடையாளங்களும் முடிவிலியாய் இருக்கும். அவ்வாறே தனிமனித உளவியற் பண்புகளும் தனித்துவமானவை யாயும் முடிவிலியாயும் இருக்கும்.

நவீன உளவியல் விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய தனிமங்கள் எமது கிராமிய மானுட வியல் ஆய்வுகளில் இருந்து கிடைக்கப்பெறுதலை இங்கு மீள வலியுறுத்தவேண்டியுள்ளது.

அடிக்குறிப்புகள்:

1. களஆய்வு, இணுவில் தெற்கு - 30-03-1995
2. மேலது
3. களஆய்வு, நெல்லண்டை, பருத்தித்துறை 03-06-95
4. மேலது
5. Gobi Krishna, *The Dawn of New Science*, Kundalini Research and Publication Trust, New Delhi, 1978 pp. 72 - 74
6. களஆய்வு, மிருசுவில், கொடிகாமம், 07-06-1995
7. மேலது.
8. களஆய்வு, இணுவில் 30-03-1995
9. மேலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்தல் என்ற நடத்தைக் கோலம்

தமிழர் சமூக உளவியலிலும் மானுடவியலிலும் 'மகிழ்வூட்டல்' என்ற செயற்பாடு பல்வேறு தளங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. கிராமங்களில் வாய் மொழி வாயிலாக மகிழ்வூட்டுதலும், கூத்துக்களினால் மகிழ்வூட்டுதலும், சமூக முரண்பாடுகளின் மத்தியிலே தோன்றிய தவிர்க்க முடியாத தேவைகளாக இருந்தன. நகை, சிரிப்பு, விகடம், பகடி, முறுவல், செல்லக்களிப்பு போன்ற பல எண்ணக்கருக்கள் இத்துறையிலே பயன் படுத்தப்பட்டன. ஆங்கில மரபிலும் Wit, Humour, Comic, Laughter போன்ற பல எண்ணக்கருக்கள் உபயோகிக்கப்படுகின்றன. 'மகிழ்வூட்டல்' என்பது பல்வேறு உளவியற் பரிமாணங்களைக் கொண்டுள்ள மையால் இவ்வாறு பல சொற்பிரயோகங்கள் தோன்று தல் தவிர்க்கமுடியாதது.

மனவெழுச்சி நெருக்குவாரங்களை (Emotional Tension) விடுவிக்கும் உளவியற் செயற்பாடு மகிழ்வூட் டலிலே இடம்பெறுகின்றது. தமிழர்களுடைய சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியற் பாரம்பரியத்தில் இது 'சிரித்துக்கொட்டல்' எனப்பட்டது. அதாவது உளவலுவை உடலியக்கச் செயற்பாடுகளினால் (Bodily Activity) 'வெளிக்காட்டும்' நடவடிக்கையாக அது கருதப்பட்டது. 'சிரித்த மரம் செழிக்கும்' என்று இதனைக் குறியீடாகச் சொல்லும் கிராமிய மரபும் காணப்படுகின்றது.[1]

மகிழ்வூட்டலின் வேறு பரிமாணங்களும் நாளாந்த நடைமுறைகளில் இருந்து விளக்கப்படுகின்றன. நடத்தை அவலட்சணங்கள் அல்லது நடத்தைக் கோணங்கித் தன்மை (Clumsiness of Behaviour) பார்ப்போர்க்கும் அனுபவிப்போருக்கும் மகிழ்ச்சித் தூண்டியாக அமைவதுண்டு. இது கிராமிய வழக்கில் 'கோணங்கித்தனம்', 'குமட்டல்', 'குஞ்சரக்கேடு', 'புதுவழப்பம்', 'அவலட்சணம்', 'சறுக்கல்', 'வழுக்கல்' போன்ற பல்வேறு சொற்களால் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப அழைக்கப்படுகின்றது.[2] கோமாளித்தனமான உடை, பொருத்தமற்ற பேச்சு, பொருத்தமற்ற அங்க அசைவுகள் முதலியவை நகைச்சுவையைத் தூண்டும். ஆழ்ந்து பார்க்கும்போது சமூக மாறுபாடான நடத்தைகளும் நகைச்சுவையாக மாறுதல் உண்டு. கிராமிய வழக்கில் இவற்றுடன் தொடர்புடைய நடத்தைகள் 'மாப்பாணி' என்று குறிப்பிடப்படுதல் உண்டு. Awkwardness என்பதற்கு இணையான எண்ணக்கருவாக 'மாப்பாணி' என்ற சொல் அமைந்தது. தெருக்கூத்துக்களில் இவற்றை நிலைக்களனாகக் கொண்ட பாத்திரங்கள் உலாவவிடப்பட்டன. சமூகச் சீர்கேடுகளைக் காட்டுவதற்கும் சமூகத் தளைகளைக் கிண்டல் செய்வதற்கும் இவ்வகைப் பாத்திரங்கள் பயன்பட்டன.[3]

பேராசிரியர் மக்டூகல் 'சிரித்தல்' என்ற செயற்பாட்டினை மனவெழுச்சியுடனும், உடலியக்கத் தொழிற்பாடுகளுடனும் இணைத்து விளக்கினார் (1920). சிரிப்பின்பொழுது சுவாசித்தல் தூண்டப்படுகின்றது. குருதிச்சுற்றோட்டம் விரைவுபடுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளைக்குக் கூடுதலான அளவு வலு வழங்கப்படுகின்றது. அவற்றின் வாயிலாக மகிழ்ச்சியை அனுபவிப்பவரது உளக்கவி நிலை சீர்திருத்தப்படுகின்றது என்றவாறு சிரித்தலின் உளவியற் செயற்பாடுகள் விரித்துரைக்கப் படுகின்றன.

ஒருவர் தம்மைத் திருப்திப்படுத்திக் கொள்வதற்காகச் சிரித்தலும், சிரிப்பதனால் தம்மைத் திருப்திப் படுத்திக் கொள்வதும் உளவியலிலே குறிப்பிடப்படுகின்றது. சில வேளைகளில் ஒருவருக்குச் சிறிய நோ ஏற்படும் பொழுது அவர் சிரித்தல் நடத்தையைச் சீர்செய்தல் உண்டு. இவ்வகையான தொழிற்பாடு கிராமிய மரபில் 'விண்ணாங்குச் சிரிப்பு', 'நவுட்டல் சிரிப்பு' போன்ற தொடர்களால் அழைக்கப்பட்டது.

சிரித்தல் என்பது சிந்தனையிலும் உணர்ச்சியிலும் சிக்கனத்தை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கை என்பது உளவியலில் முன்வைக்கப்பட்ட பிறிதொரு கருத்தாகும். ஆழ் மனத்திலே அமிழ்ந்திப் புதைந்த உணர்வுகளை வெளிக்கொண்டுவரும் எளிமையான நடைமுறையாகச் சிரித்தல் முன்னெடுக்கப்படுகின்றது. ஆழ்மனத்துடன் தொடர்புடையதாக மேலெழுந்துவரும் சிரிப்பானது கிராமிய மரபில் 'அடிக்கிணத்துச் சிரிப்பு' என்று அழைக்கப்பட்டது.[4]

சிரிப்புக்குக் குறியீடாக விரியும் மல்லிகைப்பூ குறித்துரைக்கப்பட்டது. வீட்டு முற்றத்தில் மல்லிகைக் கொடியை நடவேண்டும் என்பது, இல்லத்தின் கூட்டு மொத்தமான விளைவுகளுள் ஒன்றாக சிரித்தல் அமைய வேண்டும் என்ற பொருள் குறித்து நின்றது. சிரித்தல் 'மல்லிகை விரிப்பு' என்றும் கூறப்பட்டது. சிரிக்காவிடில் 'மல்லிகைப் பூவுக்குப் பஞ்சமோ' என்று கேட்கும் மரபும் கிராமங்களில் உண்டு.[5]

சிரிப்பை உண்டாக்கும் மூலகங்கள் வயது வேறுபாட்டுக்கும் முதிர்ச்சி வேறுபாட்டிற்கும் ஏற்ப அமையும் என்பதும் உணர்த்தப்பட்டது. குழவிச் சிரிப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைச் சிரிப்பு, இளந்தாரிச் சிரிப்பு, மாப்பிள்ளைச் சிரிப்பு, காவோலைச் சிரிப்பு என்ற தொடர்கள் கிராமத்து வழக்கிலே இருந்தன. கிராமத்துச் சமூக உளவியலிலே சிரிப்பை வகைப்படுத்தும் இயல்புகளும் காணப்பட்டன. கீரைச் சிரிப்பு, கிண்கிணிச் சிரிப்பு, ஓலைச் சிரிப்பு, கவரிச் சிரிப்பு, கலகலப்பு, மத்தாப்பு, வட்டிச் சிரிப்பு, ஆச்சி நகை, கடலைக்குட்டான், தவசிநகை போன்ற வகைப்படுத்தல்கள் கிராமியக் கள ஆய்வுகளில் இருந்து பெறப்பட்டுள்ளன.[6]

நகைச்சுவையை ஓர் உளவியற் பிணி நீக்கல் உபாயமாகக் கையாளும் மரபும் காணப்பட்டது. கிராமங்களில் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டோர் 'நகையாட்டி', 'நகைச் சித்தர்' என்றவாறு அழைக்கப்பட்டனர். வாழ்க்கைச் செயல்முறையின் வெற்றி 'சிரிப்பு' என்ற குறியீட்டினால் அளக்கப்படுதலும் அவதானிக்கப்பட்டுள்ளது. குடும்ப வாழ்க்கையில் வெற்றியடைந்து பல்வகைப் பேறுகளும் பெற்ற பெண்கள் 'நகை நாச்சியார்' என அழைக்கப்பட்டனர். 'சிரிப்பு நாச்சி' என்ற தொடருக்குரிய ஆண்பாற் பெயர்கள் கள ஆய்வுகளிலே கிடைக்கப்பெறவில்லை. ஆனால் மகிழ்ச்சியாக வாழ்பவன் 'மகிழ்னன்' என்று அழைக்கப்பட்டமைக்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன.

சமூக நிரலமைப்புக்கும் மகிழ்ச்சிப் பங்கீட்டுக்குமிடையே கிராமிய மரபுகளிலே தொடர்புகளைக் காண முடியும். அடுக்கமைப்பின் தாழ் மட்டங்களில் வாழ் மக்களின் சிரிப்பை கிராமியப் பின்புலத்தில் ஆராய்ந்து பார்க்கும் பொழுது நரம்பியல் நிலை மிகை வலுவின் வெளிப்பாய்ச்சலாக (Outlet for Superfluous Nervous Energy) இருத்தல் புலப்படுகின்றது. சிரிப்புக்கும் சமூக நிரலமைப்புக்குமிடையே நுண்ணிய தொடர்புகளை இனங்காண முடிகின்றது.[7] சமூக நிரலமைப்பின் தாழ் மட்டங்களில் அமுங்கிய உணர்வுகள் 'சிரிப்பு' என்ற வெளிப்பாட்டுடன் கூடுதலான தொடர்புகளைக் கொள்

5547

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. உயர் மட்டங்களில் அமுங்கிய உணர்வுகள் அழுகையாகப் பெருமளவில் வெளிவருகின்றது. இந்த அவதானிப்பைப் பரிசீலிக்க சமூக உளவியல் சார்ந்த கள ஆய்வுகளை மேலும் பரந்த அளவிலே செய்ய வேண்டியுள்ளது.

**அடிக்குறிப்புகள்:**

1. கள ஆய்வு, கட்டுடை, மானிப்பாய், 22-06-1992
2. மேலது
3. கள ஆய்வு, இருபாலை, 07-12-92
4. கள ஆய்வு, கோண்டாவில் 14-07-92
5. மேலது
6. மேலது
7. மேலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயம் என்ற எண்ணக்கரு

சாதாரண உளநிலையில் உள்ளோரும் அசாதாரண உளநிலையில் உள்ளோரும் 'பயம்' என்ற மனவெழுச்சியினால் தாக்கப்படுகின்றனர். சூழலோடு இசைவாக்கம் செய்வதற்கும், பொருந்தி வாழ்வதற்கும், கற்பதற்கும், முதிர்ச்சி பெறுவதற்கும் 'பயம்' துணை செய்கின்றது. உடல்-உள்ளப் பாதிப்பைத் தூண்டும் அபாயகரமான தூண்டியே பயத்தை உண்டாக்கும்.

அச்சம், அஞ்சுதல் போன்ற சொற்கள் தமிழ் மரபிலே பயத்தைக் குறித்தன. இலகுவிலே சீராக்கம் செய்துகொள்ள முடியாத தொடுபயம் (Phobia) தமிழ் மரபில் 'பிணையச்சம்' எனப்பட்டது. வயதோடு வளர்ந்து செல்லும் பயம் 'வயதச்சம்' என்றும் உடனடியாக நீங்கிவிடும் பயம் 'சொட்டச்சம்' என்றும் கூறப்பட்டது.

விலங்குகள், பறவைகள், நீர், ஆழம், உயரம், இறப்பு, நோய், தீ, தவறிழைத்தல், தோல்வி, பிரிவு, திருடர், தனிமை, இருள், பேய், குருதி, அங்கஈனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படல், யுத்தம், அங்கீராம் இன்மை, முதுமை, இடி முழக்கம், நஞ்சு, கோபப்படுவோர், துன்பம் இழைப் போர் என்றவாறு பயமூட்டும் சந்தர்ப்பங்கள் உளவிய லிலே விரித்துரைக்கப்படுகின்றன. அச்சத்தை உண்டாக் கும் விலங்குகளைப் பொறுத்தவரை பாம்பு அதிக அளவிலே பெரும்பாலான மக்களால் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.[1] இது உலகளாவிய நிலையிலும் ஒரு பொதுப்பண்பாகக் கருதப்படுகின்றது.

தமிழரது உளவியல், மானுடவியல் மரபுகளில். பயத்திலிருந்து விடுபடவைக்கும் உபாயமாக பயமூட்டிய நிகழ்ச்சியை மீள ஆற்றுகை செய்து காட்டல் நிலவி வந்தது. இது கிராமிய மரபில் 'அச்சமீட்பு' எனப்பட் டது. அச்சமூட்டிய நிகழ்ச்சியை மீள அனுபவிக்கச் செய்தல் அறிகை நிலையிலும் நடத்தை நிலையிலும் நேரிய தாக்கங்களை ஏற்படுத்தவல்லது. இந்த உபா யத்தை நவீன உளவியலாளர் பயன்படுத்துதலும் குறிப் பிடத்தக்கது.

தமிழர் மரபில், பயத்தில் இருந்து விடுபடுவதற்கு நடத்தை ஒழுங்கமைப்பு உபாயங்களும் பயன்படுத்தப் பட்டன. கிராமிய மரபில் இது 'வன்ன நடை' என்று குறிப்பிடப்பட்டது.[2] பயமூட்டிய தூண்டியை மகிழ்ச்சி தரும் தூண்டியாக மாற்றிக் காட்டுதல் தூண்டிவயப் பட்ட நடத்தை ஒழுங்கமைப்பாகக் காணப்பட்டது. பயமூட்டிய தூண்டிகளைக் குலக்குறிகளாக வைத்துப் போற்றுதல், நாகதம்பிரான் வழிபாடு, கொத்தி வழி பாடு முதலியவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

இறப்புப்பற்றிய பயம் தமிழர் மரபில் ஆராயப் படும் பொழுது பல தனித்துவமான தகவல்கள் வெளி யாகியுள்ளன. சமூக நிரலமைப்பின் தாழ் மட்டங் களில் உள்ளோர் மத்தியில் இறப்புப்பற்றிய பயம் அல்லது தொடுபயம் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப் படுகின்றது. இறப்பு என்பது மீள் பிறப்பின் ஆரம்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்து பயத்திலிருந்து விடுபடும் உளவியல் நடவடிக்கையாகக் கிராமிய மரபுகளில் மந்திரம், சடங்கு, கட்டுக்காவல், அவியல், குளிர்த்தி, கூத்து முதலியவை பயன்படுத்தப்பட்டன. மந்திரம், மந்திரவித்தை, குறளி முதலியவை பல்வேறு தளங்களிலே பரவலாகப் பயன் படுத்தப்பட்டன. நல்ல மந்திரம் 'தவமந்திரம்' என்றும், தீயனவற்றிற்கு இட்டுச் செல்லும் மந்திரம் 'அவமந்தி ரம்' என்றும் குறிப்பிடப்பட்டது. மேலைத்தேய மரபில் இவை Sacred Magic, Black Magic என்று முறையே குறிப்பிடப்படும்.[3]

படிமங்களையும், குறியீடுகளையும் உருவாக்கி அவற்றைக் கையாள்வதன் வாயிலாக பயத்துக்குரிய மூலகங்களை விரட்டவோ வசப்படுத்தவோ முடியும் என்பது கிராமிய உளவியல் மரபுகளிலே பின்பற்றப் பட்டது. மலர்கள், இலைகள், தண்டுகள், மூலிகைகள், பறவைகள், விலங்குகள், வேறுபட்ட மணங்கள் முதலி யவை குறியீடுகளாகப் பயன்படுத்தப்பட்டன.

பயத்திலிருந்து விடுபடும் உளவியல் உபாயங்கள் தமிழரின் சமூக நிரலமைப்புக்கேற்றவாறு இரண்டு கிளைகளாகப் பிரிந்து சென்றன. சமூக நிரலமைப்பின் உயர் நிலையில் வாழ்ந்தோர் மந்திரம், சடங்கு, கட்டுக் காவல் முதலியவற்றைத் தமது தொழில் முறைகளில் இருந்து பிரிந்த ஒருவித அந்நியமயப்பட்ட நிலையிலே பயன்படுத்தினர். சமூக நிரலமைப்பின் தாழ்நிலையில் வாழ்ந்தோர் மந்திரம், சடங்கு, முதலியவற்றைத் தமது வாழ்க்கைத் தொழிற்பாடுகளோடு இணைந்தவகை யிலும், வேறுபடுத்தமுடியாத நிலையிலும் பயன் படுத்தினர்.

அச்சம் தவிர்க்கும் கூத்துக்களில் இந்த வேறு பாடுகளை மேலும் காணலாம். சமூக நிரலமைப்பின் தாழ் நிலையில் இருந்தோர் தமது உளவியல் சார்ந்த தேவைகளை நிறைவேற்றும் பொருட்டுத் தாமே கூத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஆடினர். ஆனால் அடுக்கமைப்பின் உயர் நிலையில் வாழ்வோர் கூலிக்கு ஆட்களை அமர்த்திக் கூத்தாடுவித்தனர். இந்நிகழ்ச்சியானது சமூக முரண்பாட்டை நேரடியாகச் சுட்டிக்காட்டும் நிகழ்ச்சியாகவுள்ளது.

இவற்றின் காரணமாகக் கூத்துக்களும், அவற்றினால் பெறப்பட்ட உளவியற் சுகமும் நிரலமைப்பின் தாழ்நிலை மக்களிடத்து ஆழ்ந்தும், பரந்தும், கூடிய வினைத்திறனுடனும் வேரூன்றியிருந்தன. நிரலமைப்பின் உயர் நிலையில் இருந்தோர் மத்தியில் அவை வெறுமனே பொழுதுபோக்கும் பண்புடையனவாகவும், மேலோட்டமான உளவியல் சார் பயன் தருபவையாகவும் அமைந்தன.

தமிழர் மரபில் பயத்திலிருந்து விடுபடவைக்கும் திட்டமிட்ட விளையாட்டுக்களில் கழங்கு விளையாட்டும் ஒன்றாகும். கம்பராமாயணத்தில் 'கழங்கு பயில் மங்கையர்' (பாடல் 834) என்ற தொடர் இடம்பெறுதல் இந்த விளையாட்டின் தொன்மையை ஒரு வகையிலே எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் இந்த விளையாட்டின் அழகியற் பரிமாணங்கள் சுட்டிக்காட்டப்பட்ட அளவிற்கு உளவியற் பரிமாணங்கள் பழந்தமிழ் இலக்கியங்களிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை.

கிராமிய மரபில் இதன் உளவியற் பரிமாணங்கள் நோக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். கழங்கு விளையாடும்பொழுது நிகழும் உடலியக்க அசைவுகளும், முகமலர்ச்சியும் நேர்விசை கொண்டதாக இருக்குமாயின் அந்த விளையாட்டு பயன் பொருந்தியதாகக் கருதப்பட்டது.[5]

பயம் நீக்கும் பொருட்டுப் பயன்படுத்தப்பட்ட இன்னொருவகை விளையாட்டு, பந்தாடல், அல்லது கந்தாடல் எனப்பட்டது. துணியாலும், நூலாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்து வரிந்து கட்டப்பட்டது. பந்தை ஏந்துதல், விரட்டி யடித்தல் என்ற இரு தொடு தளங்களில் இவ் விளை யாட்டு நிகழ்ந்தது. 'ஏந்தி வெல்லல்' என்பதில் நன்மை களால் உடலும் உள்ளமும் ஊட்டம் பெற்றன என்ற நம்பிக்கை நிலவியது. பந்தை விரட்டியடிக்கும் பொழுது தீமைகளும், ஊறுகளும் உதைத்துத் தள்ளப்படுகின்றன என்ற உளவியற் கருத்தேற்றம் தரப்பட்டது. பந்தாடும் பொழுது பாடல் பாடி உடல், உள, மனவெழுச்சி இயக்க ஆட்சிகளை ஒன்றிணைத்தலும், சமநிலைப் படுத்தலும் மேற்கொள்ளப்பட்டன. சிலப்பதிகாரத்தில் பந்தாடிய சிறுமிகள் பாடிய 'கந்துகவரி' பற்றிய செய் திகள் இடம்பெற்றுள்ளன.

உள அழுத்தங்களின் வேறுபாடுகளுக்கேற்றவாறு பந்தின் நிறமும் பார்ப்போரின் உள்ளங்களில் வேறு படமுடியும் என்ற ஒரு கருத்து கம்பராமாயணத்தில் இடம்பெறுகின்றது.

"மை அரி நெடுங்கண் நோக்கம்
படுதலும் கருகி வந்து
கைபுகின் சிவந்து காட்டும்
கந்துகம் பலவும் கண்டார்" (பாடல் 495).

பந்து கருமைபடத் தெரிதலும் பின்னர் செம்மை பட்டுச் சிவந்து நிற்றலும் இந்தப் பாடலிலே சுட்டிக் காட்டப்படுகின்றது.

பயம் நீக்கும் உளவியல் விளையாட்டுக்களில் இன்னொரு வகை "சிறுவிலங்காடல்" என்று குறிப் பிடப்படும். இது கிராமிய வழக்கிற் 'பட்டியாட்டு' எனப்பட்டது.[6] ஆட்டுக்குட்டி, பசுக்கன்று முதலியவற் றுடன் ஓடுதலும், மறித்து நிறுத்துதலும், துரத்துதலு மாக இந்த விளையாட்டு நிகழும். கடற்கரைப் பண் பாட்டில் இவ்வகை விளையாட்டு 'அலவன் ஆடல்' என்று குறிப்பிடப்பட்டது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரைப் பகுதிகளில் நண்டுகளை வளைக்குள் செல்லவிடாமல் அங்குமிங்கும் துரத்துதல் 'அலவன் ஆடல்' ஆயிற்று. இந்த விளையாட்டுப் பற்றிய செய்திகள் அகநானூறு, குறுந்தொகை முதலியவற்றில் இடம் பெறுகின்றன.

விலங்குகளைத் துரத்தும் பொழுது அவை பயத்துக்கும் தவிப்புக்கும் உள்ளாகின்றன. துரத்துபவரது பயம், துரத்தப்படும் விலங்கின் பயம் ஆகியவை இணையும்பொழுது பயம் + பயம் = துணிவு ஏற்படும் உளவியல் தோற்றப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பயப்படுபவர் இன்னொரு பயப்படுபவரைக் காணும் பொழுது ஒருவித உளவியல் திருப்தி பெறுதல் நாளாந்த அனுபவங்களாகவுள்ளன.

தமிழர் மரபில் பயம் நீங்கும் உளவியல் உபாயங்களாகப் பாவை செய்தலும், அவற்றிற்கு அணிகலன்கள் பூட்டுதலும் பாவைகளுடன் விளையாடுதலும், பாவைக்கூத்து நிகழ்த்துதலும் பயன்படுத்தப்பட்டன. மேலைப்புல நவீன உளவியலாளரும் இவ்வகை உபாயங்களை இன்று பயன்படுத்துகின்றனர். குறுந்தொகை, திருவெம்பாவை, திருப்பாவை முதலியவற்றில் பாவை விளையாட்டு, பாவை நோன்பு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பொம்மை விளையாட்டு, 'வண்டலயர்தல்' என்ற தொடரால் பண்டைய தமிழ் இலக்கியங்களிலே சுட்டிக்காட்டப்படுகின்றது.

கிராமிய மரபில் இது 'பாவை இணக்கல்' எனப்பட்டது.[7] பாவைகளைச் செய்யும்பொழுது ஒவ்வொருவரதும் உள இயல்புகள், மனவெழுச்சிகள் என்பவை பாவைகளில் ஏற்றப்படுகின்றன. உள்ளத்தின் தெறிப்பும், மனவெழுச்சிகளின் வெளிக்காட்டலும் அங்கே இடம்பெறும். ஆழ்மனத்தில் அமுங்கிய பயத்தை வெளிக்காட்டும் பொழுதும் புறக்காட்சிப்படுத்தும் பொழுதும் பயத்தின் அழுத்தங்கள் நீங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம் நீங்கும் பிறிதொரு நடவடிக்கையாக 'படம் கீறல்' கையாளப்பட்டது. இது 'படம்போடல்' என்றும் கூறப்பட்டது.[8] பயத்தினால் தாக்கப்பட்டவரைப் படம் வரையுமாறு தூண்டும்பொழுது அவரது பயம் புறநிலைப்படுத்தப்பட்டுச் சுகம் காணும் அனுபவம் பெறப்பட்டது. தோல், சீலை, பலகை, பானை மேற்பரப்பு முதலியவை படம் வரைவதற்குப் பயன்படுத்தப்பட்டன. கொக்குவிலில் வாழ்ந்த ஒரு வைத்தியர் படம் வரையப்பட்ட பானைகளைச் சேகரித்து வைத்திருந்ததாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.[9]

பயம் போக்கும் ஒரு நடவடிக்கை பயப்படுபவர் மீது படங்களை வரைதலாகும். இது 'பச்சை குத்துதல்' எனப்பட்டது. இதிலும் சமூக நிரலமைப்பின் செல்வாக்கு இடம்பெற்றது. நிரலமைப்பில் உயர்ந்தோர் தம்மீது தெய்வ வடிவங்களை வரைந்தனர். நிரலமைப்பின் அடிமட்டங்களில் உள்ளோர் தமது உடல் மீது பறவைகளையும் விலங்குகளையும் வரைந்தனர்.

இவ்வாறாக தமிழர் மானுடவியலிலும் உளவியலிலும் பயம் போக்கும் நடவடிக்கைகள் பரவலாகக் காணப்பட்டாலும், சமூக நிரலமைப்பின் கோலங்கள் அவற்றினுள்ளே பதிவுகளாக இருத்தலையும் விளங்கிக் கொள்ள முடியும்.

அடிக்குறிப்புகள்:

1 Robert Schachted and Carole Spearin McCauley, *When your child is afraid* Simon and Schuster, London, 1988, p. 22.
2. கள ஆய்வு, இணுவில், 21-03-93
3. Francis King, *Magic*, Thames and Hudson, London, 1972, p. 12
4. கள ஆய்வு, இணுவில், 22-03-93
5. கள ஆய்வு, கந்தரோடை 25-03-93
6. மேலது
7. கள ஆய்வு, கொக்குவில் 30-04-93
8. மேலது
9. மேலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்றுப் பதிகை

பொதுவான நினைவு இருப்புகள், மரபுகள், விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், வளர்ப்பு முறைமை, கல்வி முறைமை என்பவற்றினூடாக ஒருவர் உருவாக்கப் படும்பொழுது உள்ளார்ந்த தேவையாகவும் (Inner Necessity), புறம்சார்ந்த திணிப்பாகவும் (Outer Compulsion) பற்றுப் பதிகை (Sentiment) தோன்று கின்றது.

பரந்த பொருள் நிலைதழுவியதாகப் பற்றுப் பதிகை முகிழ்த்தெழுகின்றதென விளக்கப்படுகின்றது. தமிழ் இலக்கிய மரபிற் பின்வரும் இயல்பினதான பொருள் நிலைக் கட்டுக்கோப்பினைக் காணமுடி கின்றது.

"தெய்வ முணாவே மாமரப் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"

(தொல். 967)

என்றவாறு பொருள்நிலைப் பகுப்பாய்வு தொல்காப் பியத்திலே சுட்டிக்காட்டப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச் செயல்முறைகளின் வழியாகத் தோன்றும் 'நாம்' என்ற உணர்வு, சமூகப் பாத்திரங்களை ஏற்கும் உணர்வு, தங்கியிருத்தல் உணர்வு (Dependency Feeling) என்ற மூன்று கூறுகளும் ஒன்றிணைந்த வகையில் பற்றுப் பதிகையை உண்டாக்குவதிலே பங்கேற்கின்றன.[1]

பற்றுப்பதிகையானது சமூகப் பொது நோக்கங்களை முன்னெடுக்கத் துணைசெய்கின்றது. பொது நோக்கம் கொண்டவர்கள் அமரும் இடம் கிராமிய மரபிலே 'திண்ணை' எனப்பட்டது. 'திண்ணைப் பள்ளிக்கூடம்', 'திண்ணை ஒழுக்கம்', 'திண்ணை வளர்ப்பு' போன்ற தொடர்கள் ஒத்த நோக்கம் கொண்டவர்களைச் சுட்டிக்காட்டும் தொடர்களாக விளங்கின.[2]

தமது இருப்பில் என்ன இருக்கின்றது என்பதும், தாம் எவற்றின் வாரிசாக இருக்கின்றார்கள் என்பது மான உணர்வுகள் பற்றுப் பதிகையைத் தூண்டுகின்றன. இந்நிலையில் 'இரத்த உறவு', 'சொந்தம்' என்ற தொடர்புகளோடு வாழிடம், தொழிற்களம், இடத் தொடர்புகள் முதலியவை பற்றுப் பதிகையில் செல்வாக்குச் செலுத்துதல் தமிழர் மரபிலே காணப்படுகின்றது. இதற்குரிய பிறிதொரு காரணம் பற்றுப் பதிகை என்ற உள நிலையானது மிகைவளங்களுடன் (Surplus Resources) தொடர்புடைய தோற்றப்பாடாக இருத்தலாகும். இந்நிலையிலே குடும்பம் சார்ந்த பற்றுப் பதிகை, பொருள் சார்ந்த பற்றுப் பதிகை என இரு பிரிவுகள் ஆராயப்படுதல் உண்டு. சமூக உளவியல் ஆய்வுகளிலே பொருள் சார்ந்த பற்றுப் பதிகை அதிக வலுவுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. பாரம்பரியமான தமிழ்க் கிராமங்களிலே சொத்துரிமை என்பது தனி மனிதரிடம் குவியப்படுத்தப்படாது குடும்பம் என்ற அலகிடமே குவிக்கப்பட்டிருந்தது.[3]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் நிகழ்ந்த கல்வியும் சமூக அசைவியக்கங்களும் பற்றுப்பதிகைகளிலே மாற்றங்களை ஏற்படுத்தலாயிற்று. 'பிணைக்கும் சமூக அலகு'களைக் காட்டிலும் 'விடுபடும் சமூக அலகு'களுக் குரிய செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறலாயிற்று. போட்டி நிலைக்குரிய மத்தியதர வகுப்புப் பற்றுப் பதிகை (Competitive Middle class Sentiment) தோன்ற லாயிற்று. புதிய கல்விச் செயற்பாடுகள் இவற்றுடன் இணைந்தவகையிலே வளரத் தொடங்கின.

போட்டி நிலைமைகள் தோன்றுவதற்கு முற் பட்ட கிராமிய வாழ்வில் 'குழுமப்பட்டி நிலைப் பற்றுப் பதிகை' (Herd Sentiment) நிலவியது. சடங்கு கள், மரபுகள், வழிபாடுகள் முதலியவற்றைப் பின்பற்று வதன் வாயிலாக மனிதருக்கிடையே உறவுகள் பலமடைந் திருந்தன. புதிய சமூக மாற்றங்களின் மத்தியில் இவ்வாறான பின்பற்றல் பகுத்தறிவற்றதென்றும், கண்மூடித்தனமானதென்றும் நோக்கப்பட்டன. 'பட்டிக் காடு' என்ற வழக்கு இதன் பின்புலத்தில் வழங்க லாயிற்று. ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் 'பட்டிக் காடு' என்ற வழக்கு தமிழர் உளவியலில் வலுப்பெற வில்லை. ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் பாரம்பரிய மான பட்டினங்கள் காணப்பட்டாலும் அவை கிராமிய விழுமியங்களை மீளவலியுறுத்தும் பற்றுக்கோடுகளைக் கொண்டிருந்தன.

சமூகத்திலே உராய்வுகள் எதிர்நோக்கப்படும் பொழுது, குழுமப்பட்டி நிலைப் பற்றுப் பதிகைகள் விரைந்து தொற்றிப் பரவும் (Emotional Epidemic) விசை கொண்டதாகச் செயற்படும். ஆறுமுகநாவலர் காலத்துச் சமூக நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தால் இவ்வகைத் தோற்றப்பாடுகளைக் காணமுடியும். அந் நிலையிற் பற்றுப் பதிகையினையும், மனவெழுச்சி விசைகளையும் ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகள் ஆறுமுக நாவலரால் மேற்கொள்ளப்பட்டன. உளவியல் பற்றுப் பதிகையானது நேரடியான வலியுறுத்தலை (Direct



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Enforcement) உருவாக்குகின்றது. அந்நிலையில் அவற்றின் மீது அறைகூவல் விடுக்கப்படும்பொழுது அது அதீத மனவெழுச்சிகளைத் தூண்டும். உடல்வலுப் பிரயோகமும் அதனுடன் இணைந்து செயற்பட இடமுண்டு.

பற்றுப் பதிகைகள் சமூக மாற்றங்களின்பொழுது நேர்விசையாகவோ எதிர்விசையாகவோ செயற்பட முடியும். மாற்றுவழிகளும் புதிய வழிகளும் முரணாக அமையும்பொழுது பற்றுப் பதிகைகள் எதிர்விசைகளாகத் தொழிற்படும். கிராமிய மரபில் இது 'வில்லங்கம்' எனப்படும். நேர்விசைகளும் எதிர்விசைகளும் சமூக உராய்வுகளை ஏற்படுத்துதல், சமூக உராய்வுகளைத் தடுத்தல் என்ற இரு கோணங்களிலே செயற்படமுடியும்.

பற்றுப் பதிகைகள் அவற்றோடிணைந்த வேறு பற்றுப் பதிகைகளைத் தோற்றுவித்தல் 'பெருக்கநிலை' என்று குறிப்பிடப்படும். இவ்வாறான பெருக்கநிலையானது கிராமிய மரபில் 'குட்டிபோடல்' எனப்படும். சொத்துக்களை அடிப்படையாகக்கொண்டு வளரும் பெருக்கநிலை 'சொத்துப்பித்து' அல்லது 'பண்டப்பித்து' என்று கூறப்படும். எவ்வகையான பற்றுப் பதிகைகளோடும் 'பித்து' என்ற எண்ணக்கரு இணைத்துப் பயன்படுத்துதலைக் கிராமிய மரபுகளிலே காணமுடியும்.

மிகக் குறைந்த அளவு பற்றுப் பதிகைகளைக் கொண்ட ஆளுமைபடைத்தோர் 'தற்காலி'கள் என அழைக்கப்பட்டனர். கிராமியச் சடங்குகளில் இருந்து இவர்கள் ஒருவகையில் ஒதுக்கியவர்களாக விளங்கினர்.[5]

**Foot Notes:**

1. R. M. Maciver and Charles H. Page, Society - An Introductory Analysis, Macmillan & Co, Ltd, London, 1962, pp 292-3.
2. கள ஆய்வு, புத்தூர்.
3. கள ஆய்வு, நீர்வேலி.
4. மேலது.
5. மேலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் பற்றிய பகுப்பாய்வு

ஆழ்ந்த சிந்தனைகளோடும் நடத்தைகளோடும் செறிவுமிக்க அனுபவங்களாக அமையும் கனவுகள் தமிழ் மக்களின் அறிகையில் நீண்ட பதிவுகளாக இருந்து வந்துள்ளன. தமிழரின் பாரம்பரியமான கனவு பற்றிய அறிகைகள் சமூக மானுடவியல் ஆய்வுகளில் இருந்து புலப்படும் தொகுதிகளாகவுள்ளன. பின்வருவன தமிழரது பாரம்பரியத்திலே நிலவிய கனவு பற்றிய அனுபவங்களாகவுள்ளன:

அ) நித்திரையின்போது உடலிலிருந்து ஆன்மா விடு பட்டுச் சென்று, திரட்டிவரும் அனுபவங்களே கனவுகளாகும்.

ஆ) கனவு என்பது ஓர் ஆட்டக்களம் - அங்கு நடை பெறும் வெற்றி தோல்விகள் ஒருவரது உடலையும் உள்ளத்தையும் பாதிக்கும்.

இ) மறைந்திருக்கும் ஓர் ஆசிரியர் கனவிலே ஒவ்வொரு வருக்கும் கற்பிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) கனவு என்பது இறைவன் ஒவ்வொருவருடனும் தொடர்புகொள்ளும் இரவுப் பூஞ்சோலை.

உ) இனி நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை மூதாதையர் கனவுகளில் எழுதிக்கொண்டு வந்து கொடுத்து விட்டுச் செல்கின்றனர்.

தமிழ் மக்களின் சமூக வளர்ச்சிக்கும் கனவு களுக்கும் நேரடியான தொடர்புகள் காணப்படுகின்றன. குலங்களாக வாழ்ந்த காலத்தில் குலங்களுக்குரிய பல சின்னங்கள் வாழ்வுடன் இணைந்திருந்தன. நாகம், எருது, கருடன் முதலியவை குலக்குறிகளாக விளங்கின. தமது குலத்துக்குரிய சின்னத்தைக் கனவிலே காணுதல் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் வலிமைக்கும் தூண்டு கோலாகக் கருதினர்.

குலக்குறிகள் கூட்டு மனவெழுச்சியின் சின்னங்க ளாக அமைந்தன. படிப்படியாக அதன் வளர்ச்சியானது திரண்ட சிந்தனையாகவும், திரண்ட அனுபவங்களாகவும் உருவெடுத்தது. உலக அறிவுப் பரப்பில் இவ்வாறான ஒரு தோற்றப்பாட்டினை யுங் என்ற உளவியலாளர் கூட்டு நனவிலி உணர்வு (Collective Unconscious) என்று குறிப்பிட்டார்.[1]

இற்றைக்குச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துச் செம்பாட்டுமண் வளக் கிராமங்களில் தினை ஒரு முக்கியமான உணவுத் தானியமாக வளர்க்கப்பட்டு வந்தது. அக்காலத்தைய கனவுகளில் தினை ஒரு முக்கியமான குறியீடாக விளங் கியது. ஒரே இரவில் தினை தண்ணீரில் மூழ்குவதாகப் பலர் கனவு கண்டனர் என்றும், சில நாட்களுக்குப் பின்னர் பெருமழை சொரிந்து ஏழாலை, குப்பிழான், உரும்பிராய், இணுவில், கட்டுவன் பகுதிகளில் தினை நீரில் அமிழ்ந்ததென்றும் அக்கிராமத்து மக்கள் மத்தி யிலே செவிவழிச் செய்தி உண்டு. அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில் அபரிமிதமான தினை விளைச்சல்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. இன்றும் இப்பகுதி மக்கள் தினையைக் கனவிலே காண்பது நல்லதென்று கருதுகின்றார்கள்.[2]

யாழ்ப்பாணத்துத் தென்மராட்சிப் பகுதிகளில் பனையும், தென்னையும் முக்கியமான நெடும் பயிர் களாகவுள்ளன. இம்மரங்களைக் கனவிலே காண்பது நல்லது என்றும், இவை முறிவடையக் கண்டால் தீங்கானது என்றும் மக்கள் நம்புகின்றனர்.[3]

உளவியலாளர் யுங் தமது ஆய்வுகளிலே 'தொல் வகைகள்' (The Archetypes) என்ற எண்ணக்கருவை முன்மொழிந்துள்ளார். கனவுகள் பற்றிய ஆய்விலே 'தொல்வகைகள்' என்பது புதிய புலக்காட்சிகளை ஏற்படுத்தியுள்ளன. கூட்டு மனவெழுச்சிகளில் இருந்து கிளர்ந்தெழுகின்ற வலுவும் விசையும் கொண்ட பலம் மிக்க உணர்வுகளின் வடிவங்களே 'தொல்வகைகள்' என்று குறிப்பிடப்படும். இவை, மக்டூகல் என்ற உளவிய லாளர் குறிப்பிடும் இயல்பூக்கம் (Instinct) என்பவற்றி லிருந்து வேறுபடும். பசி, தாகம், பாலியல் விசை போன்றவை இயல்பூக்கங்களாகக் கருதப்படும். ஆனால் தொல்வகைகள் என்று கூறும்பொழுது அவை சிந்தனை - உணர்வு என்பவற்றுடன் பின்னிப்பிணைந்த விசை கொண்ட படிமங்களைக் (Image) குறிப்பிடும். ஐதிகங் களிலும், கனவுகளிலும், கலை இலக்கியங்களிலும் படிமங்கள் விசைகொண்டு செயற்படும்.

வைரம், உறுதி, நீடிப்பு, பல்துறைப் பயன்பாடு என்பவற்றைக் கனவிலும் கலையாக்கத்திலும் குறிப் பிடுவதற்குத் தமிழர் பண்பாட்டின் ஆழ்ந்த படிமமாகப் 'பனை' குறிப்பிடப்படுகின்றது.

மனித உடற்கட்டு அமைப்பு 'வன்கட்டமைப்பு', மென்கட்டமைப்பு' என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். பூர்விக காலத்தில் வன்கட்டமைப்பும், மென்கட்டமைப்பும் ஆண், பெண் வேறுபாடுகளோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடையதாக இருக்கவில்லை. வன்கட்டமைப்பு ஆண்களிடமும் காணப்பட்டது; பெண்களிடமும் காணப் பட்டது. பால்வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு தொழிற் பிரிவுகள் வளர வன்கட்டமைப்பு ஆண்களுக்கு உரிய தென்றும், மென்கட்டமைப்பு பெண்களுக்கு உரிய தென்றும் பாகுபடுத்தப்பட்டது. மானுடவியற் கண் ணோட்டத்திலே தமிழர்களது கனவுகளை ஆராய்ந்து பார்த்தால் 'வன்கட்டமைப்புப் பாரம்பரியம்' ஆண் களுக்கும் பெண்களுக்கும் பொதுவானதாகவே கையளிக் கப்பட்டு வருகின்றது. கனவுகளில் ஆண்கள், பெண்கள் முதலியோர் உடற்பலத்துடன் காணப்படுதல் நல்லன வற்றுக்கு அறிகுறியாகக் கொள்ளப்படுகின்றது. சிறப் பாக யாழ்ப்பாணத்துக் கடல்வளக் கிராமங்களில் இந்த நம்பிக்கை காணப்படுகின்றது.[4]

உடல் உறுதியானது பாலியற் பலத்துடனும் தொடர்புடையது. கனவுகள் பற்றிப் பகுப்பாய்வுசெய்த சிக்மன்ட் பிராய்ட் மேற்கொண்ட ஆய்வுகள் இச்சந்தர்ப் பத்தில் ஒப்புநோக்கத்தக்கவை. உந்தல் ஆசைகளின் நிறைவேற்றுகை (Wish Fulfilment) கனவுகளில் நிகழ்வதாக சிக்மன்ட் பிராய்ட் கருதினார். சிறப்பாகப் பாலியல் உந்தல் ஆசைகளின் நிறைவேற்றுகைக்குக் கனவுகள் துணைபுரிகின்றதென்பது அவரது கருத்து. மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது கனவுகளுக்கும் நிறைவேறாத பாலியல் விருப்பங்களுக்குமிடையே தொடர்புகள் காணப்படாவிடினும் ஆழ்ந்து பார்க்கும் பொழுது, அவற்றுடனான தொடர்பு வேர்களை எளிதில் இனங்கண்டுகொள்ளமுடியும் என்பது அவரது முன்மொழிவாக அமைந்தது. நேரடியாகப் பாலியல் அனுபவங்களோடு தொடர்பில்லாத கனவுகளில் இடம் பெறும் குறியீடுகளை ஆராய்ந்தால் அவை பாலியலோடு தொடர்பு கொண்டுள்ளமை புலனாகும் என அவர் குறிப்பிட்டார்.[5]

இவற்றோடு தொடர்புடைய கனவின் 'நிகழ் செயல்' (Dream Work) பற்றியும் பிராய்ட் ஆராய்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். நிகழ்செயல்முறை என்பது உளச்சீர்ச் செயல் முறை (Mechanism) என்றும் குறிப்பிடப்படும். சமூகத் தால் ஏற்றுக்கொள்ளப்படாத பாலியல் உணர்வுகள் நனவிலி உள்ளத்திலே அழுத்தி வைக்கப்படுகின்றன. அவற்றைத் தன்னிலையில் (Self) ஏற்றுக்கொள்வதற் குரிய உளச்சீர்ச் செயல் கனவில் நிகழ்வதாக அவர் விளக்கினார். தமிழர் மானுடவியல் நிலைக் கனவுகளை ஆராய்ந்து பார்க்கின் பிராய்ட்டின் இக்கருத்துக்களோடு இணைந்தும் முரண்பட்டும் செல்லும் பெயர்ச்சிகளைக் காணமுடியும். பிரச்சினைகளை இனங்காண்பதும், பிரச் சினைகளுக்குத் தீர்வுகாண்பதுமான நிகழ்செயல் கனவில் இடம்பெறுகின்றதென்பது எமது பாரம்பரியத்தின் கனவு பற்றிய ஓர் அணுகுமுறையாக அமைந்தது. இவ் வாறான கனவு 'முழுக்கனா' என்றும் பிரச்சினைகளை இனங்காண முடியாததும், தீர்வுகளை எட்டமுடியாதது மான கனவு 'குறைக்கனா' என்றும் பேச்சுவழக்கில் குறிப்பிடப்படும்.[6]

கனவு பற்றிய ஆய்வில் இன்னொரு பரிமாணம் அட்லரின் வலுவுந்தற் கருத்தினால் (The Urge to Power) எடுத்துக் கூறப்படுகின்றது. தாழ்வு நிலைச் சிக்கல், உயர்வுநிலைச் சிக்கல் என்பவற்றின் விளை வாகக் கனவுகள் தோன்றுகின்றன என்றும் அவற்றோடு தொடர்புடைய குறியீடுகளே கனவிலே குமைந்து எழுகின்றன என்றும் அவர் கருதினார். கனவின் வழி யாக ஒவ்வொருவரும் தாழ்வு நிலைச் சிக்கல் வழி யாகவோ, உயர்வுநிலைச் சிக்கல் வழியாகவோ வலுவுந் தல்களை அல்லது அதிகாரப் பெறுகைகளை அனுபவிக்க முயல்கின்றனர் என்பதும் அவரது விளக்கமாக அமைந் தது.[7] ஆழ்ந்து பார்க்கும்பொழுது பிராய்ட், அட்லர் ஆகியோரது கருத்துக்களிடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆசைகளின் நிறை வேற்றுகைகளுக்குக் கனவு ஒரு பலம்பொருந்திய உளத் தளமாக அமைவதே இருவரிடத்தும் காணப்படுகின்ற பொதுமைப்பாடு ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மரபில் கனவுகள் பற்றிய கலந்துரையாடல் கிராமியக் கதையாடலில் சிறப்பிடம் பெற்றிருந்தது. திண்ணை, குளக்கரை, கிணற்றடி, கோயிற் கூடல் மரம் முதலிய களங்களிலே காலைக் கதையாடல் நிகழ்ந்தது. ஒவ்வொருவரும் தமது வயதுக்கு மூத்தோரிடம் தாம் கண்ட கனவுகள் பற்றிக் காலையிலே கூற வேண்டும் என்ற கருத்து வெளிப்பாட்டு மரபு காணப்பட்டது. அவ்வாறு கூறும்பொழுது மூத்தோரும் பெரியோரும் கனவின் பலனைக் கூறுவர். கனவிலும் கூடிய உள அழுத்தம் 'கனவுப் பலன்களுக்கு'க் கொடுக்கப்பட்டது. இதனைச் சற்று விரிவாக நோக்கலாம்.

வாழ்நிலை அனுபவங்களில் இருந்து கனவுகள் முகிழ்த்தெழுந்து காட்சிப் படிமங்களாக வருகின்றன. அனுபவங்களுக்குக் கனவில் மீள்வடிவங்கள் கொடுக்கப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக கனவில் ஒரு விதமான 'கற்றல்' நிகழ்த்தப்படுகின்றது. எதிர்காலத்தின நடத்தைகளை ஒழுங்கமைப்பதற்கான முன்னேற்பாடான கற்றல் நிகழ்கின்றது. முன்னைய உளத்தாக்கங்களில் இருந்து விடுபடுவதற்குக் கனவுகளிலே உருவாக்கப்படும் அனுபவங்கள் பின்னைய நடத்தைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. கனவின் இந்த உளவியற் பரிமாணங்கள் தமிழர் மானுடவியலில் ஆழ்ந்து வேரூன்றி நின்றது.

கனவை உளவியற் சுகத்திற்கும் பிற்கால நடத்தைச் சீர்படுத்தலுக்கும் கையாளும் உபாயம் தமிழ் மரபில் 'கனவு ஒத்தடம்', 'கனவுப்பரிகாரம்', 'சுகக் கனவு' போன்ற தொடர்களால் எடுத்துக் கூறப்படும். உள்ளத்தை உறுத்தும் ஒரு சம்பவம் கனவிலே மீண்டும் மீண்டும் வரும்பொழுது உள்ளம் தாக்கங்களுக்குப் பழக்கப்படுகின்றது. தீர்க்கப்படாத பிரச்சினைகள் கனவுகளிலே மீண்டும் மீண்டும் காட்டப்படும். தீர்வுகள் எட்டப்பட்டதும் அவை தொடர்பான கனவுகள் மெல்ல மறைந்து விடும். குழந்தைப் பருவத்துக் கனவுகள் பல கட்டிளமைப் பருவத்தில் மறைந்துவிடுகின்றன. கட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளமைப் பருவத்துக் கனவுகள் முதுமைப் பருவத்தில் மறைந்துவிடுகின்றன. இது 'அடியழிப்பு' என்ற தொடரால் எமது மரபிற் குறிப்பிடப்படுகின்றது.[8]

கருத்துமை(Ideation)யாக்கல் கனவுகளில் முன்னெடுக்கப்படுகின்றது. செயல் அனுபவங்கள் அற்ற நிலையில் உள்ளத்திலே நிகழ்த்தப்படும் கருத்து வடிவமைப்புச் செயற்பாடும், படிமமாக்கலும் 'கருத்துமைப் படுத்தல்' என்று குறிப்பிடப்படும். உண்மையான அனுபவங்களின்றி உளப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குக் கனவிலோ நனவிலோ நிகழ்த்தப்படும் ஓர் உள உபாயமாகக் 'கருத்துமையாக்கல்' அமையும். இதனை மேலும் விளக்கலாம்.

விழா ஒன்றினை நடத்துவதற்கு முன்னதாக ஒருவரது உள்ளத்திலே நடைபெறும் கற்பனைகள், முனைப்புக்கள், கஷ்டங்கள் பற்றிய அறிகை முதலியவை கருத்துவமையாக்கத்தில் இடம்பெறுவதை ஓர் உதாரணமாகச் சுட்டிக் காட்டலாம். இந்தச் செயல்முறைகளின் வழியாக நடைபெறவிருக்கும் விழாவில் ஏற்படக்கூடிய வழுக்களைத் தவிர்த்துக் கொள்ளவோ, குறைத்துக் கொள்ளவோ முடியும். ஆனால் நனவு நிலையில் நிகழும் கருத்துமைக்கும், கனவு நிலையில் நிகழும் கருத்துமைக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. நனவு நிலையில் நிகழும் கருத்துமைகள் தருக்க நிலைப்பட்டதாயும், பகுத்தறிவு முனைப்புடனும் உருவாக்கப்படும். ஆனால் கனவு நிலையில் உண்டாகும் கருத்துமைகள் ஒழுங்கு படுத்தப்படாத ஊற்றாகவும், தன்னியக்கமாகவும் ஒருவித நாடகப் பாங்கானதாகவும் அமையும். சில சமயங்களில் கனவு நிலையில் எட்டப்படாத கருத்துமைக் காட்சிகள் நனவு நிலையில் எட்டப்படும். அதுவே கனவின் உளவியற் பலமாகக் கருதப்படும். தமிழர் மானுடவியலிலும் உளவியலிலும் இந்த பலம் பொருந்திய கனவு நிலையானது 'செங்காட்டல்' என்ற தொடரால் அழைக்கப்படும்.[9] செங்காட்டல் என்பது காட்சி வடிவப் படிமமாக அமையும். செங்காட்டல் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்முறையானது மிகையான மனவெழுச்சிகளைத் தூண்டக் கூடியதாக இருத்தலும் அதன் தனிச் சிறப்பாகக் கொள்ளப்படும்.

நனவு நிலையில் உளக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால், கனவில் மிகையான மனவெழுச்சிகள் தூண்டப்படக்கூடியதாகவுள்ளன. தூண்டப்படும் மனவெழுச்சி கனவிலே உருவாக்கப்படுகின்றது.

மனிதருக்குரிய பிரச்சினைகள் அகவயப் பிரச்சினைகள் என்றும், புறவயப் பிரச்சினைகள் என்றும் பாகுபடுத்தப்படும். புறவயப் பிரச்சினைகள் நனவு நிலை சிந்தனையுடன் கூடிய தொடர்புகளைக் கொண்டிருக்கும். அகவயப் பிரச்சினைகள் கனவுகளுடன் கூடுதலான தொடர்புகளைக் கொண்டிருக்கும். ஆனால் அகவயப் பிரச்சினைகளுக்கும் புறவயப் பிரச்சினைகளுக்குமிடையே தொடர்புகள் உண்டு. தமிழர் மானுடவியலில் 'தற்கனவு' 'புறக்கனவு' என்ற பாகுபாடுகள் நிலவின. தமது அனுபவங்களையும் தமக்கு நிகழப் போவதையும் காணுதல் 'தற்கனவு' எனப்படும். பிறருக்கு நிகழப்போவதைக் காணுதல் 'புறக்கனவு' என்றும் கொள்ளப்பட்டது.[10]

உள நெருக்குவாரங்களிலிருந்து ஒருவர் படிப்படியாக மீண்டு உளச்சுகம் பெறும்பொழுது கனவிலும் ஒருவித நேர் அபிவிருத்தி காணப்படும். மறுபுறம் சாதாரண நிலையில் இருக்கும் ஒருவர் சந்தர்ப்பவசத்தால் உள நெருக்குவாரங்களுக்கு உள்ளாகும் பொழுது எதிர் அபிவிருத்தி ஏற்படும். நேர் அபிவிருத்தி நிலைக் கனவுகள் 'வடபாய்ச்சல்' என்றும், எதிர் அபிவிருத்திக் கனவுகள் 'தென்பாய்ச்சல்' என்றும் தமிழர் மானுடவியலிற் குறித்துரைக்கப்படும். வடபாய்ச்சற் கனவுகளில் உறுத்தல் நிலை படிப்படியாகத் தளர்வடைந்து செல்லும். கனவின் வடிவத்திலும், கட்டமைப்பிலும், அதன் உள்ளடக்கத்திலும் இந்த மாற்றம் ஏற்பட்ட வண்ணமிருக்கும். உதாரணமாகக் கோவிலுக்குச் செல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும்பொழுது எப்பொழுதும் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் தொடர்ந்து கனவுகளைக் கண்ட ஒருவர், பின்னர் கண்ட கனவுகளில் கோவிற் கதவுகள் திறக்கப்படுவதையும், அதன் பின்னர் தாம் செல்லும் பொழுதில் எல்லாம் அது திறந்திருக்கக் காணுதல் கனவில் நிகழும் நேர் அபிவிருத்தியாகும்.

கனவில் நடத்தல் (Somnambulism) என்ற தோற்றப்பாட்டினை உளவியலாளர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். உளத் தொழிற்பாடாக நிகழும் கனவானது உடலியக்க அசைவைச் செறிவுபடுத்தும் பொழுது இது நிகழ்கின்றது. நித்திரையில் நடத்தல் என்பது உளப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கான ஓர் இயக்கச் செயலாகக் கருதப்படுகின்றது. தன்னைத் தானே சீராக்கிக் கொள்வதற்கு ஒருவரது உள்ளத்திலே தோன்றும் சுய இயக்கமாகிய கனவு 'நடத்தல்' நிலைக்கு மாறும்பொழுது பல்வேறு பிரச்சினைகளை வருவிக்கும். பொதுவாகக் கனவுகளின் முடிவில் பிரச்சினைக்கு ஒருவித தீர்வு எட்டப்படும். தீர்வு எட்டப்பட முடியாத நிலையில் ஏற்படும் தாக்கமானது உடல் விசைகளை ஏற்படுத்தி நடத்தலில் ஈடுபடவைக்கின்றது.

கனவின் பிற்கூற்றில் உருவாகும் தீர்வு பற்றி பொதுவாக உளப்பகுப்பு உளவியலாளர் ஆழ்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை. ஆனால் 'பிற்கனவு பிசகு அறுக்கும்' என்ற தொடர் தமிழர் மானுடவியலிலும், உளவியலிலும் வழங்கப்பெற்று வருகின்றது. கனவின் பிற்பகுதியின் முக்கியத்துவத்தை மேலைநாட்டுக் கனவியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.[12]

முன்னைய அனுபவங்களை வைத்தே கனவுகளுக்கு வியாக்கியானம் கொடுக்கும் மரபு உலகெங்கிலும் காணப்படுகின்றது. இவற்றிலும் பல முரண்பாடுகள் எழுகின்றன. ஒருவருக்கு நன்மைகளைக் காட்டிய குறியீடுகள் வேறொருவருக்கு பாதகமான நிலைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஏற்படுத்தியுள்ளன. உதாரணமாக பாம்புகளைக் கனவிலே கண்ட சிலர் மறுநாள் அல்லது அதைத் தொடர்ந்து நன்மைகளை அனுபவித்துள்ளனர். சிலர் பிரதிகூலங்களை அனுபவித்ததாகக் கூறினர். இந்நிலையில் கனவின் வியாக்கியானம் தொடர்பான பொதுமைப்பாட்டை ஏற்படுத்தல் கடினமாகவுள்ளது.

கனவு பற்றி ஆராயும் உளவியலாளர் 'வெருள் கனவு' (Nightmare) என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். தமிழர் மானுடவியலில் இது 'நரி வெருட்டல்' என்று குறிப்பிடப்படும்.[13] உளவியல் தாக்கங்களுக்குள்ளான குழந்தைகளிடத்தும், சிறுவர்களிடத்தும் வெருள் கனவு தோன்றும். உளநல வீழ்ச்சிக்கு அது ஓர் அறிகுறியாகக் கொள்ளப்படும். பயங்கரமான கற்பனை விலங்குகள் (Monster) அல்லது துணை மனித வடிவங்கள் (Subhuman) அல்லது குரூரமான விலங்குகள் கனவிலே தோன்றிப் பயம் அல்லது வெருள் நிலையை ஏற்படுத்தல் வெருள் கனவு என்று குறிப்பிடப்படும்.

வெருள் கனவுகளிலே பின்வரும் தாக்கங்கள் பொதுவாக அனுபவிக்கப்படும்.

1. பயம் தூண்டப்படுதல்.
2. உடலின் மீது அழுத்தம் ஏற்படுதல் போன்ற உணர்வு.
3. மூச்சுத் திணறல் உணர்வு.
4. உடலை அசைத்து இயங்க முடியாத உணர்வு.
5. ஆதரவற்ற பதகளிப்பு உணர்வு.
6. தாக்கவரும் விலங்கை வெற்றிகொள்ள முடியாத பின்னடைவு உணர்வு.

இசைவாக்கம் செய்ய முடியாத முன்னைய உளத் தாக்கங்களுடன் இணைந்து வளரும் வெருள் கனவுகள் காண்போர் தொடர்புறு பயம் (Phobia) கொள்வோராயும் இருப்பர். தொடர்புறு பயத்திற்கு உதாரணங்களாக ஒடுங்கிய பாதைகளிற் செல்லும் பொழுது ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் பயம், உயரமான இடத்தில் நிற்றற் பயம், மூடிய அறைகளில் இருக்கப் பயம், தனிமையில் இருத்தலினால் ஏற்படும் பயம், இருள் பயம், கரிய பொருட்களைக் காணும் பொழுது ஏற்படும் பயம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

உடலில் உள்ள 'உந்தல்கள்' தொடர்பான பயமும் வெருள் கனவுகளை ஏற்படுத்தலாம். பசி, தாகம், பாலியல் உணர்வு, பாதுகாப்பு, அன்பு வேட்டல் முதலிய உந்தல்கள் தம்மிடத்தில் மிகையாகத் தொழிற்படுகின்றன என்ற பேதலிப்பு, அவற்றினால் தீங்கான விளைவுகள் ஏற்படும் என்ற பயம், முதலியனவும் வெருள் கனவுகளை ஏற்படுத்தும். குழந்தைகளிடத்துக் குற்ற உணர்வுகள் வளரத் தொடங்க வெருள் கனவும் சமாந்தரமாகத் தோன்றத் தொடங்கும். குழந்தைகள் நித்திரை செய்யும் இடத்தினை மாற்றுதல், பார்வை பார்த்தல், நித்திரைக்கு முன்னர் தெய்வக் கதைகளைக் கூறுதல் முதலியவை எமது கிராமங்களில் இன்றும் நிலவிவரும் வெருள் கனவுப் பிணி நீக்கல் உபாயங்களாகவுள்ளன.[14]

யதார்த்த வாழ்க்கையிலே சிறுவர்கள் வயதுக்கு மூத்தோரால் வெருட்டப்படும் பொழுதும், உடற்பலம் மிக்கோரால் கண்டிக்கப்படும் பொழுதும், ஏற்படும் உளத்தாக்கங்கள் வெருள் கனவுகளாக வளர்ச்சியடையும். வெருட்டியவர்களின் உறுத்தல்கள் வெருள் கனவின் குறியீட்டு வடிவங்களாகத் தோன்றும். வெருள் கனவின் வெளிப்பாடுகளாக நித்திரையிலே புலம்புதலும், சத்தமிடலும் ஏற்படும்.

வெருள் கனவுகளை முறியடிப்பதற்குத் தமிழர் மரபிலே பயன்படுத்தப்படும் சிறப்பு மிக்க உபாயமாகக் 'காவடியாட்டம்' பயன்படுத்தப்படுகின்றது. மனவெழுச்சிகளை உடல் அசைவுகளுடன் தொடர்புபடுத்தி வெளியிடுவதற்கும், மத்தளம், உடுக்கு, மேளம், பறை போன்ற ஒலிகளுடன் இணைத்து ஆடுவதற்கும் காவடியாட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான இயக்க வடிவமாக இருப்பதனால் உளச்சுகம் இலகுவிலே எட்டப்படுகின்றது. மயிற்பீலி, யாழி, வேல் போன்ற குறியீடுகள் காவடியில் இடம் பெறுவதனால் அவை நனவிலி உள்ளச் சுகங்காணலிலும் உதவி செய்வதாக நம்பப்படுகின்றது.

பஞ்சாங்க மரபில் கனவின் நற்பலன்கள், துர்ப் பலன்கள் என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. "சூரிய சந்திரர், மலை, கடல், ஆறு, நீர் நிறைந்த குளம், பூஞ்சோலை, தேவாலயம், அரண்மனை, தேவர், அரசர், குரு, பிராமணர், தந்தை, தாய், பிள்ளை, சுற்றத்தார், நண்பர், நல்லோர், வெள்ளாடை, வெண்பூமாலை அணிந்த பெண்கள், வேசி, பட்டத்து யானை, குதிரை, தேர், வாள் முதலிய ஆயுதம், ஆபரணம், புத்தகம், நிறைகுடம், சாமரை, வெண்குடை, கொடி, விளக்கு, சங்கு, மிதியடி, வெள்ளை நிறமுடைய எருது, பசு, மான், அன்னம், மயில், கோழி, இறைச்சி, இரத்தம், மலர், கள், சோறு, தயிர், வெண்ணெய், பால், நெல், உப்பு, மஞ்சள், கரும்பின் கட்டி, தேங்காய், எலுமிச்சம் பழம், தாம்பூல வர்க்கம், மாம்பழம், இனிய கனிகளை யுடைய மரம், தாமரைப்பூ, நீலோற்பலம், இவற்றைக் கனவிலே காணிற் செல்வம், வாழ்வு, சுகம் உண்டாம்."[15]

நியவாழ்வில் மகிழ்ச்சி தருபவை கனவில் சுகம் தரும் குறியீடுகளாகக் காட்டப்படல் பஞ்சாங்க மரபில் இடம்பெறுவதைக் காணலாம்.

"சூரிய சந்திரர், நட்சத்திரங்கள் மாறுபடச் செல் லுதல், நீர் வற்றிய ஆறு, வாவி, குளம், கிணறு முதலியன, இராட்சதர், பிசாசு, பூதம், கரியவஸ்திரம் உடுத்த கரிய ஆண் பெண்கள், அமங்கலி, கொலைஞர், சண்டாளர், பதிதர், இழி தொழிலோர், நிருவாணி, காவி வஸ்திரதாரி, மொட்டைத்தலையர், மயிர் விரித் தோர், யானை, புலி, கரடி, குரங்கு, பன்றி, முதலை, ஒட்டகம், எருமை, கழுதை, முயல், பனை, கரிய பசு, எருது, குதிரை, பாம்பு, காகம், கழுகு, பருந்து, தினை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாமை, குரக்கன், கொள்ளு, வரகு, கடுகு, பூசணி, இவற்றின் காய்கள், கம்பளம், இரும்புத்துண்டம், உடற்குறை, அங்கபங்கம், மயிர் களைதல், பல் விழல், மரம் முறிந்து விழல், கரிய வஸ்திரம், கரும் பூமாலை அணிதல், தேகத்தில் நெய், எண்ணெய் பூசுதல், மிருகங் களாற் கடிக்கப்படுதல், குழியில் விழுதலும் வழியறியா ததும், தியங்குதல், எழுதிய ஓலையை ஏற்றல், சிற்றுண்டி புசித்தல், மழை தூறுதல், தன் ஆபரணங்களைப் பிறர் அபகரித்தல், தூரதேசம் போனவர் பருத்து நனைந்து இருத்தல், எழுதிய ஓலையை ஏற்றல், விவாகம் நடை பெறுதல், தெற்கே கொண்டு செல்லப்படுதல், இவற்றைக் கனவிலே காணின் வறுமை, துன்பம், நோய், மரண பயம் உண்டாம்.[16] பஞ்சாங்க மரபில் கனவுகள் தொடர் பாகத் தரப்படும் வியாக்கியானங்கள் மேலை நாட்டு அணுகு முறைகளுக்கு வேறுபட்டுள்ளன. இவற்றிலே தமிழர் நிலைப்பட்ட கிராமிய நிலப் பிரபுத்துவ விழு மியங்களின் சாயல்களைக் காணலாம்.

தமிழ் மரபிற் கனவு என்பது நிகழப் போவதைக் காட்டும் குறியீடுகளைக் கொண்ட நித்திரைச் சிந்த னைக் கோலங்களாகக் கருதப்படுகின்றது. 'முற்சாமத் தில் கனா ஒரு வருடத்திலும், இரண்டாம் சாமத்திற் கனா ஆறு மாதத்திலும், மூன்றாம் சாமத்திற் கனா மூன்று மாதத்திலும், நான்காம் சாமத்திற் கனா ஒன் றரை மாதத்திலும், விடியற் காலத்திற் கண்ட கனா ஒரு வாரத்திலும் பலனைக் கொடுக்கும் என விளக்கப் படுகின்றது.

கனவு தொடர்பான பல்வேறு ஆய்வுகளைத் தொகுத்தும், தொடர்பு படுத்தியும் பார்க்கும்பொழுது 'கடப்பு உளவியலுடன்' அதனை ஒன்றிணைத்து ஆராய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

வரையறுக்கப்பட்ட ஐந்து புலன்களையும் மீறிய மேலதிக புலக்காட்சிப் பதிவுகளை (Extra Sensory Perception) கனவுகள் ஏற்படுத்துகின்றன என்பதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்துரைக்க வேண்டியுள்ளது. உலகக் கனவுகள் பற்றிய ஆராய்ச்சியில் தமிழர் கனவுகள் பற்றிய ஆய்வு பெரும் பங்களிப்புச் செய்வதாகவுள்ளது.

## References:


1. Cited, J. A. Hadfield, *Dreams and Nightmares*, Penguin, Books, Middlesex, 1973 pp. 38-40
2. Field Survey, Manjathady, Inuvil
3. Field Survey, Nunavil, Chavakachcheri.
4. Field Survey, Thumpalai, Point-Pedro.
5. Sigmund Frend, *The Interpretation of Dreams*, p. 260.
6. Field Survey, Palavodai, Uduvil.
7. Cited, J.A. Hadfield, op. cit, p.37.
8. Field Survey, Palavodai, Uduvil.
9. Field Survey, Manjathady, Inuvil.
10. Field Survey, Palavodai, Uduvil.
11. Field Survey, Thumpalai, Point_Pedro.
12. J A. Hadfield, op.cit. p.95.
13. Field Survey, Inuvil West, Inuvil.
14. Field Survey, Manjathady, Inuvil.
15. இ. வெங்கடேச ஐயர், இரகுநாதையர் பஞ்சாங்கம், கொக்குவில், 1995, U.28
16. மேலது.
17. சரசோதிமாலை - கனவுநூல், சோதிடப்பிரகாச யந்திரசாலை கொக்குவில், 1946, U.12


131094



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளப்பிணி

தமிழர் மரபில் உளப்பிணிக்கு அடிப்படைக் காரணியாக அமைவது 'அன்புக் குலைவு' என்பதாகும். அதாவது அன்பு வாழ்வின் திருப்திக்குறைவு (Dissatisfactions of the Love life) என்பது உளப்பிணிகளைத் தோற்றுவிப்பதற்கு அச்சாணியாக அமைகின்றது என்ற கருத்து கிராமிய மரபுகளில் ஆழ்ந்து வேரூன்றி நின்றது. இந்நிலையில் உளப்பிணி என்பதன் உருவாக்கம் சமூகத்தளமே என்ற சமூக உளவியற் பாங்கு மேலோங்கி நிற்பதையும் காணமுடியும்.

உளப்பிணியின் இயல்பு பின்வரும் வெளிப்பாடுகளாயும், நடத்தைக் கோலங்களாயும் அமையும் என்பது கிராமிய ஆய்வுகளில் இருந்து புலப்படுகின்றது.[1]

1. மனிதர் மீதான விருப்பின் வீழ்ச்சி: கூச்சம், தனிமைப்படல், ஒதுங்குதல், சந்தேகம்கொள்ளல் முதலிய வெளிப்பாடுகள் இந்நிலைகளிலே தோன்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொருள்கள் மீதான விருப்பின் வீழ்ச்சி: பொருள் களைப் பயன் அற்றதென்றும், பொய்ம்மை என்றும் கருதும் கோலங்கள் இதன் வெளிப்பாடாக வரும்.

3. தம்மைப் பற்றிய நம்பிக்கை வீழ்ச்சி: தாழ்வுணர்ச்சி, குற்றவுணர்ச்சி, ஆற்றாமை முதலியன வெளிப் பாடுகளாக மேற்கிளம்பும்.

4. தம்மைப் பற்றிய மீக்கணிப்பு: இதனை நவீன உளவியலாளர் சுயம் பற்றிய அதீதமான கணிப்பு (Over-estimation of Self) என்றும் குறிப்பிடுவர்.

5. மனவெழுச்சித் தளம்பல் நிலைகளும் பதகளிப்பும்: நவீன உளவியலில் இது Anxiety என்று குறிப் பிடப்படும்.

6. கையறுநிலை: அனைத்தையும் மீளப்பெறமுடியாது இழந்துள்ளதாகக் கருதும் உளநிலை.

'பின்னஞ் சுழலும்' என்ற தொடர் கிராமங் களிலே நிலவிவருகின்றது. அதாவது உளப்பிணித் தேட்டத்தை (Psychopathology) ஆராயவிடுதலும், நோயாளரை அன்புடன் அணுகாது ஒதுக்கிவைத்தலும், நிலையை வெகுவாகப் பின்னே தள்ளிவிடும் என்று கருதப்பட்டது. நவீன உளவியலில் இது 'மீண்டெழும் துன்பச்சுழல் வட்டம்' (Vicious circle) என்று குறிப் பிடப்படும்.

உளப்பிணி என்பது சமூக நிலைப்பட்ட ஒரு தோற்றப்பாடு. நேரானதும் மறைமுகமானதுமான சமூக அழுத்தங்கள் உளப்பிணியை வளர்க்கின்றன. சமூக இயக்கத்தோடு இசைவுகொள்ளமுடியாத நிலை யில் தோன்றும் எதிர்த்தாக்கம் உளப்பிணிகளைத் தூண்டிவிடுகின்றது. சமூக அழுத்தங்கள் ஆழ் மனத்தின் புதையல்களாக மாறுவதைக் காட்டுவதற்கு நீர் நிரப்பப் பெற்ற நிறைகுடத்தினுள்ளே உலோக நாணயங்களை இட்டு குறியீடாகக் காட்டும் மரபு உண்டு.[2]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி நிலைப்பட்ட அதிசயங்களின் வழியாக உளநோயைக் குணப்படுத்தும் உபாயங்கள் தமிழர் மரபுகளிலே காணப்படுகின்றன. இவ்வகையான குணப் படுத்தும் அதிசயங்கள் (Healing miracles) மந்திரங் களுடனும் திரிபுக்காட்சிகளுடனும் இணைக்கப்பட் டிருந்தன. அன்புடனும், ஆதரவுடனும், பரிவுடனும் இவை மேற்கொள்ளப்பட்டன.

உளநோயாளரைப் பழுத்தூக்கச் செய்தல், உடல் நிலைப்பட்ட வருத்தங்களுக்கு உள்ளாக்குதல், உணவை ஒடுக்கச்செய்தல் முதலியவற்றுக்கும் சமூக நிரலாக்கத் திற்கும் நேரடியான தொடர்புகள் காணப்பட்டன. சமூக நிரலமைப்பின் தாழ்நிலையில் இருந்த உளப்பிணி யாளர்களே உடல்நிலைப்பட்ட வருத்துதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். ‘உச்சத்துக்கு இசை, பிச்சைக்குத் தசை’ என்ற தொடர் இதனைத் தெளிவுபடுத்தும். உயர்ந்தோரின் உளப்பிணியை இசையாலே குணப் படுத்துதலும் தாழ்ந்தோரைத் தசைவருத்திக் குணப் படுத்தியமையும் காணப்பட்டன.[3]

உளநோயைக் குணப்படுத்தும் உபாயங்களில் ‘விகடவழி’ என்பதும் கிராமங்களிலே கையாளப்பட் டன. நோயாளரை ஈடுபாட்டுடன் வயிறு குலுங்கச் சிரிக்கச் செய்தால் அடைபட்டு அமுங்கிய உணர்வுகள் வெளித்தள்ளப்படும் என்ற நம்பிக்கை நிலவியது. அதீத கற்பனைகளை உள்ளடக்கமாகக் கொண்ட நகைச்சுவையாக்கங்கள் இடம்பெற்றன. விகடங்களை ஆக்குபவர்கள் ‘நகைச்சித்தர்’ என்றும் அழைக்கப்பட் டார்கள். விகடங்களினால் உளநோயைக் குணப்படுத் தும் சித்துக்கள் புரிவோராக அவர்கள் விளங்கினார்கள்.[4]

உளநோய் என்பது படிப்படியாகத் தீர்க்கப்பட வேண்டியதென்றும், உடனடியாக ‘முறித்து’விடக்கூடிய தன்று என்றும் கருதப்பட்டது. உள ஆற்றலைப் படிப் படியாக வளர்க்கும் செயல்முறை ‘திடமானம்’ அல்லது ‘ஒப்பரவு’ எனப்பட்டது. நேர்ச்சிந்தனைத் தொடர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் இடையிடையே காணப்படும் இடைவெளிகளை நீக்கிவிடும் (Removal of gaps in Memory) செயல்முறையாகவும், மீள் இணைப்பு (Re-integration) நடவடிக்கையாகவும் அது அமைந்தது. விழிப்பு உண்டாக்குதல், விளக்கங்கொடுத்தல் முதலிய நடவடிக்கைகளால் உளப் பல உருவாக்கம் கட்டியெழுப்பப்பட்டது.

உளநோயைக் குணப்படுத்த சாந்த வழிமுறைகள் ஒருபுறமாக நிகழ, அதிர்ச்சிமுறை வைத்தியம் கையாளப் பட்டமைக்கும் சான்றுகள் உள்ளன. அதிர்ச்சியை உருவாக்குவதற்கு நீர் முறைமையே பெரும்பாலும் கையாளப்பட்டது. எதிர்பாராத விதத்திலே தண்ணீரை முகத்தில் வீசுதல், நீரில் அமிழ்த்தி எடுத்தல் முதலிய உபாயங்கள் 'நீர்க்குடம்' என்றும் கூறப்பட்டது. தங்க ஊசிகளால் அதிர்ச்சியூட்டுதலும் இடம் பெற்றன. தங்க ஊசிகளினாலே குத்துதல், மென் சூடாக்கி உடற்பாகங்களிலே வைத்தல் முதலியவை 'நிறைப்பு' என்ற சொல்லால் அழைக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் ஆண்பனையின் பாளையைச் சூடாக்கியும் நிறைப்புச் செய்யப்பட்டது. இதிலும் சமூக நிரலாக்கத்தின் செல்வாக்கு இடம்பெற்றது. உயர்ந்தோராக விளங்கியவர்களுக்கு மென்சூடாகிய தங்க ஊசியினால் நிறைப்புச் செய்யப்பட்டது. தாழ்ந்தோராக அமைந்தோர்க்கு மேற்கொள்ளப்பட்ட நிறைப்பானது 'குறிசுடல்' எனவும் அழைக்கப்பட்டது.[5]

எமது கிராமிய மரபுகளை ஆழ்ந்து நோக்குகையில், 'அன்புசொரிதல்' என்பதே பரந்த அளவிலே கையாளப்பட்டுள்ளமையைக் காணலாம். அன்பு மறுக்கப்பட்டமையும் அன்பின் இடைவெளிகளுமே உளநோயைத் தோற்றுவிக்கின்றதென மக்கள் நம்பினர். அன்புக்குப் பிரதியீடான வேறு சொற்களைக் கிராமிய மக்கள் பயன்படுத்தாமை குறிப்பிடத்தக்கது. அன்பெனும் பிடியுள் கடலும், மலையும் அகப்பட்டுக் கொள்ளும் என்பது அவர்களின் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரினங்கள் கூர்ப்பு நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, விலங்குகளிடத்துக் காணப்படும் கட்டற்ற வாழ்வாதாரம் (Free Living), தாமாகவே தம்மைப் பராமரித்தல் (Self Supporting) மனிதக் குழந்தைகளிடத்து ஒப்பீட்டளவில் குறைவாகவே உண்டு. இந்நிலையில் குழந்தை நிலையிலிருந்தே அன்பு தழுவிய பராமரிப்பு சமூக இயல்புக்கேற்றவாறு கட்டி யெழுப்பப்படுகின்றது. மனிதவளப் பெருக்கை வேண்டிய நிலையில் குழந்தை-தாய் உறவு மிக முக்கியமான சமூக உறவாகவும் குடும்ப உறவாகவும் வற்புறுத்தப்பட்டது. குழந்தை என்ற செல்வத்திற்குப் பொறுப்பாக இருக்கும் தாயே சொத்துக்களுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதும் இதனால் எழுந்தது. இதன் ஒரு வளர்ச்சியே பெண்வழிச் சொத்துரிமையின் தொடர்ச்சி யாகும்.

அன்பைக் குறிப்பிடும் குறியீடுகளாக பச்சை வண்ணம், இனிப்புப் பண்டங்கள், குறிப்பாக இனிப்புப் பொங்கல், கொழுக்கட்டை, பனங்கட்டி, பால் முதலி யவை அமைந்தன. சமூக நிரலமைப்பின் உயர்நிலையில் இருந்தோர் மத்தியில் அன்பின் குறியீடாகவும், பரி மாற்றப் பொருளாகவும் கொழுக்கட்டை விளங்கியது. நிரலமைப்பில் அடிமட்டங்களில் இருந்தோர் மத்தியில் அன்புக்குரிய பரிமாற்றப் பொருளாக பனங்கட்டி அமைந்தது. பச்சை இலைகள், தடிகள் முதலியவற்றை எரித்தல், கொழுக்கட்டை, பனங்கட்டி முதலிய வற்றைக் குறுக்காகப் பிளத்தல் குழுமத்தடையாக (Taboo) அமைந்தது. பச்சை அம்மன், ஆய்ச்சி அம்மன், மாரி அம்மன், முத்துமாரி, மாரியாச்சி, கண் ஆச்சி, முத்து ஆச்சி, பிள்ளை நாச்சி, கருமாரி, கடல் ஆச்சி முதலிய அன்புக்குரிய தெய்வங்களை வழிபடல் உள நோயை ஒழிக்க உதவும் என கிராமிய மரபுகளில் நம்பப்பட்டது. பொருள் சார்ந்த பரிமாற்றம் (Material Transactions) போல் அல்லாது, மீள் பலன் கருதாது வழங்கப்படுதலே அன்பு என்றும் அந்த மரபுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்தப்பட்டது. அங்கு இடம்பெற்ற கூத்துக்களின் அடிநிலைப் பொருளாக 'அன்பு' அமைந்தது. கூத்தாடு பவர்களின் அசைவுகள் திடீர் உதைப்பு நிலைகளைக் கொண்டிராது பெருமளவில் மென்மையான அசைவு களைக் கொண்டே அமைந்திருக்கும். சமநிலையைக் காட்டும் ஆட்டங்கள் பரவலாக இடம்பெறும். ஆடு வோர் பெரும்பாலும் பச்சை வண்ண உடைகளையும் பச்சை இலைகளையும் அணிந்திருப்பர். 'பிள்ளைச் சுகத்துக்குப் பச்சை நாச்சி' என்ற தொடரும் இடம் பெற்றது.[6]

உளப்பிணியை நீக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட 'அன்பு பெய்தல்' என்ற மரபுவழிச் சிகிச்சைமுறை நவீன உளவியலிலும் மீள வலியுறுத்தப்படுகின்றது. அன்பு என்பது அதன் பல்வகைப் பிரதிபலிப்புக்களிலும், கூட்டுமொத்தமான வெளிப்பாடுகளிலும் மேம்பட்ட ஓர் அதிசய நிலையிலே நின்று ஆக்கம் புரிதல் நவீன உளப்பிணி நீக்கலிலும் விரிவாக ஆராயப்படுகின்றது.

அடிக்குறிப்பு:

1. களஆய்வு, சுதுமலை, 12-03-94
2. மேலது
3. மேலது
4. களஆய்வு, சித்தன்கேணி, 23-03-94
5. மேலது
6. மேலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாக்க உளவியல்

புதியவற்றை உருவாக்குதல் என்ற உளத் தொழிற்பாடு எவ்வாறு ஊக்குவிக்கப்படுகின்றது என்பது சமூக உளவியலிலும், சமூக மானுடவியலிலும் விரிவாக ஆராயப்படுகின்றது. புதியது என்பது புதிய கருவிகள், புதிய தளபாடங்கள், புதிய கட்டட அமைப்புக்கள், புதிய கலையாக்கங்கள், புதிய அணுகுமுறைகள் என்றவாறு பல பரிமாணங்களைக் கொண்டது.

சமூகத் தளத்தில் நிகழும் 'புறநிலைப்படுத்தல்', 'கற்பனை', 'ஆக்கல்' என்பவை புத்தாக்க நடவடிக்கைகளிலே சிறப்பிடம் பெறுகின்றன. புத்தாக்கம் என்பது ஒரு சமூக நிலைமானம் (Social Phenomenon) என்று கருதப்படுகின்றது. சமூக நம்பிக்கைகள், தொழிற்பாடுகள், சடங்கு நடத்தைகள் என்பவற்றின் அடிப்படையாகப் புதுமைகள் தோன்றும். ஒருவகையில் சமூக இசைவாக்கம் செய்வதற்குரிய சாதனமாகவும், சமூக எதிர்பார்ப்புகளை முன்னெடுக்கும் சாதனமாகவும் புத்தாக்கம் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாக்க முயற்சிகள் தமிழர் மரபிலே சடங்குகள் வழியாக அங்கீகாரம் பெறலாயின. புதுப்பானை, புத்தாடை, புது நூல், புது நெல்லு போன்றவை கிராமிய சடங்குகளிலே முக்கியத்துவம் பெறலாயின. நிலமானிய சமூக அமைப்பை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்க முயற்சிகளில் 'உழவு' என்ற எண்ணக்கருவே ஆரம்பத்தில் புதுமையைச் சுட்டிக்காட்டுவதாக அமைந்தது.[1]

சடங்குகள், கூத்துக்கள் முதலியவற்றின் பொழுது 'அறியா ஒலிகளை' எழுப்புதல் உண்டு. அறியா ஒலிகள் புதியவற்றைத் தேடுவதற்கான ஒலித் தூண்டிகளாக அமைந்தன. கிராமிய மரபில் அறியா ஒலியானது 'சலப்பு' என்றும் அழைக்கப்பட்டது. புத்தாக்கம் செய்வதற்கான உந்தல் உள்ளிருந்து வெளிப்பாயும் பளிச்சீடுகளாக (Flashes of Inspiration) வரும் என்ற நம்பிக்கையும் நிலவியது. கூத்துக்களிலே திடீரென்று முறித்தாடும் அசைவுகள் இவற்றை மேலும் புலப்படுத்தும். இது 'கிறுதா' எனப்படும். 'கிறுகுதல்' என்பது வழமையான பாதையிலிருந்தும், சிந்தனையிலிருந்தும் திரும்புதல் என்ற பொருள்படும். மரபு மாறும் வழிநிலை (Unconventional Matter) புத்தாக்க வடிவங்களைத் தூண்டும் என்று உளவியலிலே கருதப்படுகின்றது. மரபு நிலை மாறல் 'புதுமோடி' என்று கிராமங்களிலே அழைக்கப்பட்டது.[2]

தமிழர் சமூக உளவியலில் புத்தாக்கப் பரிசோதனைகள் செய்யும் இடமாக கூத்துக்களங்களே பெருமளவில் விளங்கின. மேலைநாட்டுப் புத்தாக்க முயற்சி ஆக்கங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது அடிப்படை வேறுபாடுகளைக் கொண்டதாக அமைந்தது. மேலைநாடுகளிற் புத்தாக்கப் பரிசோதனைகள் ஆரம்ப காலங்களில் தனியார் ஆய்வுகூடங்களிலே பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பண்பாட்டு வேறுபாடானது பின்னர் பாரிய இடைவெளியை உண்டாக்கியது. எமது மரபிலே கலையாக்கங்கள் செழிப்புறத் தொடங்க, மேலை நாடுகளிலே தொழில்நுட்ப வளர்ச்சி மேலோங்கியது.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக உளவியற் பின்புலத்தில் இதனை விளக்கு வதானால் எமது பண்பாட்டில் நடிப்பவர்கள் (Actors) உருவாக்கப்பட, ஐரோப்பியப் பண்பாட்டில் மறுதலித்துச் செயற்படுவோர் (Reactors) உருவாக்கப்பட்டனர். வரலாற்றுக் காரணிகளால் எமது பண்பாட்டில் கூத்து சமூக அடுக்கமைப்பின் இறுக்கமான பிடிக்குள் இடம் பெறத் தொடங்க கூத்தாடுவோர் சுயமாகத் தொடங்கும் ஆற்றலுடையோராவதற்குரிய (Selfs tarters) சந்தர்ப்பங்கள் குறைவடைந்தன.

புத்தாக்கங்கள் தோன்றுவதற்குக் கடும் உழைப்பு இன்றியமையாது வேண்டப்படுகின்றது. கடின உழைப்பானது 'மண்ணைக் கயிறாகத் திரித்தல்' என்ற தொடரால் கிராமங்கள் வழங்கப்படுகின்றது. புத்தாக்கம் என்பது 'சித்து' என்றும் கூறப்பட்டது. உலகியற் சித்தர்கள், ஆன்மீகச் சித்தர்கள் என்ற இரு பெரும் பிரிவினருள் உலகியற் சித்தர்களே புதிய மருந்துகள், புதிய பொருளாக்க முறைகள் முதலியவற்றைக் கண்டு பிடித்தனர். சித்தர்கள் சாதாரண மக்களிலும் 'விலகிய' நடத்தைகளைக் கொண்டு இருந்தனர். கூரிய உற்று நோக்கல் (Observation) சித்தரிடத்துக் காணப்பட்டமையால் 'சித்தருக்குப் பத்துக் கண்' என்ற தொடர் நிலவியது. அகநோக்கல் (Introspection) தம்மைத் தாமே பரிசோதனைக்கு உட்படுத்தல், மருந்தினைத் தம்மீது பரிசோதித்துப் பார்த்தல் முதலியவை சித்தர் மத்தியிலே பெரு வழக்காக இருந்தன.[3]

மேலைத்தேயக் கல்வி முறைமை எமது சித்தர் பாரம்பரியங்களை ஒடுக்கியமையும் விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் பின்னடைவுகளை ஏற்படுத்தின.

புத்தாக்க முயற்சிகளுக்கு வேறுபட்ட பல்வகை அனுபவங்களை (Varied Experiences) ஒருவர் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்று சமூக உளவியலிலே வற்புறுத்தப்படுகின்றது. ஐரோப்பாவில் நிகழ்ந்த, 'கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கிய புலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ச்சி' பல்வகைப்பட்ட அனுபவங்களை வழங்கக் காரணமானது. அவ்வகையான வரலாற்று அனுபவங்கள் இங்கு கிடைக்கப்பெறவில்லை. அத்துடன் மிகவும் இறுகிய நிலையிலே காணப்பெற்ற சாதி முறைமைகளும், அதன்வழிப்பட்ட தொழிற்பிரிவுகளும் வேறுபட்ட அனுபவங்களை ஒருவர் பெறுவதற்கு இங்கு தடையாக அமைந்தது.[4] இவ்வாறான பின்புலமும் விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளிலே பின்னடைவுகளை ஏற்படுத்தின.

புதிய வலுப்பொருள்களைக் கண்டறிதல், புதிய பொறிகளைக் கண்டறிதல் என்பவை தமிழர் சமூகப் பின்புலத்தில் பின்னடைவுகளைக் கொண்டிருந்தன. ஆனால் உயிரியல் சார்ந்த புத்தாக்கங்கள் (Biological-Inventions) ஒப்பீட்டளவில் மேலோங்கியிருந்தன. நல்ல விளைச்சல் தரக்கூடிய தானியங்களைக் கண்டறியும் மரபு, ஆழ வேரூன்றியிருந்தது. கூடிய விளைச்சய தரும் தானியம் 'பெருக்கை' என அழைக்கப்பட்டது. எருத்து மாடுகளின் உடல்வலுவைப் பாதுகாப்பதற்கும், பெருக்குவதற்குமான உயிரியல் கண்டுபிடிப்பாக 'நலமளிப்பு' மேற்கொள்ளப்பட்டது. நல்லினப் பசுக்களைக் கண்டறியும் உபாயம் 'பாணைக்கறவை' எனப்பட்டது. பழச்சாற்றினைப் பாதுகாக்கும் உபாயங்களும், 'காடி' என்பதும் சிறப்புப்பெற்றிருந்தன.[5] மரங்களில் ஒட்டுவேலை செய்து புதிய இனங்களை உருவாக்குதல் என்ற புத்தாக்க முயற்சிகள் விவசாயப் பின்புலத்தில் விரிவாக நிகழ்ந்தன. ஒட்டுதல் வாயிலாகப் புதிய இனங்களை உருவாக்கியோர் 'ஒட்டோங்கி' என்று அழைக்கப்பட்டனர். புதிய ஒட்டு ஒன்றைச் செய்வதற்கு முன்னர் பாவனையாக ஒட்டிப்பார்க்கும் முயற்சி ஒருவித நடிப்புத்தன்மை கொண்டதாக அமைந்தது. இந்நிலையில் நடிப்புக்கும் உற்பத்திப் பெருக்கினுக்குமிடையேயான நேரடி தொடர்புகள் காணப்பட்டமை புலனாகும்.[6]

தமிழர் மரபிலே காணப்பட்ட புத்தாக்கச் சிந்தனைகளும், கண்டுபிடிப்புக்களும் மேலைத்தேயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி முறையால் நலிவடையத் தொடங்கின. பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் அறிமுகம்செய்யப்பட்ட மேலைத்தேயக் கல்விமுறைமை செயல் அனுபவங்களை வளர்ப்பதற்கும், புத்தாக்கங்களை மேற்கொள்வதற்குமுரிய வலுவான தூண்டல்களை வழங்கமுடியாத பின்னடைவுகளைக் கொண்டிருந்தது.

அடிக்குறிப்புகள்:

1. கள ஆய்வு, மறவன்புலவு, 03-12-92
2. மேலது.
3. கள ஆய்வு, சித்தன்கேணி, 01-11-92
4. மேலது.
5. கள ஆய்வு, சங்கரத்தை, 02-11-1992
6. கள ஆய்வு, கோண்டாவில், 04-10-1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் மரபில் சிறுவர் கல்வியும் சிறுவர் அரங்கும்

சிறுவர்களை 'நடுநாயகப்படுத்தும்' அணுகுமுறையானது உலகளாவிய ஒரு பொதுப் பண்பு என்பது சமூக மானுடவியல் ஆய்வுகளின் மீள வலியுறுத்தல்களாகவுள்ளது. ஆயினும் ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கல்விச் சிந்தனைகள் இச்செயல்முறைக்குரிய கருத்தியல் வடிவை செப்பனிட்டு மேம்படுத்தின. ரூசோவின் 'எமிலி' என்ற புனையம் நவீன சிறுவர் அரங்கிலே நேரடியான கருத்தியற் செல்வாக்கை ஏற்படுத்தியது.

சிறுவர் அரங்கும் கல்விசார் அரங்கும் வலைப் பின்னல் இணைப்புக்களைக் கொண்டுள்ளன. உடல் மேம்பாடு, உள மேம்பாடு, மனவெழுச்சி மேம்பாடு ஆகியவை இவற்றினூடாக முன்னெடுக்கப்படுகின்றன. பாடசாலைக் கலைத்திட்டத்தோடு இணைந்த அனுபவங்கள் சிறுவர் அரங்கையும் (Children Theatre), கல்விசார் அரங்கையும் (Educational Theatre) எல்லைப்படுத்தி நிற்கின்றன. கலைத்திட்டத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக இணைந்த உறுப்பாக கல்விசார் அரங்கும், கலைத்திட்டத்தை வளமூட்டும் உறுப்பாகச் சிறுவர் அரங்கும் அமைகின்றன.

தமிழர் மரபில் இவைபற்றிச் சிந்திக்கும்பொழுது, 'தோற்பாவை நிழற்கூத்து' என்ற பாவைக்கூத்தே முதற்கண் பளிச்சீடுகளாக மேற்கிளம்பும். ஒருபுறம் விளக்கு, மறுபுறம் திரை - இவையிரண்டுக்குமிடையே தோலினாற் செய்யப்பட்ட உருவங்களை இயக்கி திரையின்மீது நிழலைப் பரவச்செய்யும் கலை இயக்கமாகத் தோற்பாவை நிழற்கூத்து விளங்கியது. இதனோடு தொடர்புடைய இன்னொரு கலைவடிவமாகப் பாவைக் கூத்து அல்லது பொம்மை அரங்கு (Doll Theatre) அமைந்தது. தமிழர் மரபில் 'கூத்து' என்பது வளர்ந்தோருக்குரியதாகவும், 'நிழற்கூத்து', 'பாவைக்கூத்து' முதலியவை சிறுவர்களுக்குச் சிறப்பாக உரியனவாகவும் அமைந்தன.[1] இதை வேறுவிதமாகக் கூறுவதானால் 'உயிரற்ற பொருள்களை உயிர்ப்பொருளாக்கும்' கற்பனைப் பரிமாணங்கள் தமிழர் மரபில் சிறுவர் அரங்கினை இனங்காணும் ஆரம்பகாலச் சுட்டுக்குறிகளாக அமைந்தன. உயிரற்ற பொருள்களுக்கு உயிர்ப் பூட்டல் வாயிலாக ஒருவித உளவியற் 'கிளர்ப்பு' (Activising) சிறுவர்களிடத்தே ஏற்படுத்தப்பட்டது.

நிலையான கிராமிய வாழ்க்கைப் பின்புலமும், அதற்கு அனுசரணையான கால்நடை வளர்ப்புப் பொருண்மியக் கோலங்களும் நியமமான கல்விச் செயற்பாடுகளை வளர்ப்பதற்கு உதவியவேளை பொருத்தமான அறங்களை வலியுறுத்தும் இலக்கியங்களின் ஆக்கங்களுக்கும் தூண்டுதல் வழங்கின. இத்தகைய காட்சியம் (Scenario) சிறுவர் அரங்கின் இயல்புகள் மீது செல்வாக்குச் செலுத்தின. நிலமானிய சமூகப் பின்புலத்தில் அறம் வலியுறுத்தல் என்ற உள்ளடக்கம் வளர்வதற்குரிய ஏற்பாடுகள் தோன்றின.

இச்சந்தர்ப்பத்தில் 'மென் தொடர்பியம்' (Soft Medium), 'வன் தொடர்பியம்' (Hard Medium)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வேறுபாடுகள் சிறுவர் அரங்கின் அமைப்பியலிலே செல்வாக்குச்செலுத்திய கோலங்களையும் தமிழர் மரபிலே காணமுடியும். பாவைகளைச் செய்வதற்கு களி, இளகுமண், தோல். துணி, மென்மரங்களே பயன்படுத்தப்பட்டன. அதாவது சிறுவர் அரங்கினுக்கும் மென் தொடர்பியத்துக்கும் நேரடியான இணைப்புக் காணப்பட்டது.

வன் தொடர்பியம் தமிழர் மரபில் விக்கிரகங்கள் செய்வதற்கும், வழிபாட்டுக்குரிய வடிவங்கள் செய்வதற்குமே பயன்படுத்தப்பட்டன. கருங்கல், பளிங்குக் கல், படிகக்கல், உலோகம் முதலிய வன் தொடர்பியமானது நீடித்து நிலைக்கும் தன்மை கொண்டதாகையால் வழிபாட்டுக்குரிய முன்னுரிமை பெற்றது. அதாவது நீடித்து நிலைக்கும் சின்னங்களும் பொருள்களும் வழிபாட்டுக்குரிய பண்பினையும் முன்னுரிமையையும் பெறுதல் சமூக மானிடவியல் ஆய்வுகளிலே தெளிவாகத் தெரிகின்றன.[2]

மண்ணிலே பாவை செய்து வழிபடும் சமூக மானுடவியற் பண்புகள் மணிவாசகரின் திருவெம்பாவையிலே காணப்படுகின்றன. முன்னதாக தை நீராடல் பற்றிய செய்திகளும் உள. மார்கழிமாத நிறைவில் மண்பாவைகளை நீர்நிலைகளிலே அமிழ்த்தி விடும் மரபு பின்னர் வளர்ச்சியடைந்தது.

தமிழர் மரபில் சிறுவர் அரங்கின் வளர்ச்சியை ஆராயும்பொழுது 'பாவையும் மனிதமும் கலந்த அரங்கு' அடுத்து முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். இது ஒருவிதக் கலப்பு அரங்காக (Mixed Theatre) அமைந்தது. நகைச்சித்தர்கள், கோமாளிகள் முதலியோர் தாமும் பாவைகளும் கலந்த அரங்கை உருவாக்கினர். சிறுவர்களை மகிழ்விக்கும்பொருட்டு தமது உடலாற்றல், மொழியாற்றல், இசையாற்றல், உடைபுனைவு என்பவற்றுடன் பாவைகளை இயக்கியும் அவர்கள் ஆற்றுகையை மேற்கொண்டனர். அவை பெருமளவில் நகைச்சுவை உள்ளடக்கத்தினைக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை இராமன் கதை, தென்னாலி இராமன் கதை, விகடச் சுப்பன் கதை போன்றவை நகைச்சுவை உள்ளடக்கத்தைக் கொண்ட புனைவுகளாக அமைந்தன. (ஆங்கில மரபில் Snow White, Ton Sawyer, The Emperors New Clothes, cinderella போன்றவை சமூக மரபிலிருந்து முகிழ்த்து எழுந்த கனதியான சிறுவர் அரங்குப் புனைவுகளாக அமைந்தன).

உயிர் விலங்குகளை ஆடவைத்து மகிழ்வூட்டலும் தமிழரின் மரபுவழிச் சிறுவர் அரங்குகளிலே காணப் பட்டன. பாம்பு ஆட்டம், குரங்கு ஆட்டம் முதலியவை இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. இவை 'நகரும்' அரங்குகளாக அமைந்தன. நவீன சிறுவர் அரங்கினைத் திட்டமிட்டு அமைப்பதற்கு இவை வலிமைமிக்க மூலகங் களாக அமைதலையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது.

தமிழரது பாரம்பரியத்திலே சிறுவர்களிடத்துப் பின்வரும் கலைப் பரிமாணங்கள் இனங்காணப்பட்டன. அவை,[3]

(அ) 'தாவல்' - இது கற்பனை வளத்தைக் குறிக்கும். ஒரு புள்ளியில் இருந்து இன்னொரு புள்ளியை நோக்கிக் கற்பனை பெயர்ந்து செல்வதால் 'தாவல்' என்ற எண்ணக்கரு உருவானது.

(ஆ) 'தொங்கல்' மறைபொருள், அல்லது எதிர் பாராத வியப்பு அல்லது மாயைத் தோற்றங் கள் (Illusions) முதலியவற்றைத் 'தொங்கல்' என்ற எண்ணக்கரு குறித்து நின்றது.

(இ) 'தூவல்' கிராமிய வழக்கில் 'தூவல்' என்பது உச்சத்தைக் குறிப்பிடும். அரங்கியலில் இது கலைமுகடு (Climax) என்பதற்கு இணையான எண்ணக்கரு.

(ஈ) 'மூசல்' அதிவீரசாகசங்களைக் காட்டும் எண் ணக்கருவாக இது அமைந்தது. அரங்கியலில் இந்த எண்ணக்கரு (The Heroic dimension) என்று குறிப்பிடப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) 'வீசல்': உடல் அசைவுகள், உடலியக்கம் அவற்றின் வழியான மனவெழுச்சி நெறிப்பாடு முதலியவற்றை 'வீசல்' என்ற எண்ணக்கரு குறிப்பிடும். 'கைவீசு அம்மா கைவீசு' 'சாய்ந் தாடம்மா சாய்ந்தாடு' போன்ற இசையும் அசைவும் இங்கே இணைத்து நோக்கத்தக்கவை. சிறுவர் அரங்கின் கதைப்புலம் உடலியக்கங்க ளுடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.[4]

சிறுவர் அரங்கின் முழுநிறைவான அமைப்பியல் சிறுவர்களால் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படும் பொழுதுதான் அடையப்படும். இந்நிலையில் இரண்டு எண்ணக்கருக்களை ஆழ்ந்து நோக்குதல் வேண்டும். அவை: சிறுவர்க்கான அரங்கு (Theatre for Children), சிறுவர் அரங்கு (Children Theatre). சிறுவர்களின் முழு மையான பங்குபற்றலுடன் முகிழ்ந்தெழும் சிறுவர் அரங்கு பின்வரும் இலக்குகளை முன்னெடுப்பதாக அமையும்:

அ) உந்தல் வலு (Stamina) மேம்பாடு

ஆ) மகிழ்ச்சியும் உளத்திருப்தியும்

இ) திறன்களைக் கற்றுக்கொள்ளல்

ஈ) தன்னியல் வெளிப்பாடு

உ) ஆக்க வெளிப்பாடு

ஊ) மனவெழுச்சிப் பயிற்சி

எ) சமூக இசைவாக்கம்.

சிறுவர்களின் உடல், உள்ள மனவெழுச்சி அசை வுகள் சிறுவர் அரங்கிலே சிறப்பிடம் பெறுகின்றன. அசைவு முதன்மானங்கள் (Movement Principles) சிறுவர் அரங்கினை விளக்குவதற்குத் துணை செய்கின் றன. அசைவுகளுக்கு உடலே கருவியாகின்றது. உடல் என்ற கருவி பற்றி விரிந்த அறிவை சிறுவர்கள் பெற் றுக்கொள்கின்றனர். எல்லாவிதமான அசைவுகளும் நான்கு காரணிகளுடன் தொடர்புடையனவாயிருக்கும். அவையாவன:[5]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) இயக்கவெளி (Space): பாய்ந்து, அசைந்து, சுழன்று, இருந்து, நின்று, குனிந்து என்றவாறு உடலியக்கங்களைப் பிரயோகிக்கும் புலம் இயக்கவெளி எனப்படும்.

ஆ) உடற்பாரம் (Weight); உடலின் வன்பலம், மென்பலம் என்ற வேறுபாடுகளை உணர்தலுடன் தொடர்புடையது. வன்பலம் என்பது உடல் இறுக்கத்துடனும், மென்பலம் என்பது உடல் இறுக்க நீக்கத்துடனும் (Without tension) இணைந்தது.

இ) நேரம்: எந்த ஒரு உடலசைவும் குறிப்பிட்ட அளவான நேரத்தை உள்வாங்கும். விரைந்த நேரத்துள் நிகழும் அசைவு, தாமதித்த நேரத்துள் நிகழும் அசைவு என்றவாறான உணர்வுகள் முனைப்புப்படும்.

ஈ) ஊற்றுமானம் (Flow): கட்டற்ற ஊற்றுமானம், கட்டுப்பாடுகள் நிரம்பிய ஊற்றுமானம் என்பவை பற்றிய உணர்வுகள் அசைவுகளால் உண்டாக்கப்படுகின்றன.

மேலைப்புல ஆய்வாளர்கள் சிறுவர் அரங்கினை விளக்கும்பொழுது மூன்று கோட்பாடுகளை முன்மொழிகின்றனர். அவையாவன:

1) ஊக்கியக் கோட்பாடு (The Recreation Theory)
உடல் உள்ளச் சோர்வுகளை நீக்கி உற்சாகம் தரும் வகையில் சிறுவர் அரங்கு அமையும் என இக்கோட்பாடு விளக்குகின்றது.

2) நெகிழ்மியக் கோட்பாடு (The Relaxation Theory)
வளர்ந்தோரது நெருக்குவாரங்கள், புறமிருந்து திணிக்கப்படும் கட்டுப்பாடுகள் என்பவற்றிலிருந்து சிறுவர் அரங்கு விடுதலை வழங்குகின்றதென இக்கோட்பாடு விபரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) மீள்தொடுகைக் கோட்பாடு (The Recapitulation Theory)

வயது வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு விருப்புக்களும், விளக்கங்களும், உடலசை வேறுபாடுகளுக்குரிய புதிய வழங்கல் தொடுகைகளை சிறுவர் அரங்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது என விளக்கும் கோட்பாடாக இது அமைகின்றது.

4) எழுச்சி இசைவுக் கோட்பாடு (The Cathartic Theory)

இது உயிரியல் சார்ந்த ஒரு கோட்பாடு. அதிக அளவிலே குவிந்தும் உள்ளமைந்த சுமையாகவும் இருக்கும் மனவெழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்குரிய வடிகாலாக சிறுவர் அரங்கு அமைவதை எழுச்சி இசைவுக் கோட்பாடு குறிப்பிடுகின்றது.

தமிழர்களது பாரம்பரியத்தில் சிறுவர் அரங்கு பற்றிய கோட்பாடுகளை நோக்கும்பொழுது பன்முகப்பட்ட கோட்பாடுகளைக் காணமுடிகின்றது. இடநிலையப் பன்முகத்தன்மை, சமூக நிரலமைப்பு வேறுபாடுகள், தொழில்முறை வேறுபாடுகள் முதலியவை சிறுவர் அரங்கின் கோட்பாடுகள் மீது தாக்க விளைவுகளை ஏற்படுத்தியமை பன்முகப்பாடுகளுக்குக் காரணமாகக் கொள்ளத்தக்கது.

நாட்டார் மரபுகளில் சிறுவர் அரங்கினுக்குரிய பல இசைப்பரிமாணங்களைக் காணலாம்.[6]

அ) பிள்ளை என்னத்துக்கு?
ஓலைப் பாயிலே ஓடி விளையாட
ஈச்சம் பாயிலே இருந்து விளையாட
பிரப்பம் பாயிலே புரண்டு விளையாட
கோரைப் பாயிலே குதித்து விளையாட
தாழம் பாயிலே தவழ்ந்து விளையாட
தண்ணிக் குடத்திலே தத்தி விளையாட
ஆற்று மணலை அள்ளி விளையாட
கொழுந்து மணலைக் கொழிச்சு விளையாட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) புங்கமிலை புளியம் இலை.
புளியம் இலை எங்கிருக்குது
பொன்னப்பன் தோட்டத்திலே மிகுந்திருக்கு.

இ) முத்து இடிச்சு மாக்கொழிச்சு - கண்ணம்மா
முற்றமெல்லாம் கோலமிட்டு
கோலம் அழியாமல் - கண்ணம்மா
கும்பிடடி கோலவல்லி.

ஈ) கும்பரைக் காட்டிலே
மேளம் படப்பட
கேக்கலாம் சீமையிலே
காலும் தரிக்கல்லே
கையும் தரிக்கல்லே.

தமிழர் பாரம்பரியத்தில் சிறுவர் அரங்கியலின் பரிமாணங்களை விளக்குவதற்கு நாட்டார் இலக்கிய மூலகங்கள் பலமும் வலுவும் கொண்டு விளங்குகின்றன. நாட்டார் இசை வடிவங்களில் இடம்பெறும் மீட்பு ஒலிகள் அரங்கின் இசைப்பரிமாணங்களைச் சுட்டிக் காட்டுகின்றன.[7]

அ) ''ராரி ராரி ராராரோ''
ஆ) ''தூரிதூரி தூராரோ தூரிதூரி தூராரே''
இ) ''துரோ தூரோ தூரோ''
ஈ) கண்ணாமூச்சி டே டே
கண்ணாமூச்சி ரே ரே ரோ
உ) கொடி கொடியா முந்திரிக்கா
நரியே நரியே ஓடிவா
குலை குலையா முந்திரிக்கா
நரியே நரியே ஓடிவா.

மல்லுக் கூடத்தின் சில ஒலி அசைவுப் பரிமாணங்கள் வருமாறு:[8]

அ) சட்டுப்புட்டு மல்லு
சடங்கு தக்கினமல்லு

ஆ) கடார் குடார் மடார் நடார்
தடார் எடார் விடார் சடார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) செண்டு முடிபண்டு எண்டு
தண்டுதொடு நார் மேல்
கண்ட இடம் அண்ட இடம்
கட்டுமுறி நீர்மேல்.

சிறுவர் அரங்கின் இயல்பினை விளங்கிக் கொள்வதற்கு அவற்றின் கதை வடிவம், உள்ளடக்கம் என்பவற்றுடன் அவற்றிடையே பொதிந்துள்ள இசைப்பண்பு ஒத்திசைவு என்பவற்றை இனங்கண்டு பாகுபடுத்தும் பொழுது மேலும் தெளிவான புலக்காட்சிகளைப் பெற முடியும். நாட்டார் இலக்கிய ஆய்வில் இவற்றின் முக்கியத்துவம் பகுப்பாய்வாளர்களாற் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது.[9]

காவியங்களின் துணுக்குகள், வாழ்க்கை அனுபவங்களைப் பெயர்த்துக் காட்டும் புனைவுகள், தொன்மங்களோடு (Myths) இணைந்த காட்சிகள், முதலியவை சிறுவர் அரங்கின் உள்ளடக்கமாக அமைந்தன.

தமிழர் பாரம்பரியத்தில் 'சிறுவர் அரங்கு', 'கல்வி அரங்கு' என்பவற்றைப் பிரித்துக் கோடிட்டுக் காட்டுதல் கடினமாகவுள்ளது. ஒன்றிணைந்த ஆற்றல்கள் அறிகைத் திறன்கள், எழுச்சிக் கோலங்கள், சீராக்க முறைமை முதலியவற்றை உள்ளடக்கிப் பாடசாலைக் கலைத்திட்ட செயற்பாடுகளுடன் இணைந்த ஒரு செயல் முறையாகக் கல்வி அரங்கு வளர்ந்துள்ளது. கற்றல் செயற்பாடுகளோடு அறிவை உள்வாங்குதலும், உள்வாங்கிய அறிவை வலிமைமிக்க அறிகைத் திரளமைப்பு ஆக்குதலும் வெளித்துலங்கலும் கல்வி அரங்கில் கூர்மைப் படுகின்றன. கிரகித்தலும் (Comprehension) அதனை அடியொற்றிய ஆக்கவெளி வீச்சுக்களைத் தருதலும் கல்வியரங்கில் முனைப்பு அடைகின்றன. ஒவ்வொரு மனிதரதும் 'கல்வியம்' (Educablity) அங்கு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஒவ்வொருவரது உள்ளத்தின் தனி மிகுமைக் கோலத்தை (Unique Pattern) கல்வி அரங்கு அங்கீகரிக்கின்றது. ஆற்றல்களை உள்வாங்குவதற்கும் அவற்றை புடமிட்டு வெளியிடுவதற்குமிடையே

'விரிசல்' ஏற்படாது காப்பதற்கும் கல்வியரங்கு துணை நிற்கும் மனித ஆற்றல்களின் உறுவரல் இணைப்பை (Organic Unity) கல்வி அரங்கு நிறுவ முற்படுகின்றது. புறநிலையாக அமைக்கப்படும் அரங்கு மாணவரின் அக நிலையான அரங்காக மாறும் நிலை கல்வி அரங்கினால் நிகழ்த்தப்படுகின்றது.

சிறுவர் அரங்கு, கல்வி அரங்கு யாவற்றிலும் இரண்டு பரிமாணங்கள் இழையோடி இருக்கும். அவையாவன:

அ) துலங்கும் பரிமாணம் (Manifestative dimension)
ஆ) பிரதிநிதித்துவப் பரிமாணம் (Representative dimension.)

இயக்க அசைவுகள், மனோநிலை, மனவெழுச்சிக் கோலங்கள் முதலியவை துலங்கும் பரிமாணத்தில் இடம் பெறும். பிரதிநிதித்துவப் பரிமாணத்தில் அரங்ினூடாக வழங்கப்பெறும் செய்தி, கதையம், குறித்துரைக்கத்தக்க சந்தர்ப்பம் (Definite situation) முதலியவை இடம் பெறும்.

எமது சூழலில் சிறுவர்க்கான அரங்கினைத் திட்டமிடும்பொழுது, எமது பாரம்பரியங்களையும், உலகப் புத்தாக்கங்களையும் ஒன்றிணைத்து விசைப் படுத்த வேண்டியுள்ளது.

அடிக்குறிப்பு:


1. கள ஆய்வு, இணுவில்.
2. மேலது.
3. மேலது.
4. Winifed Ward, *Theatre for Children*, The Children Theatre press Kentucky, 1950, p. 129.
5. Barbra Churcher, *Physical Education for Teaching* George and Unwin London, 1980, p. 24.
6. மா. வரதராஜன் தமிழக நாட்டுப் பாடல்கள், வானதி பதிப்பகம், சென்னை, 1978, பக். 96, 115, 118, 76.
7. மெ. சுந்தரம், நாட்டுப்பாடல்கள் மணிவாசகர் நூலகம், சென்னை 1981, பக். 237 - 652.
8. கள ஆய்வு, இணுவில்.
9. N. Vanamalai, *Studies in Tamils Folk Literature*, NCBH, Madras, 1969, p. 5.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியங்கள் வழியாகப் பண்டைத் தமிழர் கல்வியை அணுகுதல்

சமூக நெருக்கடிகள் கல்விச் செயன்முறையின் மீளாய்வுக்கு வலுவூட்டுகின்றன. கல்விச் செயன் முறையின் வரலாறு, சமூக இயக்கத்தின் பிரதிநிதித் துவப்படுத்தலாகவே இருந்துவந்துள்ளது. சமூக இயக் கத்தைக் காட்டும் குறியீடாகக் கல்விச் செயல் அமைந்து செல்லும்.

கல்வியும் சமூக பின்புலமும் தொடர்பான இரண்டு கருத்துக்கள் முன்மொழியப்படுகின்றன:

அ) சமூக முரண்பாடுகள் கல்விச் செயன்முறையின் உள்ளமைந்த முரண்பாடுகளாகத் தொழிற்படும்.

ஆ) கல்விச் செயன்முறையின் விசையும் சமூகச் செயன் முறையின் விசையும் ஒரே சீரானதாக இல்லாத விடத்து இசைவின்மை தொழிற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் முதலாவது கருத்து பாரம்பரிய மார்க்சியக் கண்ணோட்டத்திலும், இரண்டாவது கருத்து அமைப்பியற் கண்ணோட்டத்திலும் கல்விச் செயல் முறையை அணுகி நிற்கின்றன.

பொருளையும், அறிவையும் மீள உற்பத்தி செய்தல், சமூகத்தின் தேவையாகவுள்ளது. 'தொடர்ச்சி'. 'விருத்தி' என்ற இரு எண்ணக்கருக்கள் மீள உற்பத்தியுடன் தொடர்புபட்டுள்ளன. மீள் உற்பத்தி, தொடர்ச்சி, விருத்தி ஆகியவை கல்விச் செயன்முறையுடன் இணைந்தவை.

தொழிற்பிரிவுகள் விரைந்து வளராத பூர்விக நிலையில் 'அவதானித்தல் - உதவுதல்' (Watch help method) வழியாக மிகவும் எளிமையான கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றன.

வாழ்க்கைக்குரிய அடிப்படைத் தொழில் நுட்பங்கள் அனைவருக்கும் தெரிந்தவையாக அமைந்தன. அடிப்படைத் தொழில் நுட்பங்கள் மூத்தோரால் இளைஞருக்குக் கற்பிக்கப்பட்டன. பூர்வீக நிலையில் வயது முதிர்ச்சியும் அறிவு முதிர்ச்சியும் சமாந்தரமாகச் சென்றன. மூத்தோர் இளைஞரிலும் அறிவு கூடியோராயிருந்தனர். அறிவை வழங்குவதற்குரிய நிறுவன அமைப்பின் தேவை அந்நிலையில் உணரப்படவில்லை.

குழுநிலைப்பட்ட பொருள் உற்பத்தியும் பங்கீடும் காணப்பட்ட பூர்வீகநிலைக் கல்விச் செயற்பாடுகள் குழுவின் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் அமைந்தன. தனி மனித நிலைப்பட்ட முனைப்புகளை முன்னெடுப்பதில் கல்விச் செய்முறை வலிந்து முனைப்படையவில்லை.

பூர்வீகக் குழுக்கள் ஒப்பீட்டளவிற் சிறிதாக இருந்தன. குழுப்பிணைப்பு வலிதாகக் காணப்பட்டது. வேறு குழுக்களுடனான இடையுறவுகளும் ஒப்பீட்டள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் குன்றியிருந்தன. 'நடத்தை உருவாக்கம்' மரபு நிலைப்பட்டதாகக் காணப்பட்டது. இடையுறவுகளின் மட்டுப்பாடானது விரிவான மாற்றங்களுக்கு இடமளிக்க வில்லை. முதிர்ந்தோரைப் பின்பற்றுதல் வழியாகச் சமூக நியமங்களும், விழுமியங்களும் கற்றுக்கொள்ளப் பட்டன. வாழ்க்கைத் தொழிற்பாடுகளோடு கல்விச் செயன்முறையும் சமாந்தரமாக இணைந்து சென்றது.

பூர்வீக நிலைக் கல்வியானது இயற்கையுடன் திகழ்ந்த போராட்டத்துடன் தொடர்புபட்டு இருந்தது. அந்நிலையில் உழைப்பும், ஆயுதங்களும், கருவிகளும் சிறப்பிடம் பெற்றன. ஆயுதங்களாலும் கருவிகளாலும் உழைப்பு வலுவின் வினையாற்றல் அதிகரித்தல் அனுபவ வாயிலாக உணரப்பட்டது. ஆயுதங்கள், கருவிகள் முதலியவற்றைச் செய்தலை அனுபவம் உள்ள முதியோரிடமிருந்து இளையோர் கற்றுக் கொண்டனர்.

உழைப்பு, இயற்கையுடன் நிகழ்ந்த போராட்டம், கருவிக் கையாட்சி, என்பவற்றுடன் பின்னிப் பிணைந்த தாக மொழி, இசை, நடனம், சடங்குகள், மந்திரம் என்பவை வளர்ச்சி அடைந்தன. பாவனை செய்தல், பின்பற்றுதல், மீளச்செயல் முதலியவை ஆரம்பகாலக் கற்றல், கற்பித்தல் முறையியல்களாக அமைந்தன. இவ்வாறான முறையியல்களை வற்புறுத்துவதற்குரிய உபாயமாகச் 'சடங்கு' ஒழுங்கமைக்கப்பட்டது. சடங்குகளைச் செய்வோரே வழிகாட்டுனர்களாகவும், மருத்துவர்களாகவும் ஏக காலத்தில் தொழிற்பட்டனர்,

சடங்குகள் சமூக வாழ்க்கையுடன் இணைந்த கல்விச் செயற்பாடுகளாக விளங்கின. பிறப்புத் தொடங்கி மனித விருத்தியின் ஒவ்வொரு கட்ட நிலை மாறுதல்களிலும் சடங்குகள் இடம்பெற்றன. சடங்குகளின் ஊடாகச் சமூக விருப்பங்களும், உணர்வுகளும், நம்பிக்கைகளும் வெளியிடப்பட்டன.

பூர்விகக் கல்வியில் தொன்மங்கள், வாய்மொழிப் பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியன சிறப்பிடம் பெற்றன. உற்பத்திப் பெருக்கம், கலையாக்கம் முதலியவற்றில் குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டாகப் பங்குகொள்ளக் கூடிய நிலை காணப்பட்டது. சமூக வளர்ச்சியோடு படிப்படியாகக் குழுச் செயற்பாடுகள் நலிவடைந்து தனிமனித இயல்புகள் மேலோங்கின. சிற்றரசுகள் வளர்ச்சி அடைய, வீரனின் ஆற்றல் புனையும் பாடல்களும், கதைகளும், பழமொழிகளும் கல்விச்செயற்பாடுகளிலே இடம்பெறத் தொடங்கின.

பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் விரிவடைய, சூழலுடன் நிகழ்ந்த போராட்டத்திலே 'நிலம்' தொடர்பான புதிய அனுபவங்கள் கிடைத்தன. நிலம் பற்றிய பகுப்பாய்வானது கல்வியில் விதந்து கூறப்படுவதொன்றாக விளங்கியது. முல்லை, பாலை, நெய்தல், மருதம், குறிஞ்சி என்ற ஐவகை நிலப் பாகுபாடும், அவற்றுக்குரிய ஒழுக்கக் கல்வியும் சங்க நூல்களிலே குறிப்பிடப்படுகின்றன. நிலப் பாகுபாடானது நிலப் பயன்பாட்டு 'அறிகை' விருத்தியைச் சுட்டிக் காட்டுவதுடன் 'நிலவுரிமை' என்ற பண்பின் வெளிப்பாடாகவும் கொள்ளத் தக்கது.

கல்விச் செயற்பாடு உழைப்பை வினைத்திறன் படுத்துவதற்குரிய அனுபவத் திரட்டலைக் கொண்டதாகக் காணப்பட்டது. சமூக கட்டமைப்பின் வழியாகக் கல்விச் செயல் முறைகள் முகிழ்த்தெழுதல் அனைத்துலக அனுபவமாகும்.

பண்டைய ஸ்பாற்றன் கல்வியானது சமூகத் தேவையை அடியொற்றியதாக, உடற்கட்டுமிக்க மல்லர்களை உருவாக்கும் வண்ணம் அமைந்தது. அவர்களால் ஒரு கவிஞனையோ, கலைஞனையோ, தத்துவஞானியையோ உருவாக்கமுடியாமற் போய்விட்டது.[2]

அத்தகைய ஓர் உருவாக்கம் அவர்களின் சமூகப் பின்புலத்திலே தேவையற்றதாகவும் விளங்கியது. ஆனால் அதென்ஸ் மக்களின் கல்வி ஸ்பாற்றன் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் வேறுபட்டதாக இருந்தமை சமூக ஆக்கத்துடன் இணைந்து நோக்கத்தக்கது. சமூகத் தேவைக்கேற்பவே கல்வி இலக்குகளும் பிறப்பிக்கப்படுகின்றன. அதென்சின் சமூக இயல்பு, ஆய்வறிவாளர்களைத் தோற்றுவித்தது.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் அதென்ஸ் நாட்டில் நிகழ்ந்த பொருளாதார அரசியல் மாற்றங்களுடன் அங்கு கல்விச் செயற்பாடுகள் மாற்றம் அடைந்தமை சமூக மாற்றத்துக்கும் கல்வி செயல் முறைக்கும் உள்ள தொடர்பை மீள வலியுறுத்துவதாக உள்ளது.

சமூகத் தொழிற்பாடுகளின் பன்முக இயல்புகள் வளர, கல்விச் செயற்பாடுகளும் சிக்கல் நிரம்பியதாக வளர்ச்சி கொள்ளத் தொடங்கின. இவ்வாறான சிக்கலின் ஊடே 'நேர்த்தொழிற்பாடுகள்', 'எதிர்த் தொழிற்பாடுகள்' என்ற முரண்பாடுகள் ஏக காலத்தில் இயங்குதல் சாத்தியமாகும். இந்நிலையிற் கல்வி இலக்குகள் தனி மனிதனுக்குரியனவா என்ற வினாக்களும் எழலாம்.

ஆரம்பகாலக் கல்வியில் உடல் உழைப்பிற்கும் உள உழைப்பிற்கும் இடையே வேறுபாடு காணப்படவில்லை. பூர்வீகப் பொதுவுடமையிலே வீழ்ச்சியை ஏற்படுத்தியே தனி மனித முனைப்பு மேலோங்கத் தொடங்கியது. நிலையான குடியமர்வும் பயிர்ச்செய்கை முறையும் வளர்ச்சியடைய இயற்கையுடன் நிகழ்ந்த போராட்டம் மேலும் விரிவடைய கல்வி பற்றிய நோக்கு பன்முகப்பட்டு வளரலாயிற்று.

'அறிதொறும் அறியாமை கண்டற்றால்' என்றவாறு அறிவுத்தேடலின் முடிவிலியாகிய பண்பு வாழ்க்கை அனுபவங்களால் உணரப்படலாயிற்று.

பயிர்ச் செய்கைப் பண்பாட்டிற் கிடைத்த 'ஓய்வு' என்ற பண்பும் 'நிலவுரிமை' என்ற பொருளியல் சார்ந்த தொழிற்பாடும் கல்விச் செயல் முறையிலே செல்வாக்கைச் செலுத்தின. இவற்றின் பின்புலத்தில் உளச் செயல் முறையில் இருமைத்தன்மை ஏற்படத் தொடங்கியது. அவையாவன:-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ) உடல் உழைப்போடு இணைந்த உளச் செயற்பாடு
ஆ) உடல் உழைப்போடு இணையாத உள்ளச் செயற் பாடு.

உடல் உழைப்போடு இணையாத உளச் செயற் பாடு, ஒய்வுடன் வளரலாயிற்று. இந்நிலையில் 'மனம்' என்பது தனித்துப் பேசப்படலாயிற்று. உடல் உழைப்பு இன்றி உள்ளத்தாற் பெறப்படும் இன்பமும் விதந்து கூறப்பட்டது.

உவப்பத் தலை கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.[4]

சமூக அமைப்பில் ஏற்பட்ட தொழிற் பிரிவு களின் வழியாக உள உழைப்பை வழங்கும் புலவர், பாணர், வாணர் போன்ற சமூகப் பிரிவினர் வளர்ச்சி பெறலாயினர். இப்பிரிவினர் நிலவுரிமையாளரைச் சார்ந்து இருந்தமையினால் வேளாண்மைச் சிறப்பை முதன்மைப்படுத்த வேண்டியதாயிற்று.

மனிதரது வளர்ச்சிக் கோலத்துடன் கல்வியும் இணைய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. கல்வி யின் நிறைவு 'சான்றோன்' ஆகும் தகுதி பெறுதலா கும். கல்விச் செயற்பாடும், சமூகச் செயற்பாடும், இசைவுற ஒன்றிணைக்கப்பட வேண்டிய தேவை அரசின் வளர்ச்சியோடு முனைப்படைந்தது. சமூகத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவுவதற்கு கல்விவாயிலான 'கருத் தோற்றம்' அவசியமாகக் கருதப்பட்டது. கல்விச் செயற் பாட்டுக்கும் நடத்தை ஒழுங்கமைப்புக்கும் இடையே தொடர்புகள் வலியுறுத்தப்பட்டன. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதலாகக் கூறப்பட்டது.[5]

சமூக அமைப்பிலே உற்பத்தியும் பங்கீடும் தொடர்பான முரண்பாடுகள் எழுவதற்கு நிலவுரிமை பின்புலமாக அமைந்தது. இந்த முரண்பாட்டின் இசை வாக்கப் பணியிலே கல்வி கருவியாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"[6]

என்ற முன்மொழிவு இடம்பெற்றது.

பயிர்ச்செய்கைப் பொருளாதாரத்தோடு இணைந்ததாக அறக்கல்வி, ஆன்மீகக் கல்வி முதலியவை தமிழ் மரபில் வளர்ச்சியடையத் தொடங்கின. பயிர்ச்செய்கைப் பொருளாதாரத்தில் விலங்குகளைக் கொல்வது அதர்மமாக விளக்கப்பட்டது. பசுக்கள் செல்வமாகக் கருதப்பட்டன. பயிர்செய்கைக்குரிய மழை பெய்யும்வண்ணம் சடங்குகள் செய்யப்பட்டன. சடங்குகள் பலிக்காத சந்தர்ப்பங்களில் இறை நம்பிக்கை மேலோங்கியது. இவ்வாறாகப் பயிர்ச்செய்கைப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் ஆன்மிகக் கல்விக்கும் இடையே நெருங்கிய உறவு காணப்படுகின்றது.

பண்டைய வர்த்தக வளர்ச்சியானது பல்வேறு மக்களுடன் உறவாடுவதற்கும், புதிய புவியியற் புலங்களைத் தரிசிப்பதற்கும் வாய்ப்பு வழங்கியது. வர்த்தக நோக்கானது, விரிந்த உலகு பற்றிய தரிசனத்துக்கு வாய்ப்புத் தந்தது. இவற்றின்வழியாகக் கல்வியானது மேலும் பரந்த பரிமாணங்களைப் பெறலாயிற்று.

"பற்பல நாடும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றதின் காழ் இனியது இல்"[7]

என்று விளக்கப்படலாயிற்று.

புலன்கள் வழியாகப் பெறப்படும் கல்வி, புலன்கள் கடந்த உள்ளுணர்வின் வழியாக ஈட்டப்படும் கல்வி என்றவாறான பிரிவுகள் மேலும் வளரலாயின. புலன் உணர்வுகளால் வழங்கப்படும் கல்வி உலகியல் சார்ந்ததாகவும், புலன் கடந்த உணர்வுகளால் நெறிப்படுத்தப்படும் கல்வி தெய்வீகம் சார்ந்ததாகவும் வளர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வளர்ச்சியானது ஆசிரியத்துவ வளர்ச்சி என்ற குறியீட்டினாற் புலப்படுத்தப்படும்.

" தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கட்டுண்ட புகழ் சால் சிறப்பின்
நிலந்தரு திருவினெடியோன்"[3]

என்ற அடிகளினால் நீண்ட நெடிய ஆசிரியப் பரம்பரை பண்டைய தமிழகத்தில் நிலவிவந்தமை புலனாகின்றது. நல்லாசிரியர் வரிசையிலே தொல்காப்பியனார் சிறப்பித்துக் கூறப்படுகின்றார். ஆசிரிய மரபு வளர்ச்சியடையும் போது, அவர்கள் வலியுறுத்திய கருத்துக்களைப் பேணும் கல்விச் செயற்பாடும் வலியுறுத்தப்படலாயிற்று.

" நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரமென்ப".[9]

ஆசிரிய வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும், மேலும் தொழிற் பிரிவுகளுடனும், சிறக்கும் இயல்புகளுடனும் இணைந்தன. சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சி தொழிற் பிரிவுகளின் பரிணாம வளர்ச்சி என்றும் கூறுவர். தொழிற் பிரிவுகளின் வளர்ச்சியோடு இணைந்த கல்விச் செயற்பாடுகள் பண்டைய தமிழகத்தில் இடம் பெற்றமைக்குச் சான்றுகள் உள்ளன.

" இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்
சமயக் கணக்கருந் தந்துறை போகிய
அமயக் கணக்கரும்"[10]

என்ற அடிகள் மேற்கூறிய வளர்ச்சியைப் புலப்படுத்தும்.

பிரபஞ்சத்தைத் தேடல், தொடக்ககாலக் கல்விச் செயற்பாடுகளில் உலகனைத்திலும் காணப்பட்ட ஒரு பொதுப் பண்பாகும். விண்மீன்களது இயல்பும் அசைவும் பற்றிய தேடல் பண்டைய விவசாயச் சமூக அமைப்பின் பொருளுற்பத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டு இருந்தது. மழையும், வெய்யிலும், காற்றும், புயலும், கோள்களின் இசைவுகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகொண்டிருக்க முடியுமா என்ற வினாக்கள் எழுப்பப்பட்டன. இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்டோர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

"செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளி திரி தரு திசையும்
வறிது நிலை இய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர்"[11]

என்ற புறப்பாடலில் பிரபஞ்சம் தொடர்பான தேடலில் ஈடுபட்டோர் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

உலகியற் கல்வி, தெய்விகக் கல்வி, என்ற இருமைப்பாடு கல்விச் செயன்முறையிலே தற்செயலாகத் தோன்றியவை அல்ல. அவற்றின் தோற்றத்துக்கும் சமூகச் செயல்முறைகளுக்கும் இடையே நேர்த் தொடர்புகளைக் காணமுடியும். நிலவுரிமை, சொத்துரிமை என்பவற்றின் வளர்ச்சியும், செல்வப் பங்கீட்டில் ஏற்பட்ட சமமின்மையும் சமூக முரண்பாடுகளாக எழுந்தன. இந்நிலையிற் பொருளுற்பத்தி நிலவுரிமையாளருக்கு இன்றியமையாததாகக் காணப்பட, நிலமற்றோர் பொருளுற்பத்தி பற்றிய உள்ளுணர்வு குன்றி, அந்நியப்பட்டு நின்றவேளை, அத்தகைய ஓர் நியமப்பாடு, உலகியல் உணர்வுகளின் அந்நியமயமாதலாக விரிந்திருக்க இடமுண்டு.

'கலைத் திட்டம்' அல்லது 'பாட ஏற்பாடு' சமூகத்தின் விளைபொருள் என்று குறிப்பிடப்படும். பாட உள்ளடக்கம் சமூக இலக்குகளையும், தேவைகளையும் அடியொற்றித் தீர்மானிக்கப்படுவதால் கலைத் திட்டத்துக்கு நிரந்தரமான வடிவம் இல்லை என்று கூறுவர். அதாவது, சமூக இயல்புகள் மாற்றமடைய, பாடப்பொருளும் மாற்றமடைந்தவண்ணமிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய தமிழகத்திற் கலைத்திட்டம் 'எண்', 'எழுத்து' என்ற இரு துறைகளாகப் பகுக்கப்பட்டிருந் தது. எண் என்பது பரந்த புலங்களை உள்ளடக்கியதாக விளங்கியது. கணிதம், விஞ்ஞானம், வானநூல் முதலி யவை 'எண்' என்ற பிரிவிலே இடம்பெற்றன. 'எழுத்து' என்ற பிரிவிலே இலக்கணம், இலக்கியம், கலைகள், மெய்ஞ்ஞானம் முதலியவை இடம்பெற்றன.

இயல், இசை, நாடகம் என்றவாறான பிறிதொரு கலைத்திட்ட ஒழுங்கமைப்பும் காணப்பட்டது. அறநூல், பொருள் நூல், இன்ப நூல், வீடுபேறு என்ற இன் னொரு கலைத்திட்ட ஒழுங்கமைப்பும் இயங்கிவந்தது. பன்முகப்பட்ட சமூகத் தொழிற்பாடுகள் இடம்பெறும் போது கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் அவற்றின் இயல்பு கள் பிரதிபலிக்கப்படுதல் தவிர்க்கமுடியாததாகும்.

பொருளாதாரவளப் பகிர்விலே பாரிய சமத்துவ மின்மை நிகழும்வேளைகளிலே, பயில்துறைகளிலும் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டமை கைத்தொழிற் புரட்சி யின் பின்னர் உலக நாடுகள் பலவற்றிலே காணப்பட்ட ஒரு தோற்றப்பாடாகும். பூர்வீகக் கல்வியிலே பயில் துறைகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் பாராட்டப்பட வில்லை. ஏனெனில் பயில்துறைகளை அடிப்படையாகக் கொண்ட வேலைவாய்ப்புகள் இடம்பெறவில்லை.

கல்விச் செயற்பாடுகள் மனித ஆளுமை 'வளர்ச்சி யிலே' 'புறநிலைப்படுத்தலை' ஏற்படுத்துகின்றன. புறநிலைப்படுத்தலின் ஒரு பண்பு - தம்மைப்பற்றி பிறர் எவ்வாறு திறனாய்வு செய்கின்றார்கள் என்ற மதிப் பீடாகும். கூட்டுவாழ்க்கையும், குழுவாழ்க்கையும் நிலவிய பூர்வீக சமூகத்திலே தனிமனிதன் என்ற முனைப்பு மேலோங்கவில்லை. அந்நிலையில் சுயமதிப்பீடு வேண்டத்தக்க ஒரு வாழ்வியற் பண்பாக முனைப் படையவில்லை. கூட்டுவாழ்க்கை முறையானது சிதை வடையத் தொடங்கத் தனி மனிதனது ஆற்றலை வியத்தலும், புகழ்பாடுதலும் படிப்படியாக வளர்ச்சி யடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு
நிலை இயபலர புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை".[12]

சமூக வளர்ச்சியூடே நிறுவன 'வடிவமைப்பு' ஒரு பிரதான தொழிற்பாடாக இடம்பெறும். சமூக இடைவினைகளை ஒழுங்கமைப்பதற்கும், வலுவைப் பிரயோகிப்பதற்கும், பரிமாற்றங்கள் செய்வதற்கும் நிறுவன ஒழுங்கமைப்பு இன்றியமையாதது. தென் மதுரை, கபாடபுரம், மதுரை ஆகிய இடங்களில் நிறுவனமயப் பட்டுக் கல்வி ஒழுங்கமைக்கப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன.

அதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் கடிகைகள், அக்ரகாரங்கள், மடங்கள் போன்ற உயர் கல்விக்கூடங்கள் செயற்பட்டன. எண்ணாயிரம் திருமுக்கூடல், திருவொற்றியூர், புன்னவாயில், திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், நல்லூர் போன்ற இடங்களில் கோயில்களுடன் இணைந்த உயர் கல்விக்கூடங்கள் இயங்கின.

கல்வி நிறுவனங்கள் நிலைபேறு கொள்வதற்குரிய 'உள்ளீடு' முக்கியமானதாகும். நவீன கைத்தொழிற் சமூக அமைப்பிலே கல்வியானது தனி மனிதனுக்குரிய நம்பகரமான முதலீடாக இருப்பதால் நிறுவனங்களுக்குரிய நிதிவளம் தொடர்ச்சியாகக் கிடைக்கக் கூடியதாக உள்ளது. பண்டைய கல்வி நிறுவனங்கள் முற்றிலும் அரசரையே நிதிப் பலத்துக்கும், பொருட் பலத்துக்கும் நம்பியிருந்தன. அரசுகள் நெருக்கடிகளை அனுபவித்த வேளைகளிற் கல்வி நிறுவனங்களும் பாதிப் படைந்தன.

## கல்வியின் விரிவு:

### அறக்கல்வி

பூர்வீக அற ஒழுங்குகள் பற்றி ஆராயும்பொழுது அறமும், ஒழுக்கமும், வாழ்க்கை நியமங்களும் சொத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரிமையுடன் தொடர்புகொண்டிருந்தமை புலனாகின்றது.[13] சொத்துரிமையை நிலை நிறுத்துவதற்கு அறக்கல்வி தவிர்க்க முடியாது வேண்டப்படுகிறது. இதன் வழியாக சமூக ஒழுங்கமைப்பின் செயற்பாடு நெகிழ்ச்சியுடையதாக ஆக்கப்பட்டது.

ஆரம்பகால அறவொழுக்கள் 'நடத்தை' சார்ந்த நிலையில் இருந்தன. சூக்குமமான அல்லது அருவமான ஒழுக்கங்கள் - உதாரணமாக தீயவற்றைச் சிந்திக்கா திருத்தல்-கூட்டுச்சமூக அமைப்பின் வீழ்ச்சியின் பின்னரே ஏற்பட்டன. ஆரம்பநிலை அறம் தொழிற்பாடு சார்ந்த அதாவது உருவ வழியான அறமாக விளங்கியது.

பாலியல் சார்ந்த ஒழுக்கக் கல்வியை வலியுறுத்தல் எந்த ஒரு சமூகத்தின் கட்டுக்கோப்புக்கும் இன்றியமையாததாகும். சங்ககாலப் பாலியல் ஒழுக்கத்துக்கும், சங்கமருவிய காலப் பாலியல் ஒழுக்கத்துக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் வர்த்தக வளர்ச்சியின் காரணமாகத் தமிழ் நாட்டில் ஏற்பட்ட விழுமிய மாற்றங்களைச் சுட்டிக் காட்டுகின்றன.

பண்டைய குலக்குழுச் சமூகத்தின் குழு உறுப்பினர்கள் அனைவரும் உறவினராகவும், பரஸ்பர ஒத்துழைப்புடனும் வாழ்ந்தனர். தனியுரிமை பாராட்டப்படாத நிலையில் முரண்பாடுகளும் போட்டியும் அரிதாகவே காணப்பட்டன. உள முரண்பாடுகள், மனவெழுச்சிக் குழப்பங்கள் சிக்கலற்ற முறையிலே தீர்த்துவைக்கப்படத்தக்க 'உறவுப்பலம்' காணப்பட்டது. போட்டியும், எதிர்பார்ப்புக்களும், மிகையாதிக்கம் செலுத்தாத நிலையில் மனவெழுச்சிக் குமுறல்கள் பெரும் விசையுடன் தொழிற்படல் அரிதாகும்.

கைக்கிளை, பெருந்திணை முதலிய பாலியல் சார்ந்த உள நெருக்குவாரங்கள், நிலவுரிமை வளர்ச்சி, சிற்றரசுகளின் வளர்ச்சி, பண்டைய வணிகத்தின் விரிவு முதலிய சமூக நிகழ்ச்சிகளுடன் ஏற்படலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மாற்றங்களோடு சமாந்தரமாக கருவிகள் செய்யும் திறனிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டன. மேலும் முன்னேற்றகரமான கருவிகள் கண்டறியப் பட்டமைக்குக் கல்விச் செயற்பாடுகள் உறுதுணையாக இருந்தன. புதிய கருவிகளின் ஆக்கமும், பழைய கருவி களை முன்னேற்றமான முறையில் அமைத்தலும் விரி சிந்தனையுடன் இணைந்த கல்விச் செயற்பாடாகும். விரி சிந்தனையானது 'ஆக்கச் சிந்தனை' என்றும் குறித் துரைக்கப்படும். விரி சிந்தனையின் வளர்ச்சியை சங்க நூல்களும், சங்கமருவிய நூல்களும் தெளிவு படுத்து கின்றன.

சங்க மருவிய நூல்களிலே இடம்பெறும் ஓசைச் சிறப்பானது, கவிதைத் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றது. இவ்வகை முன் னேற்றம் கல்வி அனுபவ இருப்பில் ஏற்படும் முன்னேற்ற மாகக் கொள்ளப்படும். கருவி ஆக்கங்களிலே ஏற்படும் முன்னேற்றமும் கல்வி அனுபவ இருப்பில் ஏற்படும் வளர்ச்சியாகக் கொள்ளப்படும். கருவித் தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கும், கவிதைத் தொழில்நுட்ப முன் னேற்றதத்துக்குமிடையே பல ஒப்புமைகளைக் காண முடியும்.

இரும்பினால் ஆகிய கூரிய ஆயுதங்களின் பயன் பாடு புறநாநூற்றுப் பாடல்களிலே பரந்து காணப் படுகின்றன. புதிய கருவிகள் சமூகத்திலே பயன்படுத்தப் பட, அவற்றோடிணைந்த அறக்கருத்துக்களும், ஒழுக்க நெறியும் வற்புறுத்தப்படலாயிற்று. இரும்புக் கருவி களின் உபயோகம் தனிமனித பலத்துடன் இணையும் போது எழுந்த வீரர்களின் தோற்றம் புதிய சமூக சமநிலைக்குரிய அற வற்புறுத்தலின் தேவையை உணர்த்தி நின்றன.

அரசின் வளர்ச்சியோடு சமூகத்திலுள்ள முதி யோரின் அதிகாரங்கள் பலங்குன்றத் தொடங்கின. இந்நிகழ்ச்சியானது கல்விச் செயல்முறையிலும் மாற்றங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஏற்படுத்தியது. அரசை நிலைநிறுத்துவதற்குரிய சட்டங்களும், ஒழுங்குகளும், அறக்கருத்துக்களும் வற்புறுத்தப்படலாயின. இதன் வளர்ச்சியைத் திருக்குறள் தெளிவாகப் புலப்படுத்தும். திருக்குறளில் மூத்தோர் தொடர்பான வற்புறுத்தலிலும் அரசு பற்றிய வற்புறுத்தலே மேலோங்கிக் காணப்படுகிறது.

சமூகத் தொழிற்பாடுகளில் சிக்கலாகிய தன்மை, அரசின் இன்றியமையாமையை வலியுறுத்துவதற்கு உரிய கல்விச் செயற்பாடுகளுக்கு இடமளித்தது. அரசர்க்குரிய கல்வி, மதிநுட்பம் மிக்க அமைச்சுக்குரிய கல்வி, என்ற வாறான பரிமாணங்கள் ஏற்படத் தொடங்கின. சூழ்ச்சி, மறைவான நுட்பங்கள், ஒற்றாடல் தொடர்பான அறிவு வலியுறுத்தப்பட்டது.

அறிவும், அனுபவங்களும் பொதுச் சொத்தாக விளங்கிய நிலை மாற்றமடைந்து, அறிவின் தனியுரிமைக் கோலங்கள் வளர்ச்சியடைந்தமை மேற்கூறிய நிகழ்ச்சி களினாற் புலனாகின்றது.

மனிதனது பிறப்பும், இறப்பும், அறிவு வளர்ச்சி யினூடே மேலும் புதிர்களாக அமைந்தன. பிரபஞ்சம் பற்றிய ஆய்வு முடிவில்லாத தேடலாக அமைந்தது. இந்நிலையில் மனித ஆற்றல்களையும் மீறிய வலுக்கள் பற்றிய சிந்தனை எழுந்தது. இறந்தோர் தமது ஆற்றல் களை 'ஆவி' வடிவிலே பிரயோகிக்கலாம். அல்லது அவரது வீரத்தை தாமும் அடையலாம் என்ற நம்பிக் கையின் வழியாக 'நடுகல் வழிபாடு' தோன்றலாயிற்று. வீரனைப் புதைத்த இடத்தில் ஒரு கல்லை நட்டு அதனை வழிபாடு செய்தல் நடுகல் வழிபாடு எனப் பட்டது. ஆனால் இந்த ஏற்பாடானது மனிதரையும் மீறிய வலுக்கள் பற்றிய தேடலுக்கு திருப்தியைக் கொடுக்கவில்லை.

பெரும் வீரர்களும் எதிர்பாராத இயற்கை ஆபத் துக்களினாலே தாக்கப்படும்பொழுது மானுடம் கடந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலு பற்றிய சிந்தனை மேலும் முனைப்படைந்தது. பயிர்ச்செய்கை சமூக அமைப்பிலே கிடைத்த ஓய்வு நேரம் இவ்வாறான ஆய்வுகளுக்கு மேலும் தூண்டுதல் களைக் கொடுத்தது. சமயம் நிறுவனமயப்பட்டு வளர்வதற்குரிய ஆற்றல்களும் பயிர்ச்செய்கை சமூக அமைப்பிலே கிடைத்தன. இவற்றின் தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் பல்லவர் காலத்திலே விரிவடைந்த பக்திக் கல்வி வளர்ச்சியிலே காணமுடியும்.

ஆலயங்களையும் மடங்களையும் நிலைக்களன் களாகக் கொண்ட உயர்கல்விச் செயற்பாடுகள் பல்லவ மன்னர் ஆட்சிக் காலத்திலே விரிவாக இடம்பெற்றன.

பௌதிக நிலைப்பட்ட புறச் செயல்முறையில் நிகழும் மாற்றம், உளச் செயல்முறையில் நிகழும் மாற்றமாகப் பதியப்படும். இந்தச் செயல்முறையில் கல்வி நடவடிக்கைகள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன உள வாழ்க்கையானது சூழலுடன் இடைவினைகளைக் கொண்டுள்ளமை போன்று தாம் தேக்கி வைத்துள்ள நினைவுகளுடனும் உள்ளார்ந்த இடைவினைகளைக் கொள்ளும். இவற்றின் விளைவாக அறிவும், மனமும் மேலும் விரிவாக்கம் பெறும். இவ்வாறான இடைவினைகளை ஒழுங்கமைத்தல் கல்விச் செயன்முறையின் தேவையாகக் கருதப்படும். சிந்தனை ஒழுங்கமைப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இலக்கண ஆக்கங்கள் விளங்குகின்றன.

கல்விச் செயல்முறையின் வளர்ச்சி 'அருவமாக்கல்' என்ற உள நடவடிக்கைகளுக்கு வலு ஊட்டுவதாக அமையும். அருவமாக்கல் என்பது இரண்டு வகையாகப் பாகுபடுத்தப்படும். அவையாவன:-

அ) பொதுமைப் படுத்தப்படும் அருவமாக்கல்
ஆ) சமர்ப்பண அருவமாக்கல்.

பொதுமைப்படுத்தப்படும் அருவமாக்கல் என்பது அங்கீகரிக்கப்பட்ட தருக்க ஒழுங்கு அமைப்பையும்,

131094



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு வரையறை செய்யத்தக்க பண்புக் கூறுகளையும் கொண்டிருக்கும். அறம், பொருள், இன்பம் என்று திருவள்ளுவர் குறிப்பிடும் அருவமாக்கல் பொதுமைப் படுத்தப்படும் அருவமாக்கலுக்கு எடுத்துக்காட்டுக ளாகும்.

சமர்ப்பண அருவமாக்கல் என்பது கல்வியில் ஒரு புத்தாக்க நடவடிக்கையாகும். கூடிய அகவயப் பாங்கானதாகவும், மனவெழுச்சி பூர்வமானதாகவும் இது அமையும். காரைக்கால் அம்மையாரின் பாடல் களில் இதன் வளர்ச்சியையும், நாயன்மார்கள், ஆழ்வார் கள் ஆகியோரின் பாடல்களில் இதன் செறிவையும் காணலாம்.

தெய்விகம் சார்ந்த கல்வி வளர்ச்சியானது மேலும் கூடுதலான அருவமாக்கலுக்கு இட்டுச்செல்லும். அதாவது புலனறி காட்சி வடிவில் அல்லது உருவ வடிவிலே காட்டமுடியாத இடர்ப்பாடு தெய்விக அனுபவங்களிலே தோன்றும். இதன் காரணமாகப் பக்திப் பாடல்கள் மிகவும் கூடுதலான அருவமாக்கற் செறிவுடையதாகக் காணப்படும்.

எண்ணக் கருக்களின் குறியீடாகவே சொற்கள் விளங்குகின்றன. பக்தி இலக்கியங்களிலே சொற்களுக் குரிய பாரம்பரியமான உணர்ச்சிப் பாய்ச்சலுக்கும் மேலான அனுபவங்களைத் தரும் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனவெழுச்சிகளையும், உணர்ச்சிகளையும் மொழி வடிவில் ஆக்கும் மீளாக்கத் திறன் உயர்ந்த கல்வி நடவடிக்கையின்பாற் பட்ட தாகும். இந்நிலையிற் பக்தி இலக்கியங்கள் பெருக் கெடுத்த காலப்பகுதியில் தமிழகத்திலே நன்கு ஒழுங்கு அமைக்கப்பட்ட உயர்கல்விச் செயற்பாடுகள் சமாந்தர மாக இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

தெய்விக உணர்ச்சிகள் மொழி என்ற கருவியி னூடாக வெளியிடப்படும்பொழுது, புலக்காட்சி, புலன் கடந்த காட்சி, உயர்நிலையான சிந்தனைத் தொழிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடு என்பவை மாத்திரமன்றி உயர்நிலையான மொழிக் கட்டுக்கோப்பினை வலியுறுத்தும் கல்வி நடவடிக்கைகளும் இன்றியமையாது வேண்டப்படுகின்றன.

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாட மறந்தறியேன்''[14]

என்று திருநாவுக்கரசர் கூறுதல் வரன் முறையான கல்விக் கட்டமைப்பினை ஒருவகையிற் சுட்டிக் காட்டுவதாகவுள்ளது.

## ஒன்றிணைந்த கல்வி

இலக்கியக்கல்வி, அறக்கல்வி, இலக்கணக்கல்வி என்பவை விருத்தியடைந்திருந்தமை போன்று அறிவியற் கல்வி அல்லது விஞ்ஞானக்கல்வியும் விருத்திபெற்றிருந்தது. தொல்சீர் அறிவியற் சிந்தனைகள் பிற துறைகளுடன் 'ஒன்றிணைந்த' சிந்தனைகளாக இருந்தன. குழுக்களுக்கு எதிரான போராட்டம், உடல் நோய்களுக்கு எதிரான போராட்டம், பயிர் வளர்ப்பின் போது இயற்கைக்கு எதிராக நிகழ்ந்த போராட்டம் முதலியவை அறிவியல் வளர்ச்சிக்குத் தூண்டுதலளித்தன.

நிலத்தை வகைப்படுத்தல், காலத்தை வகைப்படுத்தல், தாவரங்களையும் விலங்குகளையும் வகைப்படுத்தல் என்றவாறு 'பகுப்பாய்வு' செய்யும் அறிவியற் சிந்தனை கல்விச் செயற்பாட்டிலே காணப்பட்டது. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களால் பிரபஞ்சம் உருவானது என விளக்கப்பட்டது. சூரியன் மறைவும் தோற்றமும், சந்திரன் தேய்தலும், வளர்தலும், ஒருவகையான வட்டப்பாதையில் நிகழும் சுழற்சி என்பது உணரப்பட்டது. வட்டத்தைக் குறிக்கும் 'வட்டி' என்ற எண்ணக்கரு புறநானூற்றிலே காணப்படுகின்றது.

அறிவியலின் அடிப்படையாக விளங்கும் கணித எண்ணக்கருக்கள் பற்றிய அறிவும் பண்டைய தமிழகத்திலே காணப்பட்டது.[15] எண், கணக்கு, பத்து, பெருக்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கம், பரப்பு, கொள்ளளவு, நிறுத்தல் அளவு, சமன்பாடு முதலாம் எண்ணக் கருக்கள் சங்கப் பாடல்களிலே காணப்படுகின்றன.

கணித அறிவு, வானியல் அறிவு ஆகியவை, ஒன்றிணைந்திருந்தன. நட்சத்திரங்கள், கோள்கள் என்பவை கணித அறிவினூடாக வேறுபடுத்திக் காட்டப்பட்டன. வானியல் ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளன் 'கணியன்' என அழைக்கப்பட்டான்.[16] கணியன் பூங்குன்றனார் பற்றிய தகவல்கள் புறநானூற்றிலே கிடைக்கப்பெறுகின்றன. நாள், வாரம், ஆண்டு என்றவாறான கணிப்பு இடம்பெற்றது. ஒருநாள், அறுபது நாழிகைகளாகப் பகுக்கப்பட்டது.

வானியலும், மருத்துவமும் ஒன்றிணைந்திருந்தது. வாழ்வியல் அனுபவங்கள் யாதாயினும் ஒரு தனிமத்தினால் மட்டுமன்றி, ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பல்வேறு ஒன்றிணைப்புகளின் வழியாக உருவெடுத்தல் கண்டறியப்பட்டது. மூலிகைகளை அடிப்படையாகக் கொண்ட மருந்தாக்கல் முறையே தமிழகத்தில் பெருவழக்காக இருந்தது.

கணிதவியல், மருத்துவம், வானியல், புவியியல் என்பவற்றுடன் இணைந்த வகையிற் கட்டடக் கலைக் கல்வியும், பண்டைய தமிழகத்தில் நிலவியதென்பதைப் பட்டினப் பாலையை ஆதாரமாகக் கொண்டு விளக்குவர். மரக்கலம் கட்டல் தொழில்நுட்பமும் வளர்ச்சி பெற்றிருந்தது என்பதை, தொண்டை, புகார் போன்ற துறைமுக விவரணங்களினால் அறியக் கூடியதாக இருக்கிறது.

அறிவியற் கல்வியும், அழகியற் கல்வியும் ஒன்றிணைந்த வகையிலே சமூகச் செயல்முறைகள் இடம்பெற்றன. அழகியற் கல்வியை வளம்படுத்துவோராகப் பாணர் விளங்கினர். 'பண்' என்பதிலிருந்தே பாணன் என்ற சொல் உருவானது. 'பண்' என்பது பழந்தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசையைக் குறிப்பதாயிற்று. மானிடவியல் நோக்கில் பார்க்கும்போது நிலப் பண்படுத்தலுடன் இந்த எண்ணக்கரு தோன்றியிருக்க முடியும்.

செல்வப் பங்கீடு சமனாக அமையாத சமூக அமைப்பிலே அழகியற் கல்வியில் ஈடுபட்டோரிடத்து முரண்பாடுகள் தெளிவாகப் புலப்படும். கலைஞர்கள் ஒரு சிலர் வறுமையில் வாட, வேறு சிலர் செல்வத்திலே வாழ்தல் இன்றும் காணக்கூடிய ஒரு சமூக நிகழ்ச்சியாகும். இத்தகைய பண்பு சங்ககாலப் பாணர்களிடத்தும் காணப்பட்டது. மந்தைப் பாணர் வறுமையில் வாட பெரும்பாணர் வசதி கொண்டோராய் வாழ்ந்தனர். மந்தைப் பாணர் நாடோடிச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர். பெரும் பாணர் பயிர்ச்செய்கைச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினர் என்று கொள்ள இடமுண்டு.

பாணர்களே இசைக்கருவி மீட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 'யாழ்' அக்காலத்தைய பிரதான இசைக்கருவியாக விளங்கியது. இசைக் கருவிகளை மீட்கும் பெண்பாலர் 'விறலியர்' எனப்பட்டனர். நாடோடி வாழ்க்கை குறிக்கும் பொருளாதார நடவடிக்கைகளில் ஆண், பெண் சமூக பாத்திர வேறுபாடுகள் பெருமளவில் வேறுபடவில்லை. இந்நிலையில் பாணரும், விறலியரும் ஒன்றாகக் கூடி இசைக்கருவிகளை மீட்டினர். ஆனால் பயிர்ச்செய்கைச் சமூக அமைப்பில் ஆண், பெண் சமூகப் பாத்திர வகைகள் வேறுபடத் தொடங்கின.

நாடோடி வாழ்க்கைப் பின்புலம் இசை வளர்ச்சிக்குத் துணையாக இருந்தமை போன்று கூத்தின் வளர்ச்சிக்கும் உதவியது. நாடோடி வாழ்க்கையை மேற்கொண்ட கூத்தனும் கூத்தியும் நடனமாடிப் பிழைப்போராயிருந்தனர். மகிழ்வித்தலும் அறிவூட்டலும் கூத்தின் பிரதான பரிமாணங்களாக விளங்கின. நாடோடிக் கூத்துக்கள் கூட்டுணர்வை வெளிப்படுத்தின. குழு உறுப்பினர் அனைவரும் கூத்தின் பங்காளிகளாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு என்ற நிறுவன வளர்ச்சியோடு எழுந்த சமூக முரண்பாடு கூத்து வடிவங்களிலும் வெளிப்படலாயிற்று. சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவற்றில் 'வேத்தியல்', 'பொதுவியல்' என்ற இரு கிளைகளாகக் கூத்து வளர்ந்தமை அழகியற் கல்வியில் ஏற்பட்ட இருமைத் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறது.

## உயர்கல்வி

அரசு என்ற நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் உயர் கல்வி வளர்ச்சிக்கும் நேரடியான தொடர்பு உண்டு. சோழப்பெருமன்னர் ஆட்சிக் காலத்தில் உயர்கல்வி நிறுவனங்கள் செழித்து வளர்வதற்குரிய சந்தர்ப்பங்கள் இருந்தன. உயர்கல்வியின் வளர்ச்சியானது பிறமொழிகளின் அறிவுத் தேட்டங்களைத் தாய் மொழிக்குக் கொண்டுவரும் நடவடிக்கையை ஊக்குவிக்கும் ஒரு செயலாக அமையும். உலக உயர் கல்வியிலே காணப்படும் இந்தத் தோற்றப்பாடு தமிழ் நாட்டுக்கும் ஏற்புடையதாகும். வடமொழிச் செல்வாக்குத் தமிழ் மொழியில் ஒப்பீட்டளவிற் கூடுதலான இடம் பெற்றமைக்கு உயர்கல்விச் செயற்பாடுகள் தளமாக அமைந்தன.

வர்த்தக வளர்ச்சியும், நகர வளர்ச்சியும் என்றவாறான புறநிலை விரிவாக்கம், உயர்கல்வி விரிவாக்கத்துக்குத் தூண்டுதலளித்தது. அரசு என்ற நிறுவனத்தின் வளர்ச்சியைப் பலப்படுத்தும் வண்ணம் அமைந்த சமயங்களும் நிறுவனமயப்பட்டுப் பலமடைந்த காலப் பகுதியாகச் சோழர் காலம் விளங்குகின்றது.

பண்டைய இலக்கியங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. காவியங்கள் எழுதப்பட்டன. பெருங் கோயில்கள் அமைக்கும் கட்டடக்கலை வளர்ந்தது. பெரும் வடிவங்களை உருவாக்கும் ஆக்க உந்தல்களுக்குரிய ஏற்பாடுகள் பேரரசினால் வழங்கப்பட்டன. உயர்கல்விச் செயற்பாடுகள் பயனுடைமையை வலியுறுத்தின. சோழர் காலத்துச் சிற்பங்கள் உருவத்தையும் பயனையும் வளம்படுத்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரரசின் வளர்ச்சி, வர்த்தக விரிவாக்கம், நிலவுரிமை ஒழுங்குபடுத்தல் என்பவற்றோடு இணைந்த தாக இலக்கணக் கல்வியின் முக்கியத்துவம் எடுத்துக் கூறப்படலாயிற்று வரன்முறையான கல்வியில் இலக் கணத்தின் முக்கியத்துவம் வற்புறுத்தப்பட்டது; இயற்கை ஆற்றலும் போதனை தொடர்பான ஆற்றல் களும் விளக்கப்பட்டன. ஆசிரியர், மாணவர் இயல்புகள், கற்பித்தல் முறையியல்கள் முதலியவை மீளாய்வு செய்யப்பட்டன.

உயர் கல்வியானது அது செயற்படும் சமூகம் சார்ந்த கருத்துநிலை உருவாக்கத்தை முன்னெடுப்ப தாகச் செயற்படும். சமூக இடைவினைகளும், கல்வியும் ஒன்றிணைந்து, உலகு, அரசு, சொத்து, அறம், தெய்வம் தொடர்பான கருத்து நிலைகளை உண்டாக்குவதற் குரிய தளத்தை வகுத்துக்கொடுக்கும் இலக்கியம், சிற்பம், ஆலயம் முதலிய குறியீடுகள் சோழர்காலச் சமூகக் கருத்தியலின் குறியீடுகளாக விளங்குகின்றன.

சமூக மேனிலையில் உள்ளோர் தமது மேலாண்மையைப் பாதுகாப்பதற்குச் சிறப்பாக உயர் கல்வியைப் பயன்படுத்தல் இயல்பாகும். இவ்வகையிற் பார்க்கும்பொழுது உயர்கல்வியானது ஒரு சிலருக்கு மட்டும் உரிய சுருங்கிய நடவடிக்கையாகும். அரசர்கள், பிரதானிகள், மந்திரிகள் முதலிய உயர் குழாத்தினர் தமது சேவையை வலுப்படுத்துவதற்குரிய ஆற்றல் மிக்க வர்களைத் தமது குழுவில் இருந்து உருவாக்குவதற்கு உயர்கல்வி நிறுவனங்களை வடிவமைத்தனர். பண்பாட்டு வரலாற்றாசிரியர்கள் சோழர் காலத்திலமைந்த வினைத் திறன் மிக்க நிருவாக சேவையை விதந்து குறிப்பிடு கின்றனர்.[17]

அக்காலத்தில் நிலவிய உயர்கல்விச் செயற்பாடு கள் அனைத்தையும் தொகுத்துக் கூறும் ஓர் ஆவண மாக நன்னூல் விளங்குகிறது.[18] முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என நூல்கள் வகுத்துக் கூறப்படுவதையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்திரண்டு உத்திகள் விளக்கப்படுவதையும் நல்லாசிரிய இலக்கணம், மாணவரிலக்கணம் விவரிக்கப்படுவதையும் நோக்குப்பொழுது நன்கு வடிவமைக்கப்பட்ட உயர்கல்விச் செயற்பாடுகளை அறிந்துகொள்ள முடிகிறது.

ஆசிரியராகாதவரின் இலக்கணம், மாணாக்கராகாதவரின் இலக்கணம் முதலிய பண்புகள் (எதிர் மீள வலியுறுத்திகளினால்) விளக்கப்படுதல் சமூகத்தில் ஒரு சாரார்க்கு முறைசார் கல்விப் புறக்கணிப்பு நிகழ்ந்த தகவலைத் தெரியப்படுத்துகிறது.

கற்றறிந்த சான்றோரின் அங்கீகாரத்துக்கு நூல்களைச் சமர்ப்பித்தல் உயர்கல்விச் செயற்பாட்டைப் பிறிதொரு வகையில் வெளிப்படுத்தும் குறியீடாகக் கொள்ளத்தக்கது.

"முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்-என்றும்"
"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே"

என்றும் நன்னூலிலே விளக்கப்படுகிறது.[19]

சமூகவியற் கண்ணோட்டத்திற் கல்வியை ஆராய்கின்றவர்கள் மேல்நோக்கிய சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தும் வலிமையான ஒரு காரணியாகக் கல்விச் செயல்முறையைக் கொள்ளுவார்கள். கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னரே இந்த அசைவியக்கத்தை உலகெங்கிலும் காணமுடியும். நிலமானிய சமூக அமைப்பில், சமூகக் கட்டுக்கோப்பினைத் தளராது கட்டிக்காக்கும் சாதனமாகவே கல்விச் செயல்முறை வடிவமைக்கப்பட்டிருந்தது.

"எப்பொரு ளெச் சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே".

என நன்னூல் விளக்குகிறது.[20]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பொதிந்த முரண்பாடுகள் சமூக இயக்கத்தை எப்பொழுதும் தூண்டிய வண்ணமிருக்கும். ஒரே காலத்தில் மரபுகளைக் கட்டிக் காப்பதற்குக் கருவியாகப் பயன்படும் கல்வியானது மறுபுறத்தில் மாற்றத்துக்குரிய சாதனமாகவும் பயன்படும். இது கல்வியின் இரட்டைப் பயன்பாடாக விளக்கப்படும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்பதும் நன்னூலிலே காணப்படுகிறது [21]

## கல்வியும் மானுட நேயமும்

மேற்கு நாடுகளில் வரலாற்று நிகழ்ச்சிகளாகிய கல்வி மறுமலர்ச்சியும் கைத்தொழிற் புரட்சியும் கல்விச் செயன்முறையை வளர்த்தமை போன்ற ஒப்புமைகளைத் தமிழர் கல்வி வளர்ச்சியிலே காணமுடியாதுள்ளது. தமிழரது கல்வி வரலாற்று நிகழ்ச்சிகள் 'ஆசிய முறைமை'ச் சமூகவியற் பண்புகளைத் தழுவியதாகப் பெருமளவிலே செயற்பட்டது

கல்விச் செயல்முறையானது ஒரு சமூகச் செயல்முறையாகும். ஒருவன் சமூகமயமாக்கப்படுவதற்குக் கல்வியே துணை செய்கிறது. சமூக அனுபவங்கள், விருப்பங்கள், இலக்குகள், மனோபாவங்கள் முதலியவை கல்விச் செயன்முறையினூடாக வழங்கப்பட்டுச் சமூகமயமாக்கல் ஒழுங்கமைக்கப்படும்.

பிறரது விருப்பங்களுக்கமைய ஒருவன் உருவாக்கப்படுவதற்கு உதவும் வகையிற் கல்விச் செயன்முறை இயங்கி வந்துள்ளது. இதனை வேறுவிதமாகக் கூறுவதானால், சமூக நிரலமைப்பின் இயல்பே தனிமனிதருக்குரிய கல்வியை நெறிப்படுத்துவதாக அமைகின்றது. இவற்றோடிணைந்திருந்த இன்னொரு கல்விச் செயற்பாடானது 'பழக்க வழக்கங்கள்' பற்றிய அறிவை வழங்குதலாகும். பழக்கவழக்கங்கள் ஒவ்வொருவராலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நிரல் ஒழுங்கமைப்பிற்கேற்றவாறு நெறிப்படுத் தப்படுகின்றன. ஒவ்வொருவரதும் செயற்பாடுகளுக் குரிய தூண்டியாக பழக்கவழக்கங்கள் அமைகின்றன. இவற்றின் வாயிலாக மனவெழுச்சிகள் கட்டுப்படுத்தப் படுகின்றன.

சிந்தனைகளில் தெய்விக உணர்வு மேலோங்கி யமைக்குச் சமூகப் பின்புலம் பின்னணியாக அமைந்தது. கல்வியிலே தெய்வீக நோக்கின் வற்புறுத்தலானது 'மனம்' என்ற எண்ணக்கருவின் வளர்ச்சியோடு முனைப் படையத் தொடங்குகிறது. தெய்வீகக் கல்வியானது உலகியலை முற்றிலும் புறக்கணித்து உருவாகவில்லை. உலகியல் ஈடுபாடுகள் 'பொறாமை' உணர்வுகளை பெருமளவிலே தூண்டுவதற்கு பொருட்களை ஒருவர் தனக்கென வைத்திருக்கும் உரிமையும் ஆற்றலும் காரணங்களாக அமைந்தன. இந்நிலையிற் கல்வி மூலமாக ஒருவித மனச்செம்மைப்பாட்டை உருவாக்க முடியு மென ஆய்வறிவாளர் கருதினர்.

"அழுக்காறிலராய் அழுக்கறுக்கும் கல்வி"[22]

என்றவாறு கல்வியின் நேர்முகமான பணிகள் எடுத்துக் கூறப்பட்டன. தெய்வீகத்தை உன்னத நோக்காகக் கொண்ட கல்விச் செயற்பாடுகளிலே உண்மை, பொறுமை, அகன்ற நோக்கு, சகிப்புத்தன்மை, அன்பு, பரிவு, கூட்டுறவு, ஒத்துழைப்பு, சாந்தி, சமாதானம், தர்மம், இன்னா செய்யாமை முதலிய எண்ணக்கருக்கள் வலியுறுத்தப்பட்டன.

இவற்றின் வாயிலாக ஒருங்கிணைந்த சீரிய ஆளுமை வளரும் என்று கருதப்பட்டது. தனிமனித நெருக்குவாரங்களையும் சமூக விறைப்புக்களையும் இவற்றினாலே தீர்த்துவைக்க முடியும் என நம்பப் பட்டது. தெய்வீக நோக்கு, மானுடநேயம் என்பவை ஒன்றிணைந்த முழுப்பொருளாகத் திரண்டெழுந்தன. பண்டைய பனுவல்களை ஆழ்ந்து கற்றலும், அவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப் பொருண்மை கொண்டனவாக அமைத்தலும், தெய்வீகத்தைத் தேடுதலும் உண்மை விளக்கங்களாகக் கருதப்பட்டன.

''மன்னதிகை வாழும் மனவாசகங் கடந்தான்
மின்னனையார் வாழ்விலுறா மெய்கண்டான்-பன்மறைகள்
வண்மைதரும் ஆகமநூல் வைத்தபொருள் வழுவா
உண்மை விளக்கஞ் செய்தான் ஊற்று''.[23]

தனிமனிதர் ஒவ்வொருவரதும் தனித்துவமான ஆற்றல்களை வளர்ச்சியடையச் செய்தல் கல்வியின் உயர்ந்த நோக்காகக் கருதப்பட்டது. கல்வி வாயிலாக ஒவ்வொருவரும் தத்தம் இயல்புகளை வெளிப்படுத்த முடியும். ஒவ்வொருவரும் தம்மை உருவாக்கும் சிற்பிகளாக மாறுவதற்குக் கல்வி துணையென நம்பப்பட்டது. கல்வியின் வழியாக ஒருவர் தமக்குரிய தலை விதியைத் தீர்மானிக்க முடியும்.

தனிமனிதருக்குரிய உடல், உள்ளம், மனவெழுச்சி ஆகியவற்றின் விருத்தியும் அவற்றின் வழியான தெய்விக நோக்கும் முன்னெடுக்கப்படுவதற்குக் கல்வியின் உதவி வேண்டப்பட்டது. உடல், உள்ளம், ஆன்மா என்பவற்றின் கூட்டிணைப்பாக மட்டும் ஒருவனது ஆளுமை விருத்தி அடைவதில்லை. அவன் சமூக விளைபொருளாகவும் உருவாகின்றான். இவையனைத்தையும் ஒன்றிணைத்து வளர்க்கக்கூடிய கல்விச் செயற்பாடுகளே விரும்பப்படுகின்றன. உறுதியான உடலில் உறுதிமிக்க உள்ளம் உருவாகின்றது. அவ்வாறே மனிதனை மேம்படுத்த வல்ல சூழலில் மனிதவியல்புகள் நேர்முகமான வளர்ச்சியைப் பெறுகின்றன. இவற்றின் அனுசரணையோடுதான் நுண்மதியாற்றல்கள் விரிவடைய வேண்டியுள்ளன.

மானுட நேயத்தை வலியுறுத்தும் தமிழர்களுடைய கல்விச் செயற்பாடுகள் தன்னை உணர்தலையும், தன் வெளிப்பாடுகளையும் உரைத்தன. மானுட நேயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியானது நன்மாணாக்கரை உருவாக்குதலையும், தொல் இலக்கியங்களைக் கற்றலையும் வற்புறுத்து கின்றது. ஒருவன் தன்னை உணர்வதற்கு தொல்சீர் இலக்கியங்கள் துணைநிற்கும் என நம்பப்பட்டது. அதேவேளை புதிய இலக்கிய ஆக்கங்களும் ஊக்குவிக் கப்பட்டன.

"'தொன்மையவாம் என்னும் எவையும் நன்றாக இன்று தோன்றிய நூல் என்னும் எவையும் தீதாக''.[24]

நல்லவற்றைச் சீர்தூக்கியறியும் கல்வி வற்புறுத் தப்படலாயிற்று. நல்ல மனித உருவாக்கம் சீரிய கல்வி யால் ஈட்டப்படத்தக்கது.

கற்றல் என்பது ஆற்றலைப் பெருக்கும் வலு வாகக் கருதப்பட்டது. கல்வியில் முன்னேற்றம் பெறுதல் மனித ஆற்றலில் முன்னேற்றம் பெறுதலாகக் கருதப் படும் நிலை ஏற்பட்டது. சிந்தனையின் வலுவால் மனித மேன்மை நிலைநிறுத்தப்படலாயிற்று. மனிதன் அறிவினால் வளம் மிக்கவனாக மாற்றப்படுகின்றான். கல்வி வாயிலாக மனித விழுமியங்கள் மனிதருள்ளே கட்டி எழுப்பப்படுகின்றன. எத்தகைய ஒரு தொழிலை யும் அறிவே பிரகாசிக்கச் செய்கிறது.

நல்ல உணவை உள்ளீடாகப் பெற்று உடல் வளர்வதைப் போன்று நல்ல அறிவை உள்ளீடாகப் பெற்று நல்ல மனம் வளரும் என நம்பப்பட்டது. சேமித்து வைக்கப்பட்ட அறிவைப் பயன்படுத்தும் திறனைக் கல்வி வழங்குகின்றது. 'மேம்படக் கற்றவர்கள்' தாம் அறிவாளிகள் என்ற மேலோங்குகையும் அகங் காரமும் கொள்ளமாட்டார்கள்.

இவற்றின் பின்புலத்திற் கல்வி வாயிலான தற் கட்டுப்பாடு, மன ஒருமைப்பாடு, அடக்கம் முதலியவை விளக்கப்பட்டன. ஒப்பியல் நோக்கிற் பார்க்கும்பொழுது 'அடக்கம்' என்ற கீழ்ப்படிவு கூடுதலாக வற்புறுத்தப் பட்டமைக்குக் கிராமிய வாழ்க்கை பிறழாது வளர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் நிகழ்ச்சி சிறப்பித்துக் கூறக்கூடியதாகும். மேலை நாடுகளில் நிகழ்ந்த, கிராமங்களில் இருந்து நகரங்களை நோக்கிய சமூக அசைவும் கிராமியப் பிறழ்வும் தமிழகத்தில் அனுபவிக்கப்படாத ஒரு நிகழ்ச்சியாகும்.

தமிழ்க் கிராமிய வாழ்வின் உறுதியானது தொடர்ச்சியாக கீழ்ப்படிதலைக் கல்வியின் ஊடாக மீள வலியுறுத்திவந்துள்ளது. யாதாயினும் ஒரு ஒழுக்கத்தை வழுவாது கடைப்பிடித்து வந்தால் அனைத்து ஒழுக்கங்களும் அதனோடு இணைந்துகொள்ளும் என நம்பப்பட்டது. 'கீழ்ப்படிவு' என்ற ஒழுக்கம் இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. கீழ்ப்படிவு என்பது உளத்தாலும், உடலாலும் பின்பற்றப்படல் வேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

நற்சிந்தனையிலிருந்து நற்செயல் உருவாக வேண்டும். நற்செயலில் இருந்து நற்பண்பு உருவாகுதல் வேண்டும். இவற்றின் வழியாக அனைத்து மனிதர்களையும் மேம்படுத்தும் நல்ல சமூகம் நிலவும் என்ற இலட்சியம் மேலோங்கியிருந்தது. அறியாமையிலிருந்து விடுபடும் பொழுது படிப்படியாக நல்ல சமுதாயம் உருவாகும் என்று கருதப்பட்டது.

"அறியாமை அறிவகற்றி அறிவினுள்ளே
அறிவுதனை அருளினான்."[25]

அறிவின் மூலவூற்றாக இறைவனே விளங்குகின்றான் என்றவாறு கல்விக்குரிய தெய்விக அழுத்தங்களே பரவலாக முன்வைக்கப்பட்டன. இவற்றின் தொடர்ச்சியாக இயற்கை, இறைவன், மனிதர், கல்வி என்ற நாற்பொருள்களையும் ஒன்றிணைக்கும் கல்விக் கருத்துக்கள் முனைப்பு அடைந்தன.

இயற்கை, இன்பம் தருவது என்றும், இயற்கைக் கோலங்களில் இறையருள் வெளிப்படுகிறதென்றும் குறிப்பிடப்படுகின்றது. மரம், செடி, கொடிகளில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர் கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் இருக்கின்றன என்றும் வற்புறுத்தப்பட்டது. இதில் ஒருவித முரண்பாடு காணப்பட்டது.

அ) இயற்கையை மாற்றியமைப்பதற்கான கல்வி
ஆ) இயற்கையை மாற்றியமைக்காது பணிந்து இசைந்து செல்வதற்கான கல்வி.

இயற்கையை மாற்றியமைப்பதற்கான கல்விச் செயற்பாடுகளில் மனிதனே இலக்குப் பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டான். அதாவது, மனிதன் தனது இயற்கைக் கொடைகளாகிய ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி வாழ வேண்டுமென முன்மொழியப்பட்டது. ஆனால் மேலை நாட்டுக் கல்விச் செயற்பாடுகளில் ஐம்புலனுக்குரிய கட்டுப்பாடுகளிலும் பார்க்க நிலத் தோற்றங்களை மாற்றியமைக்கும் இயற்கைக்கு எதிரான போராட்டம் வலிமைப்படுத்தப்பட்டது. மேலை நாடுகளில் நிலத்தை ஆழ்ந்து அகழ்தல், இரும்பு, நிலக்கரி போன்ற வளங்களைச் சுரண்டுதல், நகரங்களை உருவாக்குதல் போன்றவற்றுக்குரிய கல்விச் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டன. தமிழகச் சமூகப் பின்புலம் இவ்வாறான கல்வி நடவடிக்கைகளுக்குப் பெருமளவில் தூண்டுதலளிக்கவில்லை.

மனிதரது ஐம்புல உணர்வுகளுக்கு எதிரான போராட்டத்திலே தமிழகக் கல்விச் செயற்பாடுகள் தீவிர பங்காற்றின. நிலத் தோற்றத்தை மாற்றியமைப்பதற்கான போராட்டம் முன்னெடுக்கப்படாது இசைந்து செல்வதற்கான கல்வியையே பெருமளவில் நிலைபேறுகொண்டது.

மேலைப்புலக் கல்வியிலே தனிமனித சுதந்திரம், உரிமைகள் என்பவற்றுக்கான வற்புறுத்தல்கள் இடம் பெற்று வந்தவேளை தமிழகக் கல்வியில் அவற்றை வற்புறுத்துவதற்கான சமூக தேவைகள் முனைப்படைய வில்லை. சுதந்திரம் பற்றிய புறநிலையான வற்புறுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல்கள் தமிழகக் கல்வியில் இடம்பெறவில்லை. ஒருவன் தன்னை அக நிலையாக உணர்தலும், அக விடுதலையுமே வற்புறுத்தப்பட்டன.

## கல்வியும் பட்டறிவும்

சிந்தனை, செயல் என்ற இரு பரிமாணங்களைக் கல்வி கொண்டுள்ளது ஏடுகள் வாயிலான அறிவைத் திரட்டுதல் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததோ அத்துணைச் சிறப்பு உடையது செயல்வழிவந்த பட்டறிவைத் திரட்டுதலாகும். சமூக வளர்ச்சியின் பொழுது உடல் உழைப்புக்கும், உள உழைப்புக்கும் இடையே தோன்றிய இடைவெளி, செயல் வழியாகப் பெறப்படும் பட்டறிவின் சிறப்பை இழக்கச் செய்தது.

5547

ஆயினும் பட்டறிவின் முக்கியத்துவத்தை வாழ்வியல் நிகழ்ச்சிகளால் நிராகரிக்க முடியாது இருந்தது. பட்டறிவின் வாயிலாகக் கற்றலும், பொருள் உற்பத்தித் துறையில் நிகழ்ந்த மேம்பாடும் ஒன்றிணைந்திருந்தன. செயல் வழியாக உற்பத்திப் பெருக்கம் நிகழ்தல் அறியப்பட்டது. பொருள் உற்பத்தியில் நிகழ்ந்த மாற்றத்தைப் பட்டறிவு தெளிவாக விளக்கியது.

மனிதனை இயற்கையிலிருந்து பிரிக்க முடியாது. தனியாளைச் சமூகத்திலிருந்து பிரிக்க முடியாது. அவ்வாறே செயலை உடலில் இருந்தும் உள்ளத்திலிருந்தும் பிரிக்க முடியாது. மனிதர் சமூக விளைபொருளாக உருவாகும் நிலையில் பட்டறிவின் முக்கியத்துவம் தவிர்க்கமுடியாததாகும். வாழ்க்கையின் முன்னேற்றம் சமூக அடைவுகளாலே தீர்மானிக்கப்படுகிறது.

உலோகத் தொழில், மட்பாண்டத் தொழில், மரவேலை, நெசவு வேலை, பன்னவேலை முதலிய தொழில்கள் தமிழகத்தில் வளர்ச்சிபெற்று வந்தவேளை அவற்றுக்குரிய கைவினைக் கல்வியும் முன்னேற்றம் பெற்று வந்தது. தனியாளால் மேற்கொள்ளப்படுபவை, கூட்டாகப் புரிபவை என செயல்முறைகள் இரு கூறாகப் பிரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்முறையின் முக்கியத்துவம், தனித்து ஏட்டுக் கல்வியை நாடியவர்களிடமும் ஊடுருவத் தொடங்கியது. குருகுலக் கல்வி நிலையங்கள், திண்ணைப் பள்ளிக் கூடங்கள் முதலியவற்றிலே கல்வியைப் பெற்றவர்கள் தமது ஆசிரியர்களுடன் இணைந்து கூட்டாகச் செயல் முறைகளிலே ஈடுபட்டனர். பயிர் நடுதல், நீர் இறைத்தல், மெழுகுதல், சமையல் செய்தல் முதலாம் செயல் முறைகளில் ஈடுபட்டுக் கற்றனர். செயல்முறை சாராத கல்வி பயனற்றது என்பதை விளக்கும் "ஏட்டுச் சுரக் காய் கறிக்குதவாது" என்ற முது மொழியும் வலுப் பெற்றது.

பட்டறிவை முன்னெடுக்கும் கல்வியானது ஆசிரிய ருக்கும் மாணவருக்குமிடையே கூடுதலான இடைவினை களைத் தூண்டியது. மாணவருக்கும் மாணவருக்கும் இடையே இடைவினைகளை வலிதாக்கியது. பட்டறிவை வளர்க்கும் பொருட்டு ஆசிரியர் மாணவர்களுக்குச் செயல்முறைப் பயிற்சிகளை வழங்குதல் மரபு. தேனும், கிழங்கும், விதைகளும் சேர்த்து வருமாறு காட்டுக்கு அனுப்புதல், பசுக்களைப் பராமரிக்கச் செய்தல் முதலிய பணிகளைத் தனித்தும் கூட்டாகவும் செய்யுமாறு மாணவர் பணிக்கப்பட்டனர்.

செயற்பாடுகளை மீள் ஒழுங்குபடுத்தும் பொழுது பட்டறிவு மேலும் விரிவடையும். செயன்முறைகளை 'ஒழுங்கு படுத்தல்', 'மீள் ஒழுங்குபடுத்தல்' ஆகிய பணிகள் ஆசிரியரால் வழங்கப்பட்டன. இவற்றின் வழி யாகக் கல்விச் செயன்முறையானது பட்டறிவை வளம் படுத்தும் வகையில் அமைக்கப்பட்டது. பட்டறிவை வினைத்திறன் படுத்தும் நடவடிக்கையாகக் கல்விச் செயன்முறை விரிவடைந்தது.

செயல்முறைகள் சிந்தனையையும், நடைமுறை யையும் ஒன்றிணைத்தன. இவற்றின் வாயிலாகக் கல்வி யானது வாழ்க்கைக்குரிய தயாரிப்பு நடவடிக்கையாக மாறாது, வாழ்க்கையே கல்வியாக முகிழ்த்தெழுந்தது. கல்வி நிலையங்கள், குடும்ப நிலையங்கள் போன்றிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன. குடும்ப உறுப்பினரிடையே நிலவிய உறவு முறைகளும், உரையாடல்களும், விழுமியங்களும் கல்வி நிலையங்களிலே காணப்பெற்றன.

அழகியல் சார்ந்த பட்டறிவும் கல்வி நிறுவனங்களூடாக வளர்க்கப்பட்டன. மாலை தொடுத்தல், கவிதை புனைதல், பண்ணுடன் பாடல், கோலமிடுதல், ஓலை அலங்காரம், மாலை அலங்காரம், வேடம் புனைதல் முதலியனவும் கலைத் திட்டத்தினூடாக வளர்க்கப்பட்டன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## கல்வி நிறுவன ஒழுங்கமைப்பு

சமூகச் செயல்முறையின் வழியாக பொருத்தமான கல்வி நிறுவன ஒழுங்கமைப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அதிகாரங்களை நிலை நிறுத்துதல், இடை வினைகளை ஒழுங்கமைத்தல், பரிவர்த்தனைகள் ஏற்படுத்தல் போன்ற பல்வேறு தேவைகளின் பொருட்டுக் கல்வி நிறுவனங்கள் சமூகத்தால் உருவாக்கப்படுகின்றன.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள், நிலாப் பள்ளிக்கூடங்கள், கோயிற் பள்ளிக்கூடங்கள், பட்டறைப் பள்ளிக்கூடங்கள், குருகுலக் கல்விக் கூடங்கள், சங்கம் முதலிய பழம்பெரும் கல்வி நிறுவன ஒழுங்கமைப்புக்கள் தமிழகத்திற் செயற்பட்டு வந்தன.[26]

அ) திண்ணைப் பள்ளிக்கூடங்களில் மூன்று வகையான கற்கை நெறிகள் மேற்கொள்ளப்பட்டன. தொடக்கநிலை, இடைநிலை, உயர்நிலை என மூன்று வகையான கற்கை ஒழுங்கமைப்புக்கள் இடம்பெற்றன. நெடுங்கணக்கு, உறுப்பெழுத்து, எண், வாய்ப்பாடு, நீதிக்கதைகள், தேவாரம், நொடிகள் முதலியவை தொடக்க நிலையிலும் கணிதம், அறநூல்கள், சமய நூல்கள், நிகண்டு, காவியங்கள் முதலியவை இடைநிலையிலும், சோதிடம், வானநூல், மெய்யியல், உயர் கணிதம், இலக்கண ஆய்வு, இலக்கிய ஆய்வு, யாப்பு, பிற மொழிகள் முதலியவை உயர் நிலையிலும் கற்பிக்கப்பட்டன.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிக்கூடங்களிலே தர வேறுபாடுகள் காணப்பட்டன. கலைத்திட்ட வேறுபாடுகளும் காணப்பட்டன. திண்ணைப் பள்ளிக்கூடங்களின் நடுநாயகமாக ஆசிரியரே விளங்கினார். ஆசிரியரது வீட்டின் முன்புறமுள்ள பெரிய திண்ணையிலே பாடம் நிகழும். ஆசிரியரது ஆற்றல், ஆளுமை என்பவை திண்ணைப் பள்ளிக்கூடங்களின் தரத்தைத் தீர்மானிப்பதிலே பெரும் பங்கு வகித்தன. ஓர் ஆசிரியரே தொடக்க நிலை, இடைநிலை, உயர்நிலை ஆகியவற்றுக்குரிய மாணவர்களுக்குக் கற்பித்தமையால் மாணவரின் நெடுங்கோட்டு வளர்ச்சியை இலகுவாகக் கட்டி எழுப்பக் கூடியதாக விருந்தது.

ஆ) நிலாக்கால இரவில் இயங்கிய பள்ளிக்கூடங்கள் நிலாப் பள்ளிக்கூடங்கள் எனப்பட்டன. நிலாக் காலங்களில் ஆசிரியரது வீட்டு முற்றத்தில் புராணங்கள் படித்தல், காவியங்கள் படித்தல், வியாக்கியானஞ் செய்தல், உரையாடல் முதலிய சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும். இவை புலமை நிலைப்பட்ட நிலாப் பள்ளிக்கூடங்களாக விளங்கின.

உடற்கலை சார்ந்த நிலாப் பள்ளிக்கூடங்கள் என்ற அமைப்பும் கிராமங்களிலே காணப்பட்டது. வாள் ஆட்சி, வேல் ஆட்சி, மல் ஆட்சி, சிலம்பு ஆட்டம், நெருப்பு ஆட்டம் முதலிய கலைகள் இவ்வகை நிலாப் பள்ளிக்கூடங்களிலே பயிற்றுவிக்கப்பட்டன. இங்கு கற்பித்த ஆசிரியர்களும் 'உபாத்தியார்' (வாத்தியார்) என்றே அழைக்கப்பட்டனர்.

இ) கோவிற் பள்ளிக்கூடங்கள் கோவில்களின் பராமரிப்பில் இயங்கி வந்தன. கோவில்களோடு இணைந்த மடங்களில் மாணவர் வதிந்து கற்று வந்தனர். உயர் நிலையான கல்விச் செயற்பாடுகளே அங்கு இடம்பெற்றன. கற்றலும், கற்றவாறு ஒழுகுதலும், மெய்ப்பொருள் தேடலும், சிறப்பாக இடம்பெற்றன. இக் கல்வி நிலையங்கள் பிற்காலத்தில் 'மடாலயங்கள்' என அழைக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) தமிழகத்தின் மரபுவழி வந்த தொழில் கல்விக் கூடங்களாகப் பட்டறைப் பள்ளிக்கூடங்கள் இயங்கிவந்தன. இங்கு கற்பித்தவர்கள் 'ஆசாரியார்' என அழைக்கப்பட்டனர். ஆசாரியார் என்பது கம்மாள ரின் பட்டப்பெயராக அமைந்தது. ஆசாரம் என்பது தொழில்சார் ஒழுக்கங்களைச் சுட்டிக் காட்டுவதாயிற்று. தொழில்சார் கல்வி வழக்கில் இது திறன் (Skill) என்ற பொருள் தரும். ஆசாரியரின் வீட்டுடன் இணைந்த தாகப் பட்டறை செயற்படும். மரக் கைத்தொழில், உலோகக் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில், நெசவுக் கைத்தொழில் முதலியவை செயல் அனுபவங்க ளுடன் கற்பிக்கப்பட்டன.

கிராமியத் தன்னிறைவுப் பொருளாதாரத்துடன் பட்டறைப் பள்ளிக்கூடங்கள் இணைந்து இருந்தன. தந்தை - பிள்ளை என்ற முறையில் இத்தொழில்கள் கற்பிக்கப்பட்டு வந்தாலும் திறமையான ஒரு ஆசிரிய ரிடத்து அவரின் உறவினர்களின் பிள்ளைகளும் சென்று கற்றுவந்தனர்.

மரம், உலோகங்கள், களிமண் முதலியவற்றைப் பயன்படுத்தி அலங்காரப் பொருட்களைத் தயாரிக்கும் கலையைப் பயிற்றுவிக்கும் பட்டறைப் பள்ளிக்கூடங் களும் இயங்கி வந்தன.

குருகுலப் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் அழ கியற் கல்வியையும், மருத்துவக் கல்வியையும் வழங்கும் நிறுவனங்களாகத் தொழிற்பட்டன. இசை, நடனம், மருத்துவம் போன்ற கலைகளைக் கற்போர் குருவின் இல்லத்தில் வாழ்ந்து, குருவுக்குப் பணிவிடைகள் செய்து, கலையைப் பயின்றனர். கூத்து என்ற கலையைக் கற் பிக்கும் ஆசிரியர் 'அண்ணாவியார்' என அழைக்கப் பட்டனர்.

உ) 'சங்கம்' என்பது அரசர்களின் அரவணைப் பில் இயங்கிய உயர்கல்வி நிறுவனமாகும். தமிழ்ப் பாரம் பரியத்திலே தோன்றிய பல்கலைக்கழகமாகச் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. சங்க உறுப்பினர் 'சான்றோர்' எனப்பட்டனர். அரசர்களே சங்கத்தின் தவிசாளர்களாக இருந்தனர். ஈழ நல்லூரிலே சங்கம் இருந்தமைக்கும் அதனோடிணைந்த 'சரசுவதி மகா ஆலயம்' என்ற சுவடியகம் இருந்தமைக்கும் சான்றுகள் உண்டு.[28]

## கல்விக் கோட்பாடு

சமூக ஆக்கம், இயற்கைச் சூழல், தனிமனிதருக்குரிய கருத்தியல் என்பவற்றோடு இணைந்ததாகவும், இடையுறவு கொண்டதாகவும் கல்விக் கோட்பாடு உருவாக்கப்படுகிறது. கல்விக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வானது முழுச் சமூக அமைப்பினதும் சாராம்சத்தை அறிந்து கொள்வதற்கான உபாயமாகின்றது.

அச்சு இயந்திரம் கண்டறியப்படுவதற்கு முற்பட்ட உலகின் தொடர்பியல் ஒழுங்கமைப்பின் அச்சாணியாகக் கல்வி முறைமையே விளங்கியது. கல்விச் செயன்முறையின் இயக்கத்தை நெறிப்படுத்தும் கட்டுக்கோப்பாகக் கலைத்திட்டம் செயற்பட்டது. கலைத்திட்டத்தின் மூலாதாரப் பாடமாக இலக்கணம் அமைந்தது இலக்கண பாடம் தருக்க நிலைப்பட்ட தொடர்புகளின் அடிப்படையாகக் கட்டி எழுப்பப்பட்டது. நடப்பியலை விளக்க இலக்கணமும், தருக்கமும் ஆசிரியர்கட்குக் கருவிகளாக அமைந்தன.

வரன்முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட முறை சார்ந்த கல்வி ஒருபுறம் இயங்கிக்கொண்டு இருக்கும் வேளை முறைசாராத கல்விச் செயற்பாடும் சமூகத்தின் தேவைகளை அடியொற்றிச் 'செயற்பட்டுக்கொண்டிருக்கும். முறைசார் கல்வியில் இலக்கணம், தருக்கம் என்பவற்றுக்கான அழுத்தம் மேலோங்கியிருந்தது. முறைசாராத கல்விச் செயற்பாடுகளில் மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் அழுத்தங்கள் முதன்மை பெற்றிருந்தன. சில சந்தர்ப்பங்களில் இவை துருவப்பட்டும் செயற்பட்டன. 'காரிகை கற்று கவிபாடுதல்' என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த துருவப்பாட்டை ஒரு வகையிலே விளக்குகின்ற தெனலாம். இந்த முறை முரண்பாடு வெறுமனே கல்வி முரண்பாடாக அமைந்ததென்று கூறமுடியாது. சமூக முரண்பாட்டின் குறியீடாகவே இந்தத் துருவப்பாடு வெளிக்கிளம்பிற்று.

ஒழுங்கமைக்கப்பட்ட முறைசார்ந்த கல்வி எழுத்து வடிவமைப்புக்கு முதன்மை கொடுத்த வேளை, முறை சாராக் கல்வியில் ஒலி வடிவத் தொடர்பே மேலோங்கி நின்றது. இவற்றின் ஒற்றுமைக்கும் முரண்பாடுகளுக்கும் ஏற்றவாறு கல்விக் கோட்பாடுகளும் தோன்றலாயின.

கல்விச் செயற்பாடு முடிவிலியாகக் கருதப்பட்டது. தெரிந்துகொள்ளுதலும், அறிந்துகொள்ளுதலும் முடிவில்லாது செயற்பட வேண்டியுள்ளது. அறிவு என்பது பகிர்ந்துகொள்ளத்தக்கது. முறைக்கல்வியில் தனிமனித இயல்புகளுக்குக் கல்விச் செயன்முறை முக்கியத்துவம் கொடுத்தது. முறைசாராக் கல்வியில் தனி மனித முக்கியப்படுத்தல் அத்துணை வலிமைபெற வில்லை. எழுத்துவடிவில் ஆக்கியோன் முக்கியத்துவம் பெற, வாய்மொழி வடிவில் ஆக்கியோன் அறியப்படாதவனாகவே இருந்துவந்துள்ளான்.

கற்றலின் வழியாக மனித இயல்புகள் மாற்றியமைக்கப்படுகின்றன. இவ்வகை நிலைமாற்றத்தில் ஆசிரியரது பண்பும் பணிகளும் விதந்துரைக்கப்படுகின்றது. மாணவரின் புலன்கள் வழியாக ஆசிரியர் அறிவை உட்செலுத்துபவராக மட்டுமன்றி வெளிக்கொண்டு வருபவராகவும் விளங்குகின்றனர். தமிழர் கல்வியின் பிரதான செயற்பாடாகப் 'புறநிலைப்படுத்தல்' வளர்ச்சியடைந்தது. தனது ஆக்கங்களை ஒருவர் தன்னிலிருந்து வேறுபடுத்தலும், திறனாய்வு செய்தலும் புறநிலைப் படுத்தலுக்கு எடுத்துக்காட்டுக்களாகும். 'தன்குற்றம் காணல்', 'தன்குற்றம் நீக்கல்' என்பவை புறநிலைப் படுத்தலைச் சுட்டிக்காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையை வியத்தலும், நயத்தலும் கல்விச் செயற்பாடுகளினூடாக வற்புறுத்தப்பட்டன. இயற்கையை அடிப்படையாக வைத்துக் காரணம்காணும் திறன்கள் விருத்திசெய்யப்பட்டன. இவற்றிலும் ஒரு முரண்பாடு காணப்பட்டது. இயற்கை நிகழ்ச்சிகள் மனிதரது செயல்களுக்கு முன்மாதிரியாக எடுத்துக் கூறப்பட்டாலும், திணைப் பாகுபாட்டில் மனிதர், தேவர் தவிர்ந்த ஏனைய இயற்கைப் பொருட்கள் அஃறிணையாகவே வகைப்படுத்தப்பட்டன. இவ்வகையான பாகுபாட்டிற் கல்விச் செயற்பாடு சிறப்பார்ந்த இடத்தைப் பெற்றது. கற்கும் இயல்பும், திறனும் உடையோராய் இருப்போர் உயர் திணையில் உள்ளடக்கப்பட்டனர்.

இயற்கை வலிமை கொண்டது, ஆனால் கல்வியானது அதனிலும் வலிமை கொண்டது என உணர்த்தப்பட்டது. இயற்கைக்கு எதிரான போராட்டத்தில் இயற்கையின் நேர்ப் பண்புகளையும், எதிர்ப்பண்புகளையும் வேறுபடுத்திக் காட்டவேண்டிய தேவை கல்விக்கு எழுந்தது. தாமாக வளரும் தாவரங்கள், விலங்குகள் என்பவற்றோடு ஒப்பிடும்பொழுது மனிதரது கட்டுப்பாட்டில் வளர்க்கப்படும் விலங்குகள் என்பவற்றிலிருந்து கூடுதலான பலனை மனிதர் பெற்றமை 'கட்டுப்பாடு', 'பயிற்சி' முதலாம் கல்விச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தன. கல்வியானது சரியான செயற்பாடுகளைத் தெரிவு செய்வதற்கு உற்சாகமளித்தது.

கற்றலின் வழியாக ஒருவிதமான 'பலம் மேலோங்கல்' உணரப்பட்டது. அந்தப் பலம் மேலும் ஆற்றலைத் தூண்டவல்ல பலமாக அமைந்தது. கல்விச் செயற்பாடு ஆக்கத்தில் முடிவடையும். பல்வேறு காலகட்டங்களினூடே கல்வித் தொடர்ச்சி பேணப்பட்டு வந்தமை கல்வியின் ஆக்கப் பணியைப் புலப்படுத்தியது. சமூக மாற்றங்களினூடே கல்வித் தொடர்ச்சியின் தேவை உணரப்படலாயிற்று. ஆனால் சமூகத்தின் ஏறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரலமைப்புக்கேற்றவாறு கல்வியை நுகர்தலும், பயன் படுத்தலும் வேறுபட்டன.

கல்வி இலக்குகளை உடனடியான இலக்குகள், நீண்ட காலத்துக்குரிய இலக்குகள் என்றவாறு பாகு படுத்தும் பண்பும் தமிழகத்திலே காணப்பட்டது. உடனடி இலக்குகள் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டிருந்தன. நீண்டகால இலக்குகள் பலவகைப்பட்டவையாக விரிந்து சென்றன. 'சான்றோ னாதல்', 'மெய்ப்பொருள் காணல்', 'பெரும் பேறடை தல்' முதலியவை நீண்டகால இலக்குகளாக விளங்கின. இவை கல்வியின் உயர்ந்த நோக்கங்கள் என்றும் குறிப் பிடப்பட்டன.

## ஆசிரியர் இயல்புகள்

கல்விச் செயற்பாட்டின் நடுநாயகமாக ஆசிரியர் விளங்கினார். சமூகச் செயல்முறையின் குறியீடாகவும் ஆசிரியர் அமைந்தார். ஆழ்ந்த அறிவு, நுண்மாண் நுழைபுலம், துறைபோகக் கற்றல், எப்பொழுதும் கற்றல், சீரிய ஒழுக்கம், மதிநுட்பம் முதலியவை ஆசிரியர்க்குரிய சிறப்புப் பண்புகளாகக் கருதப்பட்டன. மனனம் செய்யும் திறன் ஆசிரியருக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் தகுதியாக வற்புறுத்தப்பட்டது.

குலக்குழுச் சமூக நிலையில் மூத்தோரும், முதி யோரும் தமது ஆற்றல்களையும் அனுபவங்களையும் இளைஞருக்கு வழங்கிவந்தனர்; ஆசிரியர் என்ற தனித்த தொழிற் பிரிவினர் வளர்வதற்குரிய வாய்ப்பு அங்கு ஏற்படவில்லை. பயிர்ச் செய்கைத் தொழில் நிலைத்த மருத நிலத்தில், ஆசிரியர் என்ற தொழிற் பிரிவினர் வளரலாயினர். பயிர்ச்செய்கை வளர்ச்சியோடு வரன் முறையான கல்விச் செயற்பாடுகளும் முன்னேற்றம் பெறத் தொடங்கியது. ஆசிரியர்கள் மருதநில ஒழுக்கங் களைக் கல்விச் செயன்முறையினூடாக வற்புறுத்தினர்.

மீத்திறன் உடையோர் ஆசிரியராக விளங்கி யமையால், சாதாரண மனிதர்களையும் மீறிய உள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமை காரணமாக அவர்கள் மேலோராகக் கருதப் பட்டனர். இதன் படிமுறை வளர்ச்சியே ஆசிரியருக்குத் தெய்வீகத் தன்மை வழங்க முயன்றமையாகும்.

பயிர் உற்பத்திப் பெருக்கத்தில் தண்ணீர் சிறப் பான இயற்கைப் பொருளாக விளங்கியது. 'நீர்மை' என்பது ஒழுக்கத்தைக் குறிப்பிடும் சிறப்புச் சொல்லாக விரிவடைந்தது. அள்ளக்குறையாது அறிவை ஆசிரியர் வழங்குபவராக இருத்தல் வேண்டும். அத்துடன் 'நீர்மை' உடையவராய் இருத்தல் வேண்டும் என்றும் கூறப் பட்டது. இந்தியாவின் பிராமணன் கல்வி மரபிலும் ஆசிரியருக்குரிய தனியாள் குணவியல்புகள் வலியுறுத்தப் பட்டன. தரங்குறைந்த மனிதனால் உரைக்கப்படும் மெய்ப்பொருள் மாணவரால் உள்வாங்கப்படமாட்டாது என உரைக்கப்பட்டது.[29]

நல்லொழுக்கம் என்பது ஆசிரியர் தொடர்பான அகிலப் பண்பாகக் கருதப்படுகின்றது அதாவது அறிவின் ஊற்றாக விளங்கும் ஆசிரியர் நல்லொழுக்கம் உடைய வராய் இருத்தல் வேண்டும் என்பது எல்லாப் பண்பாடு களிலும் வற்புறுத்தப்படுகிறது. உடல்நலம், உளநலம், மனவெழுச்சி நலம் என்பவற்றைக் கொண்டவராக ஆசிரியர் விளங்க வேண்டுமென்ற கருத்து தமிழகத்திலே நிலவியது.

அறிவு வழங்கலின் ஒரு பரிமாணம் சுயநல மறுப் பாகும். வேண்டுவார்க்கு வேண்டியளவு (பதில் நலன் கருதாது) ஆசிரியர் அறிவை வழங்குதல் வேண்டும். இந்நிலையில் ஆசிரியரிடத்துத் தலைமைப் பண்பு உரு வாகின்றது. ஆசிரியத்துவம் கைம்மாறு கருதாத வாண் மையாகக் கருதப்பட்டது. கூரிய அறிவும் தெளிந்த சிந்தனையும், பிறரது முன்னேற்றத்தைத் தமது எழுச்சி யாகக் கருதுதலும், ஆசிரியரது ஆண்மையின் சிறப் பார்ந்த இலக்குகளாக விளங்கின. ஆசிரியர் 'வாணர்' என்றும் தமிழகத்தில் அழைக்கப்பட்டனர். அறவாணர், அம்பலவாணர், குணவாணர், கலைவாணர் போன்ற பெயர்கள் ஆசிரியருக்குச் சூட்டப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர்க்கு நலம் செய்வதால் ஒளி, விளக்கு, தீபம், சுடர், சுனை, கற்பகதரு, பொழில், கனி, விதை, அருவி, தென்றல், கார், முகில், சந்தனம் என்ற பலவாறான பட்டப் பெயர்களால் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர். ஆசிரியர்களையும் கல்வி நிலையங்களையும் தீபத்துக்கு ஒப்பிடுதல் ஓர் அகிலப் பண்பாகக் கருதப்படுகின்றது.

தமது சமகாலத்தைய அறிவு அனைத்தையும் ஆசிரியர் அறிந்தவராக இருத்தல் வேண்டும். இலக்கணம், இலக்கியம், சமயம், தருக்கம், நீதிநூல், வானநூல், சோதிடம் என்றவாறு ஆயகலைகள் அனைத்தையும் ஓர் ஆசிரியர் அறிந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப் பட்டது. ஒன்றிணைந்த ஆசிரியத்துவம் பற்றிய கருத்தே ஆரம்பத்தில் நிலைபேறு கொண்டிருந்தது. சமயங்களின் வளர்ச்சி காரணமாக, சமய இலக்கியங்களை ஆழ்ந்து கற்கவேண்டிய தேவை எழ, சிறப்புத் தேர்ச்சி பெறுதல் படிப்படியாக வளரலாயிற்று. புத்தம், சமணம் ஆகிய சமயங்களின் வருகையும், சமயக் கருத்துக்களை ஆய்ந்து வாதிடுதலும் சிறப்புத் தேர்ச்சிக்கு உற்சாகமளித்தன.

பண்டைய, தமிழ்க் கிராமங்களுக்கும், நகரங் களுக்குமிடையே பண்பாட்டு அமைப்பியல் தொடர்பான வேறுபாடுகள் காணப்பட்டன. நகர்ப்புற ஆலயங்களிலே தான் வைதிக நெறிப்பட்ட வழிபாடுகளும், பர சமயங் களின் செயற்பாடுகளும் இடம்பெற்றன. கிராமங்களிலே வழிவழி வந்த நாட்டார் வணக்க முறைகளும் நில பிரபுத்துவ சமூக அமைப்பின் நெகிழ்ச்சியற்ற இயல்பு களும் காணப்பட்டன. பண்டைய நகர்ப்புறங்களிலே வணிகர் மேலாதிக்கம் செலுத்துவோராய் விளங்கினர். வணிகர்களது வாழ்க்கையிலும், ஒழுக்கத்திலும் நெகிழ்ச்சியான போக்குகள் காணப்பட்டன.

கிராம, நகர வேறுபாடு ஆசிரியத்துவத்தின் இயல்புகளைப் பெருமளவிலே பாதித்தது. சமயத்துறை ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஆழ்ந்து கற்கும் சிறப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி நகர்ப்புற ஆசிரியர்களிடையே வளரலாயிற்று. பண்டைய ஐரோப்பிய நகரங்களிடையே வளர்ச்சி பெற்ற கல்விக்கும், இந்திய நகரங்களிலே வளர்ச்சிபெற்ற கல்விக்கும் இடையே குறிப்பிடக்கூடியளவு வேறுபாடுகள் காணப்பட்டன.

ஐரோப்பிய நகர நடவடிக்கைகள் பொருள்சார் நடவடிக்கைகளோடும், கல்விச் செயற்பாடுகளோடும் கூடுதலான தொடர்புகளைக் கொண்டிருந்தன. நகரங்கள் வணிக மத்திய நிலையங்களாக மட்டுமன்றி உற்பத்தி மத்திய நிலையங்களாகவும் விளங்கின. தமிழகத்து பண்டைய நகரங்களில் சமய நடவடிக்கைகள் ஒப்பீட்டளவில் மேலோங்கியிருந்தன. வர்த்தகத்தினால் எழக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்க்கும் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய வணிகர்கள் மனிதக் காரணிமீது நம்பிக்கை வைத்தனர். தமிழக வணிகர்கள் வர்த்தக ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் தாங்குவதற்கும் இறை நம்பிக்கையை முன்னெடுத்தனர்.

மேற்கூறிய இயல்புகள் தமிழகத்து நகர்ப்புறக் கல்வி நிலையங்களையும் ஆசிரியத்துவத்தையும் பாதித்தன. கல்வி நிறுவனங்களும் சமயமும் ஒன்றிணைவதற்கு நகர வளர்ச்சி பின்புலமாக அமைந்தது.

ஆசிரியர்கள் தாய் மொழியோடு பிற மொழிகளைத் தெரிந்து கொள்வதற்கு நகர வளர்ச்சி உற்சாகமளித்தது. பிறமொழி மாந்தரோடு உரையாடலை ஏற்படுத்தவேண்டிய தேவை நகர்ப்புற ஆசிரியர்களுக்கே எழுந்தது.

## மாணவரும் ஒழுக்கமும்

ஒழுக்கம் என்ற 'நல்ல நடத்தை' சமூக இயல்பைச் சார்ந்து நிற்கும் ஓர் எண்ணக்கருவாகும். சில ஒழுக்கங்கள் அகிலப் பண்புடையவை. அதாவது எத்தகைய சமூக அமைப்பிலும் தொடர்ச்சியாக வற்புறுத்தப்படுபவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கம் என்பது கற்றுக்கொள்ளப்படுவதாகும். இலத்தீன் மொழியிலும் Disciplus (கற்றுக்கொள்ளல்) என இந்த எண்ணக்கரு விளக்கப்பட்டுள்ளது. ஒழுக்கம் கல்விச் செயன்முறையின் பாற்பட்டது. உயர்ந்த இலக்கு களை அடையும் பொருட்டு ஒருவர் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளல் ஒழுக்கம் எனத் தமிழ் மரபிலே வலியுறுத்தப்பட்டது. ஆசிரியரின் வழிகாட்டலில் மாணவர் தமது மனவெழுச்சிகளையும் நடத்தைகளை யும் நெறிப்படுத்திக் கொள்ளல் ஒழுக்கம் என விரித் துரைக்கப்படும்.

பொருள் உற்பத்தித் துறையோடு ஒழுக்கம் நேரடியாக இணைந்துள்ளது என்பது பொதுவாக எடுத்துக் கூறப்படுவதில்லை. குறிஞ்சி நிலத்தில் விலங்கு களைக் கொல்லுதல் ஒழுக்கம் எனப்பட்டது. மருதத்தில் பசுக்காத்தல் ஒழுக்கம் எனப்பட்டது. பொருள் உற்பத்தி வேறுபாடுகளுக்கேற்பக் கொல்லுதல் ஒழுக்கம் என்றும், கொல்லாமை ஒழுக்கம் எனவும் வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

ஒழுக்கத்தின் வாயிலாக பொருள் உற்பத்தி நடவடிக்கைகள் வினைத்திறன் பெறுகின்றன. உழைப் பில் வீண் விரயங்கள் தவிர்க்கப்படுகின்றன. சமூகம் இசைவாக்கம் பெறுகின்றது. விலங்கு வளர்ப்பு முறை யோடு ஒழுக்கம் என்பது 'பயிற்சி' என்ற அனுபவமாகத் தமிழர்களது பண்பாட்டிலே கருதப்பட்டது. தண்டனை முறைமையால் ஒழுக்கத்தை நிலைநாட்டுதலும் விலங்கு வளர்ப்பு முறையோடு கிடைக்கப்பெற்ற அனுபவமாகும். வேட்டுவ வாழ்க்கையில் நாயும், வேளாண்மை வாழ்க் கையில் பசுவும் சிறப்பார்ந்த வீட்டு விலங்குகளாகப் பழக்கப்பட்டன.

சமூகத்தின் விருப்பங்களுக்கேற்பத் தனியாள் விருப்பங்களைக் கட்டுப்படுத்தலே ஒழுக்கம் என்று கருதப்படும் நிலை, பலசாலிகளின் வளர்ச்சியோடும் நிலவுரிமையின் வளர்ச்சியுடனும் வலிமை பெறலாயிற்று. ஒழுக்கம் இரு கிளைப்பட்டது. எவற்றைச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பது ஒழுக்கத்தின் ஒரு பரிமாணம். எவற்றைச் செய்யக்கூடாது என்பது ஒழுக்கத்தின் இரண்டாவது பரிமாணம். தமிழ் மரபில் எவற்றைச் செய்ய வேண்டுமென்பவை 'இனியவை' என்றும், எவற்றைச் செய்யக்கூடாது என்பது 'இன்னா' என்றும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. இனியவை செய்யும்போது மாணவர்கள் பாராட்டுக்குள்ளானார்கள். இன்னா செய்யும்பொழுது அவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தமிழ் மரபில் ஆசிரியரோடு 'வாழ்ந்து கற்றல்' என்பது ஆசிரியரைப் பின்பற்றி ஒழுகுவதற்குரிய பயிற்சியாகவும் அமைந்தது. 'கல்வி சார்ந்த ஒழுக்கங்கள்' என்ற ஒருவகைப் பாகுபாடும் மாணவருக்கு எடுத்துக் கூறப்பட்டது. தொடர்ந்து கற்றல், கசடறக் கற்றல், ஆழக்கற்றல், வல்லோர்வாய்க் கேட்டல், தெளிவுறக் கூறல், உயர்வுற நோக்கல், கற்றதன் வழி ஒழுகுதல் முதலியவை கல்விசார் ஒழுக்கங்களாகக் கூறப்பட்டன.

ஒழுக்கம் என்பது 'தொடர்ச்சி' என்றும் தமிழ் மரபிலே வலியுறுத்தப்பட்டன. அதாவது, குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் ஒருவர் பொருத்தமாக நடந்து கொண்டால் மட்டும் போதாது, அவர் வாழ்க்கை முழுவதும் அவற்றைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் என விரித்துரைக்கப்பட்டது.

அரசின் வளர்ச்சியோடு ஒழுக்கமுடைமை மேலும் வலியுறுத்தப்படலாயிற்று. ஒழுக்கம் தொடர்பான நேர் மீள வலியுறுத்தலிலும், எதிர் மீள வலியுறுத்தலுக்கே அரசு முதன்மை அளித்தது. அதிகாரம், வலு என்பவை அரசிடம் இருந்தமையால் எதிர் மீள வலியுறுத்தலே பொதுவாக எல்லா அரசுகளிடமும் காணப்பெற்ற நிலைத்த பண்பாக விளங்கியது. நேர் மீள வலியுறுத்தல் என்பது சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களுக்கு வெகுமதி வழங்கலாகும். பொதுவாக அரசுகள் இவ்வகை நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்மீள வலியுறுத்தல் என்பது சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்காதோருக்கு தண்டனைகள் வழங்கு தல் வாயிலாக நடத்தைகளை ஒழுங்கமைத்தலாகும். இந்த நடவடிக்கையினையே அரசுகள் பெருமளவில் மேற்கொள்ளுகின்றன.

குற்றம் செய்த ஒருவருக்குத் தண்டனை வழங் குதல் வாயிலாக ஏனையோரும் அந்தக் குற்றத்தைச் செய்யாது விடுவார்கள் என்பதில் அரசுகளுக்கு வலுவான நம்பிக்கை உண்டு.

குற்றங்கள் செய்யாது விடுவதற்கான 'அறன் வலியுறுத்தல்கள்' தமிழ்க் கல்விச் செயற்பாடுகளிலே இடம்பெற்றன. 'வருமுன்னர் தடுத்தல்', 'வெள்ளம் வருமுன்னர் அணைகட்டல்', 'கற்ற தொழுகுதல்', 'புகழுற வாழுதல்', 'அறவழி வாழுதல்' முதலிய தொடர்கள் குற்றங்கள் செய்யாது வாழ்வதற்குரிய தடுப்பு நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டும் தொடர் களாகவுள்ளன. கல்வியின் வாயிலாக குற்றம் செய்யா திருப்பதற்கான மனப்பக்குவம் உருவாக்கப்படலாயிற்று. கல்வி வாயிலாக வடிவமைக்கப்படும் உள்ளத்தின் இயல் பினதாக மனித உயர்வும், ஒழுக்கமும் இருக்கும் என வலியுறுத்தப்பட்டது.

## கல்வியும் வழிகாட்டலும்

கல்விச் செயன்முறையுடன் ஒன்றிணைந்த ஓர் இயக்கக்கூறாக, 'ஆற்றுப்படுத்தல்' அல்லது 'வழிகாட் டல்' விளங்குகின்றது. சமூக ஆக்கமும், மீள் ஆக்கமும் கல்வி முறையின் துணையோடு இயங்கும். வழிகாட்டல் என்பது நடத்தைகளை ஒழுங்கமைத்தல், கட்டுப்பாடு களைப் புலப்படுத்தல், இசைவாக்கம் செய்யும் உளப் பலத்தை விருத்தி செய்தல் முதலிய பிரிவுகள் பலவற் றைக் கொண்டதாகத் தொழிற்படும்.

உற்பத்தியும் குடும்ப உறவுகளும் சார்ந்த வழி காட்டல்கள் பூர்வீக சமூகத்திலே இடம்பெற்றன. பாலியல் உறவுகளே குடும்ப உறவுகளுக்கு மூலாதாரங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக அமைந்தன. இந்நிலையிற் பாலியல் உறவுகளைப் புலப்படுத்தும் வழிகாட்டல் மரபு பண்டைத்தமிழர் கல்வி முறையிலே காணப்பட்டது. பாலியலை அடிப் படையாகக் கொண்டே அகம், புறம் என்ற பாகுபாடு கள் இடம்பெற்றன.

பாலியல் உறவுகளும், உற்பத்தி உறவுகளும் சமூக ஐக்கியப் பாட்டுக்குரிய தளங்களாக அமைந்தன. இவற்றின் வழியாகப் புரிந்துணர்வும், கொடுக்கல் வாங் கல்களும் செயற்படலாயின. சமூக பாத்திரங்களின் இயல்புகள் பாலியல் உறவுகளினாலும், உற்பத்தி உறவு களினாலும் தீர்மானிக்கப்படலாயின. 'தந்தை' என்ற பாத்திரம் குடும்பத் தலைமைத்துவப் பாத்திரமாக மட்டுமன்றி, உற்பத்தித் தலைமைப் பாத்திரமாகவும், அறிவூட்டல், வழிகாட்டல் பாத்திரங்களாகவும் அமைய லாயிற்று. ஆசிரியர் என்ற தொழிற்பிரிவு ஏற்படுவதற்கு முன்னர் தந்தையர் வழியாகவும், மூத்தோர் வழியாக வுமே வழிகாட்டல் இடம்பெற்றது.

பாதுகாப்பு வசதிகள், கட்டுப்பாடு, கருவிகள், கல்வி முதலியவற்றிற்கு ஆரம்பத்தில் தந்தையரே பொறுப்பாக இருந்தனர். தமது சிந்தனைகளுக்கும், தனது உடல், உள விருப்பங்களுக்கும் குடும்பத்தையே ஒருவர் நம்பியிருக்க வேண்டியிருந்தது. குடும்பம் என்ற குழுவின் அனுபவங்களே தனிமனித அனுபவங்களாயின.

பொருள் உற்பத்தியோடும் முறைமையோடும் புவியியற் சூழலோடும் இணைந்த வகையில் மரபுகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் என்பவை வளரலாயின. இவை நாளாந்த வாழ்க்கையோடு இணைந்த வகையில் கற்பிக்கப்படலாயின. வழி தவறிச் செல்லாது சமூக ஒழுங்குபடுத்தலுக்கான இயல்புகளையும் இவை கொண் டிருந்தன. இவற்றினூடாகவே திருமணம், சொத்துரிமை முதலியவை நிச்சயிக்கப்பட்டன.

சமூகத்திலே காணப்பட்ட ஒருங்கிணைவும் அதன் வழியாக எழுந்த பலமும் தனிமனிதரின் பாதுகாப்புக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதுணையாக அமைந்தன. இதனால் மரபுகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் என்பவை 'நனவிலி' பூர்வமாகவும் பின்பற்றப்பட்டன.

சமூகத்தின் 'இயங்கும்' தன்மையானது தொழிற் பிரிவுகளைத் தொடர்ந்து பெருக்கிய வண்ணம் இருக்கும். எளிமையான பொருளாதாரச் செயற்பாடுகள் உற்பத்திப் பெருக்கம் அடையும்பொழுது மேலும் சிக்கலடைந்துகொண்டிருக்கும். பண்டைத் தமிழர் வாழ்விலும் இவ்வாறான அனுபவங்கள் ஏற்படத் தொடங்கின. இவை உள முரண்பாடுகளுக்கு இட்டுச் சென்றன.

தொழிற் பிரிவுகளின் வளர்ச்சியானது தனிமனித உறவுகளிலே தாக்கங்களை ஏற்படுத்தின. பெற்றாரை விட்டு ஒரு கன்னிப் பெண் காதலனோடு ஓடிச்செல்லும் 'உடன்போக்கு' தமிழ் இலக்கியங்களிலே சுட்டிக் காட்டப்படுகின்றது. இது ஆரம்பகால சமூக விலகல் நடத்தைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இவ்வகையான விலகல்கள் வழிகாட்டல் என்ற கல்விச் செயற்பாட்டிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. மூத்தோரும், முதியோரும் வழிகாட்டிய முன்னைய நிலை மாற்றமடைந்து பாங்கனும், பாங்கியும் உள ஆலோசனை வழங்கும் புதிய வளர்ச்சி நிலை ஏற்பட்டது.

தொழிற்பிரிவின் வளர்ச்சி புதிய புதிய குழுக்களைத் தோற்றுவித்தது. மூத்தோராலும், பெற்றோராலும் தரப்பட முடியாத உளவியற் பாதுகாப்பானது தோழர் குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்றது. தொழிற் பிரிவு உடலடிப்படையில் மட்டுமன்றி உள அடிப்படையிலும் தனிமனித உணர்வுகளை மேலோங்கச் செய்தது. ஒரே வயதினரிடையே ஒருமைப்பாடு, ஒரே தொழிலைச் செய்வோரிடம் ஒருமைப்பாடு என்பவை வளரத் தொடங்கின. இவ்வாறான நிலமைகளுக்கேற்றவாறு கல்விச் செயற்பாடுகளும் வளரத் தொடங்கின.

ஆசிரியர் என்ற தொழிற்பிரிவினர், மலர்ச்சியடையத் தொடங்க, அதுவரை காலமும் நியமமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலே வழங்கப்பட்டு வந்த ஆலோசனை வழங்கல் ஆசிரியருக்குரிய சிறப்புப் பணியாக மாற்றமடையத் தொடங்கியது. ஆனால் ஆசிரியர் மட்டும் வழிகாட்டு பவராக விளங்கவில்லை. கிராமிய வழிபாட்டு முறை களில் வழிநடத்துனராக விளங்கியோர், மருத்துவர், மருத்துவிச்சி முதலியோரும் வழிகாட்டும் செயல்முறை யில் ஈடுபட்டனர்.

சமூக வளர்ச்சியின் போது தனிமனிதர் வெறு மனே ஒரு குழுவின் உறுப்பினராக மட்டும் இருக்க வில்லை. குழு உறுப்பினர் என்ற நிலை கடக்கப்பட்டு, தனிமனித ஆற்றல்கள் வெளிக்கிளம்புவதற்கு கல்வி துணை செய்யலாயிற்று. 'சித்தம்' என்பதன் விடுதலை யைக் கல்வி முன்னெடுத்தது. சித்த விடுதலையின் ஒரு பிரிவு 'துறவு' என்ற நிலையை ஒரு சிலரிடத்தே ஏற்படுத்தியது. பூர்வீகக் குழுக்களிடையே 'துறவு' 'பிரமச்சாரியம்' என்ற சமூகத் தோற்றப்பாடுகள் காணப்படவில்லை.

தொழிற்பிரிப்பின் வளர்ச்சியின் போது ஒரே தொழிலை மீண்டும் மீண்டும் செய்வதனால் மனச் சோர்வும் ஏற்படலாயின. உற்பத்திப் பெறுபேறுகளில் உரிய பாங்கு கிடைக்காமையும் மனமுறிவைத் தூண்ட லாயிற்று. இந்நிலையிற் கல்வியும் கலைகளும், சமயமும் மனிதருக்கு ஆறுதல் தருவனவாக அமைந்தன.

உடல்நலம் பாதிக்கப்படுதல் போன்று உளநலமும் பாதிக்கப்படலாம் என உணரப்பட்டது. உடல் நோய்க்கு மருந்து செய்தல் போன்று உள நோய்க்கும் மருந்து தேடப்படல் வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. ''மறுப்பது உள நோய் மருந்து எனவாகும்.'' என்று திருமந்திரத்திலே குறிக்கப்பட்டுள்ளது.

'கல்' என்பது அகழ்வதைக் குறிக்கின்றது. ஒரு மனிதரின் ஆழ் மனத்தை உசாவி, அதன் தேவைகளை உணர்ந்து வழி காட்டுதலும் கல்விக்குரிய பரிமாணமாக அமைந்தது. கணக்காயர், கணக்கர், மனக்கணக்கர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மியர் போன்றவை ஆசிரியருக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர்களாக விளங்கின. ஒருவரின் உள்ளத்தை மதிப்பீடு செய்து வழிகாட்டல் ஆசிரியருக்குரிய உன்னத பணிகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. மாணவரின் தடுமாறும் உள்ளத்தைச் சீர்செய்தல் சீர்மியராகிய ஆசிரியரின் பணியாயிற்று.

## கல்வியின் பன்முக வளர்ச்சி

தமிழகம் பல்வேறு புவியியற் பிரிவுகளைக் கொண்டதாகவும் வேறுவேறுபட்ட சமூகக் குழுக்களை உள்ளடக்கியதாகவும் காணப்பட்டது. நாடோடிக் குழுக்கள், நிலையான கிராமிய வாழ்க்கைக் குழுக்கள், நிலையான நகர வாழ்க்கைக் குழுக்கள், கடற் செலவு சென்றோர் குழுக்கள் போன்ற பல்வேறு சமூகக் குழுக்களின் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகப் பண்டைய தமிழகம் காணப்பட்டது. உள்ளார்ந்த இந்த வேறுபாடுகளுக்கேற்றவாறு கல்விச் செயல்முறையிலும் வேறுபாடுகள் துலங்கின. இந்நிலையிற் தமிழகம் முழுவதும் ஒரே வகையான கல்விச் செயற்பாடு காணப்பட்டதென்று துணிதல் பொருத்தமற்றது.

குலக் குழுக்களுக்குத் தலைமை தாங்கியோர் ஆசிரியராக விளங்கியமை குறுந்தொகையிற் காணப்படும் 'குலபதி' என்ற தொடரால் விளக்கப்படுகின்றது.[30]

பயிர்ச்செய்கை அடிப்படையிலே கிராமங்கள் வளர, கணக்கீட்டு முறைமைகளும் மேலோங்க, ஆசிரியர் 'கணக்காயர்' எனப்பட்டனர்.[31] நகர வளர்ச்சியோடு பிறமாந்தருடன் இடைவினைகள் நிலவிய வேளை ஆசாரங்களை வற்புறுத்தும் தேவை இருந்தமையால் ஆசிரியருக்கு 'ஆசான்' என்ற பெயரும் தரப்பட்டது.[32]

வேறுபட்ட பண்பாட்டுப் பின்புலத்தை அடியொற்றியதாக, வேறுபட்ட கற்பித்தல் முறையியல்களும் வளர்ச்சி பெறலாயின. நாடோடி வாழ்க்கைக்குரிய கல்வியில் 'கேட்டல்' என்ற முறையியல் சிறப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறலாயிற்று. நிலையான இருப்பிடங்களில் வாழத் தொடங்க வினாவிடை முறைக் கற்பித்தல் வளர்ச்சி யடையலாயிற்று. இயற்கையை மேலும் விளங்க முற் பட்டமையும், இயற்கையை மாற்றியமைக்க முற்பட்ட மையும் வினாவிடைக் கற்பித்தலுக்கும், உதாரணங்கள் வழியாகக் கற்றலுக்கும் உற்சாகமளித்தன.

பண்டைய நகரப்புறக் கல்வியும், சமயப் பரவலும் மேலும் பல கற்பித்தல் முறையியல்கள் வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்தன. வாதிடல், பட்டிமன்று போன்ற முறையியல்கள் வாயிலாகக் கற்பிக்கும் ஏற்பாடுகளும் வளர்ந்தன.

பிராமணக் கல்வி மரபிற் காணப்பட்டவை போன்ற 'உபநயனச் சடங்கு' பண்டைத் தமிழர் மரபிலே காணப்படவில்லை.[33] கல்வியை ஒரு குறித்த வயதில் ஆரம்பித்து வைக்கும் சடங்காக உபநயனம் அமைந்தது. தமிழர் மரபில் கல்வி பிறப்போடு ஆரம் பிக்கின்றது என்ற கருத்து மேலோங்கியிருந்தது. இந்த வேறுபாடுகள் பொருள் உற்பத்தி வேறுபாடுகளை அடியொற்றிப் பிறப்பதைக் காணலாம். பிராமணர்கள் 'சேவையை' வழங்கும் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட்டனர். செவிவழியாக வேதங்களை ஒப்புவிக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது.

பிறப்பால் அனைவருமே ஒரே நிலையிலிருந்தா லும் கல்விச் செயற்பாடுகள் தனிமனிதரிடத்தே தனித் துவத்தை வளர்த்து 'விலகலை' ஏற்படுத்திவிடுகின்றது. விலகல் மட்டும் அல்ல, மேம்பாடும் கல்வியால் ஏற்படுத் தப்படுகிறது. தனிமனிதர் ஒவ்வொருவரையும் பண்படுத் தல் கல்வியின் இன்னொரு செயற்பாடாக அமைந்தது. விலகலின் மத்தியிலும் தனிமனிதர் ஒன்றிணைவதற்கு 'பண்படுத்தல்' என்ற செயல் துணையாக அமைந்தது.

கல்விச் செயற்பாடானது நேர்நிலைகளையும், எதிர் நிலைகளையும் கொண்டதாக அமையும். பண் டைத் தமிழர் வாழ்க்கையில் கல்வி என்பது எவற்றிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டாத தனிப்பொருளாக அமையவில்லை. அது வாழ்க்கையின் அனைத்துக் கூறுகளையும் இணைத்து நின்றது.

மனிதரது மேம்பாட்டில் கல்வியானது முடிவில்லாப் பணிகளை இயற்றவல்லது. முடிவில்லாப் பணிகள் பன்முகப் பணிகளாக அமையும். சொத்துக்களை வைத்திருந்தோர் கல்வியை நோக்கியமைக்கும், சொத்துக்கள் இல்லாதோர் கல்வியை அணுகியமைக்கும் இடையே அடிப்படை வேறுபாடுகள் காணப்பட்டன. சொத்துக்கள் இல்லாதோரின் கல்வி அணுகுமுறைகளிலே தீவிரத் தன்மைகள் காணப்பட்டன. சொத்துடையோர் வாழ்த்திய கருத்துக்களைச் சொத்துரிமை அற்றோர் வைதனர். தீதும் நன்றும் பிறரால் தரப்படுவது அன்று என்ற கருத்து சொத்துக்கள் அற்றோரிடம் காணப்பட்டது.

சொத்துடையோர் தமது உரிமையை வலியுறுத்த அதிமானுடப் புனைவுகளை எடுத்தாண்டனர். அரசர்களுக்கு நிகழ்ந்த தெய்விக வம்சாவழிப் புனைவு இதனைத் தெளிவுபடுத்துகின்றது. இவ்வாறாகத் தமிழகக் கல்வியிலே காணப்பெற்ற பன்முகப் பண்புகள் சமூக முரண்பாடுகளை அடியொற்றி வளர்ந்தன.

## சமூக மாற்றமும் கல்வியும்

உற்பத்தி முறைமையிலும், உறவு முறைகளிலும், தொழில் நுட்பவியலிலும் மாற்றங்கள் நிகழும்போது கல்வி முறைமையிலும் மாற்றங்கள் நிகழ்வது மட்டுமன்றி புதிய மாற்றங்களின் மத்தியில் மனிதரை இயைவுபட வைப்பதிலும் கல்வி பங்கேற்கின்றது.

வேட்டுவ வாழ்க்கை, மந்தை மேய்த்தல், பயிர்ச் செய்கை, வாணிபம் என்றவாறு தமிழகத்திலே படி மலர்ச்சி கொண்ட தொழில் முறைகளும், குலபதிகள், சிற்றரசர்கள், பேரரசர்கள் என்றவாறு வளர்ச்சி கொண்ட தலைமைத்துவமும் சமூக மாற்றத்தைச் சுட்டிக்காட்டும் குறியீடுகளாகவுள்ளன. இவ்வாறான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியின் உள்ளார்ந்த விசைகள் சமூகப் பெரும் முரண்பாடுகளில் இருந்து எழுந்தன. செல்வப் பங்கீட்டில் நிகழ்ந்த சமத்துவமற்ற போக்கு அரசின் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது. ஒரு புறத்திலே செல்வக் குவிப்பு நிகழ, மறுபுறத்திலே செல்வ இழப்பு ஏற்பட்டது.

அரசின் வளர்ச்சியோடு கல்விக்குரிய பொறுப்பு அரசிற்குரிய பொறுப்பாக வலிமை பெறுவதைக் காண முடியும். இலக்கியங்களின் மையப் பொருளாக மக்கள் பாடப்பட்ட நிலையிலிருந்து, அரசர்கள் பாடப்படும் நிலையானது சமூக மாற்றத்தை பிறிதொரு கண்ணோட்டத்தில் விளக்குவதாக அமைகின்றது. செல்வக் குவிப்பின் முரண்பாடு அரசன்மீது கண்டனங்களைப் பிறப்பிக்கவும் காரணமாக அமைந்தது.

"ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வெந்து கெடும்".[34]

பொருளுடையோரைப் புகழ்தல் போன்று இகழ்தலும், இகழ்தல் போன்று புகழ்தலுமான இலக்கியத் தோற்றப்பாடுகளும் எழுந்தன.

சமூக மாற்றம் பற்றி விளக்குகின்ற கோட்பாடுகளுள் 'பிறழ் நிலை இணைப்புக்' கோட்பாடும் ஒன்றாக விளங்குகின்றது.[35] பிறநாட்டார் வருகை, பிற பண்பாடுகளின் கலப்பு, பிற மொழித் தாக்கம் முதலியவற்றின் விளைவாக சமூகமயமாக்கற் பிரச்சனைகள், சமூகப் பாத்திரங்களை ஏற்றலில் முரண்பாடுகள், தோன்றுகின்றன. இவற்றின் வழியாகவும் மாற்றங்கள் ஏற்பட்டன.

வடநாட்டவர் வருகை, சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகள் வந்தமை, சமண, பௌத்த நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்டமை என்பன பண்பாட்டு மாற்றங்களுக்கும், கல்விச் செயற்பாடுகளின் மாற்றங்களுக்கும் வழிவகுத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் மொழியே கல்வி மொழி என்பது தமிழ்க் கல்வியில் நீடித்து நிலைத்து நின்றாலும், சமஸ்கிருத மொழியின் வருகையால் உயர் கல்விச் செயற்பாடு களிலே மாற்றங்கள் நிகழலாயின. சமஸ்கிருத நூல் களைத் தமிழில் மொழிபெயர்க்கும் நடவடிக்கைகளும் விரிவடையத் தொடங்கின.

சமூக மாற்றங்கள் கல்விச் செயற்பாடுகளிலே சிக்கலான நிலைமைகளை ஏற்படுத்தும். முறைசார்ந்த கல்விச் செயற்பாடுகள் சிக்கல் நிறைந்த வடிவைப் பெறும் பொழுது புதிய மாற்றங்களை இலகுவில் உள் வாங்கக் கூடியதாக இருக்கும்.

சமூக மாற்றமும், கல்வி மாற்றமும் எளிதிலிருந்து சிக்கலானவையாக வளர்ச்சியடையும். எளிதில் இருந்து கல்விச் செயற்பாடுகள் சிக்கலடையும் பொழுது ஓர் ஆசிரியரே கல்விக்குப் பொறுப்பாக இருக்கும் நிலை மாற்றமடைந்து, பல ஆசிரியர்கள் பொறுப்பேற்றலும், பல நிறுவனங்கள் வளர்ச்சி அடைதலும் தமிழ்க்கல்வி யிலே காணப்பெற்ற பொதுப் பண்பாக விளங்குகின்றது. கல்விச் செயல்முறை சிக்கலடையும் பொழுது, கலை இலக்கிய வடிவங்களில் சிக்கலாகும் தன்மை புலப்படும்,

சமூக மாற்றம் நிகழ, சமூக, சமூகத் தொழிற் பாடுகளும் பன்முகப்படும். உணவு தேடல், உண்ணல், உறங்குதல் என்ற எளிமையான செயற்பாடுகள் சிக்க லடையும். புதிய கருவிகளை ஆக்குதல், புதிய வசதி களை ஆக்குதல், புதிய கலை வடிவங்களைப் புனைதல், முதலியவை விரிவடைய, அவ்வாறான புதிய வலிமை களுக்குக் கல்வியும் ஈடுகொடுக்கக் கூடியதாக வளரும்.

சமூக மாற்றங்கள் சமூகத் தேவைகளைப் பன் மடங்காக்கும். இந்நிலையிற் புதிய அறிவைத் தேடுதல், வேறுவேறு மொழி வளங்களைத் தேடுதல் முதலிய செயற்பாடுகள் தூண்டப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியும் உற்பத்திப் பெருக்கமும்

கல்விச் செயன்முறையின் சிறப்புப் பண்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் பொருள் உற்பத்திப் பெருக்கத்திற் பங்கேற்பதாகும்: உற்பத்திப் பெருக்கத்தில் திட்டமிட்டுக் கல்வியைப் பயன்படுத்துதல் அண்மைக் காலத் தோற்றப்பாடாகும். ஆயினும் அறிந்தோ, அறியாமலோ பொருள் உற்பத்தியில் அறிவையும் அனுபவங்களையும் பிரயோகித்தல் மனித வரலாற்றோடிணைந்த ஒரு செயல்முறையாகும்.

பண்டைத் தமிழ் மக்களது பொருள் உற்பத்தி நடவடிக்கைகள் வேட்டையாடல், சூழலில் கிடைக்கப் பெற்ற பழங்கள், கிழங்குகள், விதைகள் முதலியவற்றைத் திரட்டுதல், என்றவாறு இடம்பெற்றன. இந் நடவடிக்கைகளில் மூத்தோரின் அனுபவங்களை இளைஞர்கள் பயன்படுத்திய பொழுது ஏற்பட்ட நேர் விளைவுகள் கற்றலுக்கு உற்சாகம் வழங்கின.

இந்நடவடிக்கைகளின் போது பல்வேறு கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றன. விலங்குகள், பறவைகள், தாவரங்கள் தொடர்பான சூழல் பற்றிய அறிவு, கருவிகளைச் செய்தலும், பயன்படுத்தலும் பற்றிய அறிவு முதலியவை வளர்ந்தன.

வீட்டு விலங்குகளை வளர்க்கத் தொடங்கிய வேளை விலங்குகள் பற்றிய கண்ணோட்டம் முன்னைய 'கொல்லல்' என்ற அணுகுமுறைக்கு முரண்பாடானதாக அமைந்தது. பயிர்ச்செய்கையின் வளர்ச்சியோடு நிலமும், தாவரமும் பற்றிய அணுகுமுறைகள் மாற்றமடைந்தன. மூத்தோரின் அறிவும், அனுபவமும் உற்பத்திப் பெருக்கத்துக்கு அவசியமாகக் கருதப்பட்டன. நிலஉரிமை, பயிர் உரிமை, பங்கீட்டு உரிமை முதலியவற்றின் அடிப்படையாகப் பயிர்ச் செய்கைச் சமூகத்திலே முரண்பாடுகள் எழுந்தன. இந்த முரண்பாடுகள் அறிவு வளர்ச்சியைத் தூண்டின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதை அடிப்படையாகக் கொண்ட தொழிற் பிரிவும். ஆண் பெண் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பிரிவும் பயிர்ச்செய்கைச் சமூக அமைப் பிலே வளர்ச்சி பெறத் தொடங்கின.

மேற்கூறிய பொருளாதாரச் செயற்பாடுகளின் பின்புலத்தில் சிறியோர் முதியோரைப் பின்பற்றும் 'பண்பாட்டு உள்வாங்கல்' என்ற கல்விச் செயல்முறை இடம்பெற்றது. அறிவும், அனுபவமும் கற்றுக்கொள்ளப் படல் வேண்டும். பங்கிடப்படல் வேண்டும், என்ற உணர்வுகள் வளர்ந்தன.

உழைப்பின் இயல்பு, பொருள் உற்பத்தி முறைமை, கருவிக் கையாட்சி என்பவற்றின் அடிப்படையாகவே அறிக்கைச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அறிக் கைச் செயற்பாடுகள் மனித ஆற்றலை முன்னோக்கி இழுத்துச் செல்ல முயலும். இந்த நகர்ச்சியின் போது புத்தாக்க நடவடிக்கைகள் சிறப்பாக இடம்பெறும். புதிய கருவிகளின் கண்டுபிடிப்பு, புதிய உற்பத்தி வழி வகைகள், புதிய கருத்துக்கள், முதலியவற்றை முன் னெடுக்கத்தக்கவாறு சமூக அழுத்தங்கள் இடபெறும் பொழுது கல்விச் செயற்பாடுகள் மேலும் விசைபெறும்.

## கல்வியும் ஆக்கச் செயன்முறையும்

முன்னோக்கிய மனித அசைவுகளுக்கு ஆக்கச் செயல்முறை துணை நிற்கின்றது. கல்விச் செயற்பாடுகள் ஆக்கச் செயல்முறைகளுக்கு அனுசரணையாக இயங்கி வந்துள்ளன. கற்பனையுடனும் விரிசிந்தனையுடனும் இணைந்ததாக ஆக்கச் செயல்முறை வளர்ச்சியடைகின் றது. ஆரம்பகாலக் கல்வி நடவடிக்கைகளில் 'பாவனை செய்தல்' என்ற செயற்பாடு ஆக்கச் செயல்முறையை வளர்ப்பதற்கு துணை நின்றது.

கல்வி வரலாற்று வளர்ச்சியோடு ஆக்கச் செயல் முறைப்படி மலர்ச்சி கொண்டுவந்துள்ளது. தேவையின் அடிப்படையில் இல்லாதது ஒன்றை உருவாக்க முனைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமை ஆக்கச் செயல்முறையின் வளர்ச்சியில் ஒரு பிரதான திருப்பு முனையாக அமைந்தது. வாழ்க்கை முரண்பாடுகள் அசாதாரணமான சிந்தனைகளுக்கு வித்திட்டன. அசாதாரணமான சிந்தனைகள் ஒருபுறம் கலையாக்கங்களுக்கு உதவின. மறுபுறம் புதிய கருவிகள், உபகரணங்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவின.

மாறுபட்ட சிந்தனைகள் ஓர் ஒழுங்கமைப்பினுள் கொண்டுவரப்படும் பொழுது கலையாக்கங்களும் புத்தாக்கக் கண்டுபிடிப்புக்களும் ஏற்படுகின்றன. ஆக்கச் செயல்முறையானது நடைமுறைப்பண்பு தழுவியதாக வும், பயனுடமை தழுவியதாகவும் ஆரம்பத்தில் விளங்கியது. நடைமுறை வாழ்வுடன் ஒட்டாத கலைகளும், கருவிகளும் ஆரம்பத்திற் கண்டறியப்படவில்லை.

அனுபவங்களே புத்தாக்கங்களுக்கு ஆதாரமாக அமைந்தன. தனியொருவரின் அனுபவ வழியாக எழும் புதிய ஆக்கங்கள் பொது அனுபவங்களாக மாற்றியமைக்கப்பட்டன. ஒருவர் கண்டுபிடித்த கருவியும், பாடலும், மற்றையவர்களினாலும் பயன்படுத்தப்படும் நிலை ஏற்பட்டது. குழு நிலைப்பட்ட பூர்வீக செயற்பாடுகளிற் கண்டுபிடிப்புக்கள் குழுக்களின் ஆற்றல்களைப் புலப்படுத்தின. அதன் நன்மைகளைக் குழுக்கள் முழுமையாக அனுபவித்தன.

சமூக வளர்ச்சியின் போது குழு நிலைப்பட்ட உற்பத்தியும், பங்கீடும் வீழ்ச்சியடைய, தனிமனித இயல்புகள் மேலோங்கத் தொடங்கின. இந்நிலையிற் கண்டுபிடிப்புக்கள் தனிமனித பலத்தை வலுப்படுத்தும் வகையில் உதவின. தனிமனித இயல்புகளின் வளர்ச்சியோடு 'ஆன்ம ஈடேற்றம்' என்பது தனித்த முயற்சியால் ஈட்டப்பட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது. அற நூல்களிலும், பக்தி இலக்கியங்களிலும் இவ்வகை வற்புறுத்தல்களைக் காணலாம். 'ஆணவம்' என்ற எண்ணக்கரு வளர்வதற்கும் தனிமனித மேலோங்கலை மிகைப்படுத்திய சமூக மாற்றங்களே காரணமாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய ஆக்கங்கள் கல்விச் செயன்முறையினூடாக வளர்க்கப்பட்டபொழுது எவை சிறந்தவையோ, எவை தனித்துவம் வாய்ந்தவையோ, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எவை நல்லவையோ அவை அவை கல்வியின் உள்ளீடாக அமைந்தன.

ஆக்கச் செயல்முறை தூண்டப்படுவதற்கு புதிய அனுபவங்கள், கருத்துக்கள், பண்பாடு ஆகியவற்றின் தொகுப்பு அவசியம் என்பது உணரப்பட்டது. சமஸ்கிருத மொழிக்கு கல்வி நிலையங்களில் இடங்கொடுத்தமை இவ்வாறான உந்தலின் வெளிப்பாடு என்று கொள்ள இடமுண்டு.

பண்பாடுகள் ஆக்கச் செயல்முறையைத் தூண்டின. ஆக்கச் செயல்முறையின் பரிமாணம், ஆய்வுக்கு முதன்மையளித்தமையாகும். ஆய்வு என்பது தேடலாகும். தேடல் புதிய கருத்துக்களின் வடிவமைப்பிற்கு உறுதுணையாக அமைந்தது. மொழி வடிவான புத்தாக்கங்கள் சிறப்படைந்த அளவுக்குக் கருவிகள் வடிவான புத்தாக்கங்கள் விரைந்து வளராமைக்கு நிலமானிய சமூக அமைப்பின் தேக்கமும், இறுக்கமும் காரணங்களாக அமைந்தன. சில்லு, சாய்தளம், நெம்பு என்பவற்றின் பிரயோகம் பற்றிய செய்திகள் சங்கப் பாடல்களிலே காணப்படுகின்றன.

உடல் வலுவின் பிரயோகம், காற்று வலுவைப் பயன்படுத்தி மரக்கலங்களை அசைத்தல், சூரிய வலுவைப் பயன்படுத்திக் காய்கறிகளை வற்றலிடல், என்றவாறு வலுப் பிரயோகத்தில் ஆக்கத்திறன் பயன்படுத்தப்பட்டாலும் நீர் வலுவைப் பயன்படுத்தலில் ஆக்கத்திறன் பிரயோகம் வறிதாகவே காணப்பட்டது. மேலைநாடுகளில் நீர்வலு, காற்றுவலு, வெப்பவலு என்பவற்றைப் பயன்படுத்திச் சக்கரங்களைச் சுழலச் செய்தமை, பொறிகள் பற்றிய புத்தாக்க நடவடிக்கைகளுக்குப் பின்புலமாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகக் கல்விச் செயற்பாடுகள் உடல் வலுவின் பிரயோகத்தையே தொடர்ச்சியாக முதன்மைப்படுத்திக் கொண்டிருந்தது. மனித உடல் வலுவும், விலங்குகளின் வலுவும், கட்டடங்கள், கோபுரங்கள் அமைப்பில் மிகை யாகப் பயன்படுத்தப்பட்டன.

ஒரு சில்லுடன் தொடர்புபடுத்திப் பல சில்லு களை இயக்கிய புத்தாக்க நடவடிக்கை மேலைப் புலத் தொழில் நுட்பக் கல்வியில் ஒரு பிரதான வளர்ச்சிக் கட்டமாகக் கொள்ளப்பட்டது. சில்லின் பரந்துபட்ட உபயோகம் தமிழகக் கல்விச் செயன்முறையினூடாக வளர்க்கப்படாமைக்கு தொழில்நுட்பக் கல்விச் செயன் முறைகள் பிற்காலத்திலே சாதி முறைமைக்குக் கட்டுப் பட்டிருந்தமையும் ஒரு பிரதான காரணியாகக் கொள் ளத்தக்கது. சமூக அடுக்கமைப்பில் உயர்ந்து நின்றோர் தொழில்நுட்பக் கல்விச் செயற்பாடுகளைத் தமக்குரிய தேவையாக முன்னெடுக்கவில்லை. அவர்களது புத்தாக் கங்கள் இலக்கியம், இலக்கணம் சார்ந்தவையாகவே இருந்தன.

## வாழ்வும் அறிவுப் பரவலும்

அறிவு என்பது சமூக ஆக்கத்துடன் இணைந்தது. யதார்த்தம் பற்றிச் சமூகம் வடிவமைத்துக் கொள்ளும் தேடல் நோக்காக அறிவு அமையும். மனித அறிவும், உள்ளுணர்வும் சமூக இருப்பினால் தீர்மானிக்கப்படு கின்றன.

சமூகம் அறிவை ஒழுங்கமைக்கின்றது; பாது காக்கின்றது; பங்கீடு செய்கின்றது. புறத் தூண்டிகளை புலன் உறுப்புக்களால் உள்வாங்கி உள்ளத்தே வடிவமைக் கப்படும் பொருளாக அறிவு விளங்குகின்றது. புறத் தூண்டி என்பதில் இயற்கையின் இயல்பும், சமூகத்தின் இயல்புமே முதன்மை பெறுகின்றன. உட்.பொதிந்த அறிவு, வெளிப்படுத்தப்படும் அறிவு என்ற இரண்டு பரிமாணங்களாக அறிவு பகுத்துரைக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு சமூகமும் தமது இயல்புக்கேற்றவாறு அறிவை உருவாக்கியும், பாதுகாத்தும், பரப்பியும் வந்துள்ளன. சமூக இயல்பு என்று கூறும்பொழுது அதன் பொருளாதாரப் பாங்கு, நிரலமைப்பு என்பவை அறிவை ஆக்கும் சிறப்புக் காரணிகளாக இருக்கின்றன.

பண்டைத் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையை அடியொற்றி அறிவு உருவாக்கம் ஏற்பட்டது. உணவு தேடல், உணவு தேடலுக்கான உழைப்பு. என்ற செயற்பாடுகளில் தனது குடும்பத்தில் அல்லது குழுவில் உள்ளோருடன் கொள்ளும் இடைவினைகள் மொழி விருத்தி, எண்ணக்கருவாக்கம், மதிப்பீடுகள் என்பவற்றை ஏற்படுத்தின. 'கணிப்பீடுகள்', 'எண்ணுதல்' என்பவை தமிழர்களின் அறிவாக்கத்திலே சிறப்பிடம் பெற்றிருந்தன. ஆசிரியர் 'கணக்காயர்' எனக் குறிப்பிடப்படுதல் ஏற்கனவே அறியப்பட்டதொன்றாகும்.

அறிவு என்பது புறநிலைப்பட்டதாக விருத்தியடைகின்றது. தனியொருவருக்கு மட்டும் அறிவு சொந்தமானது அன்று. பிறரால் அறியவும், அறிவுறுத்தவும் படுவதால் அறிவில் புறவயத்தன்மை சிறப்புமிக்க ஒரு பரிமாணமாக வற்புறுத்தப்படுகின்றது.

நாளாந்தத் தொழிற்பாடுகளில் இருந்து அறிவு பிறக்கும் பொழுது 'பழக்கப்படுதல்' அல்லது 'பரிச்சியமாதல்' என்ற பண்புகளும் ஏற்படுகின்றன. பழக்கமுள்ளவர் பழக்கப்படாதவருக்கு அறிவை வழங்கமுற்பட்ட பொழுது. அறிவு தொடர்பான விநியோகம் அல்லது பங்கீடு ஏற்படலாயிற்று. இந்தச் செயற்பாட்டில் மிக்க உன்னதமான தொடர்புக் கருவியாக விளங்கும் மொழியும், மொழிக்குரிய தருக்க வற்புறுத்தலாகிய இலக்கணமும் வளர்ச்சியடைந்தன.

சமூக வளர்ச்சியோடு 'முதலாம் நிலை அறிவு', 'இரண்டாம் நிலை அறிவு' என்ற நிலைகளில் அறிவின் பரிணாம வளர்ச்சி ஏற்படலாயிற்று. நாளாந்த உற்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திச் செயற்பாடுகளோடு தொடர்புடைய அறிவு முதலாம் நிலை அறிவாயிற்று. இந்த அறிவை வழங்குவதில் குடும்பத்தின் அல்லது குழுவின் மூத்தோர் பிரதான பங்கை ஏற்றனர்.

இரண்டாம் நிலை அறிவு என்பது மேலதிகமான அறிவாகும். தத்துவவிசாரம், கவிதை புனைதல், மனனம் செய்து ஒப்புவித்தல், வாதிடல் முதலியவை இதற்கு உதாரணங்களாகும். இரண்டாம் நிலை அறிவின் வழங்கலோடு வரன் முறையான ஆசிரியத்துவம் வளர்ச்சி பெறலாயிற்று. கற்றல், கற்பித்தல் என்ற ஒழுங்கு படுத்தல் நடவடிக்கை இரண்டாம் நிலை அறிவுப் பங்கீட்டோடு இணைந்ததாகும்.

அறிவை வெளிப்படுத்தும் குறியீடுகள் புறவயப் பாங்கானவை. பலராலும் விளங்கிக் கொள்ளப்படத் தக்க குறியீடுகள் வழியாகவே அறிவை விநியோகிக்க அல்லது பரப்ப முடியும். அறிவு ஒவ்வொருவரதும் உள்ளத்திலே தேக்கி வைக்கப்படுகின்றது. குறியீடுகள் வாயிலாக அவை பிறருக்கு உணர்த்தப்படும். பலரது அனுபவங்களையும் கூட்டாகத் தேக்கி வைப்பதற்குரிய களஞ்சியப்படுத்தலை மொழி கொண்டுள்ளது.

அக உணர்வுகளை சமூகம் விளங்கிக்கொள்ளத் தக்கவாறு பரிமாற்றுதல் அறிவு வளர்ச்சியின் வேறொரு பரிமாணமாகும். தனிமனித உணர்வு சமூக உணர்வாக மாற்றப்படுகின்றது. இலக்கியங்கள் இதற்கு சான்றாகின்றன. ஒவ்வொருவரும் தத்தமக்குரிய பாத்திரங்களை நிறைவேற்றும் பொழுது புறநிலைப்படுத்தல் துலங்கியது. உதாரணமாக வேட்டையாடல், உணவு பதனிடல், குழந்தைகளைப் பராமரித்தல் போன்றவற்றைக் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் செய்யும்பொழுது சமூகப் பாத்திரமேற்றல் என்ற செயற்பாடு அறிவு வளர்ச்சியிற் பிரதான பரிமாணமாக அமைந்தது.

அறிவின் சமூக வழங்கலின் மந்திரம், சடங்கு, முதலியனவும் பிரதான இடங்களை வகித்தன. ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த குலக்குழுவின் உறுப்பினர் என்ற வகையில் அவருக்குரிய அறிவை வழங்குவதில் சடங்குகள் பிரதான இடத்தை வகித்தன. சடங்குகள் மரபுகளுடன் இணைந்திருந்தன. எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற அறிவு, மரபுகளின் வழியாக வழங்கப்பட்டன.

அறிவை வழங்கலின் பழமொழிகள், நாட்டார் கதைகள், பாடல்கள், தொன்மங்கள் என்பவை வலிமையான ஊடகங்களாக இருந்தன. பல்லவர் காலப் பக்தி இலக்கியங்களிலும், சோழர் காலப் பெருங்காப்பியங்களிலும் நாட்டார் இலக்கியங்களின் செல்வாக்கு ஊடுருவி இருப்பதைக் காணலாம்.

வரன்முறையான கல்வியில் குறியீட்டுப் பிரபஞ்சங்களினூடாக (Symbolic Universes) அறிவு பெருமளவிலே வழங்கப்பட்டது. தமிழ் மரபிலே இயற்கையுடன் இணைந்த பல்வேறு குறியீடுகள் கருத்தோற்றத்துக்கும், கருத்துப் பரிவர்த்தனத்துக்கும் பயன்படுத்தப்பட்டன. சூரியன், சந்திரன், பறவைகள், விலங்குகள், பூக்கள் முதலியவற்றைக் குறியீடுகளாக்கிக் கருத்துப் பரிமாற்றம் செய்தல் தொல் தமிழ் மரபிலே காணப்பட்டது. 'உருவகம்', 'தற்குறிப்பேற்றம்' என்ற அணிகள் இத் தொடர்பிலே வளர்ச்சியுற்றன.

அக நிலையானதும், புற நிலையானதுமான கருத்து வழங்கலைக் குறியீடுகள் கொண்டிருக்கும். சிக்கலான வகையிற் சமூகத்திலே அறிவு பங்கீடு செய்யப்படுவதற்குக் குறியீடுகள் துணை செய்தன. தமிழிற் காணப்படும் பெரும் இலக்கியத் தேட்டங்கள் குறியீடுகள் வாயிலான அறிவு ஆக்கத்திற்கும், பங்கீட்டுக்கும் சான்றாகவுள்ளன.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## பின்னூட்டல்

'கல்வி பற்றிக் கற்றல்' ஆய்வாளர்களின் கவனத்தை என்றும் ஈர்த்து வந்துள்ளது. கல்வி என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக பொருளாதார முறைமையின் இயக்கக் குறியீடாகும். பண்பாட்டு உணர்வுகள் கல்வி உணர்வுகளாக வெளிப்படுகின்றன.

மரபு பேணலும், மரபு மீறலும் என்ற எதிர் எதிர் நடவடிக்கைகள் சமூக முரண்பாடுகள் என்ற வேர்களை அடியொற்றியே வெளிவருகின்றன. கருத்து முதல் வாதம், பொருள் முதல் வாதம் என்ற கோட்பாடுகளுக்கிடையே ஏற்படும் மோதல்கள் ஆழ்ந்து நோக்கப்படும் பொழுது, சமூக முரண்பாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளமை புலப்படும். இவற்றின் பின்புலத்திற் கல்வி பற்றிய ஆய்வு 'சமூக ஆக்கம்' பற்றிய அறிவுடன் ஒன்றிணைந்து இயங்குதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

பண்டைத் தமிழர் கல்வி பற்றிய ஆய்வுகள் பெருமளவில் இலக்கியச் சான்றாதாரங்களைக் கொண்டே எழுதப்படுகின்றது. கல்வி என்பது மனித தேவைகளின் உடன்பாட்டுக்கான செயல்முறை என்றும் குறிப்பிடப்படும். இந்நிலையிற் கல்விச் செயல்முறைக்கும் இலக்கியச் செயல்முறைக்குமிடையே ஒப்புமைகளைக் காணமுடியும்.

முரண்பாடுகளினூடாகக் கல்வி வளர்ச்சியின் இயல்புகளை வெளிப்படுத்தல் இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வியியலில் நிலவிவரும் வினா (எதிர்), விடை (நேர்) முறையானது வாதப்பிரதி வாதமாகவும், வாக்கோ வாக்கியமாகவும் அமைகின்றது. ஒன்றை மற்றையது எதிர்த்து நிற்கும் 'ஐயம்' ஆகவும் அது வளர்ச்சி பெறுகின்றது. முரண்பாடுகளை ஆதாரமாகக் கொண்டு பண்டைத் தமிழர் கல்வி வரலாற்றை அணுகும்பொழுது கருத்துக்கள் செம்மைபெறுகின்றன.

● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புக்கள்:-

1. Horton and Hunt, *Sociology*, Mccraw Hill, Inc. New york, 1980, p. 15.

2. William Boyd, *The History of Western Education*, A+C Ltd, London, - 1932, p. 15.

3. குறள் - 1110

4. குறள் 392

5. கலித்தொகை - 133

6. குறள் - 426

7. இனியவை நாற்பது - 2

8. மதுரைக் காஞ்சி 761 - 3

9. தொல்காப்பியம், செய்யுள் 178

10. மணிமேகலை - 1:12 - 14

11. புறம் - 30

12. புறம் 72

13. John Lewis, *Anthropology*, W.H.Allen, London, 1969, p. 143.

14. நான்காம் திருமுறை - 6

15. N. Subbureddiar, *Collected papers*, Pari Nilayam, Madras, 1985, p. 297.

16. புறம் - 192

17. A. L. Basham, *The Wonder that was India*, Sidwick and Jackson, London, 1961, p. 76.

18. நன்நூல் - பொதுப்பாயிரம்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மேலது - பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம்.

20. மேலது - பொதுவியல்.

21. மேலது - உயிரியல்.

22. மாறன் அலங்காரம், அவையடக்கம்.

23. சி. வை. சதாசிவபண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு *13, 14, 15ஆம் நூற்றாண்டுகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1963, ப. 32.*

24. சிவப்பிரகாசம் பாயிரம்.

25. குரு ஞானசம்பந்தர், சிவ போகசாரம், 282.

26. வ. ஆறுமுகம், சபா ஜெயராசா, ''கல்வி வளம்'' ஆய்வரங்கக் கட்டுரை, யூன் 1991.

27. University of Madras, *Tamil Lexicon*, Vol 1, 1982, p. 211, also see M. Velusamy, Life oriented education of the Tamils, S. V. Subramaniam and V. R. Mahadevan (eds) Heritage of the Tamils Education and vocation, International, Institute of Tamils Studies, Madras 1986 p.144.

28. C. Rasanayagam, *Ancient Jaffna*, Madras, 1926, p. 357.

29. R. K. Mookerji: *Ancient Indian Education*, Mothilal Banarsidars, Delhi, 1972, p. 101.

30. குறுந்தொகை 252.

31. புறம் 56.

32. மணிமேகலை 42.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

33. J. K. Pillai, *Educational system of the Ancient Tamils*, The South India Saiva Siddhanta works Publishing Society Tinnevelly Ltd, 1972, p. 75.

34. குறள் 899.

35. The Malintegration Theory - See Percy S. Cohen, *Modern Social Theory*, Heinemann Educational Books London, 1979, p. 187.



131094
KOHA
JPL
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5547

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Boscoh Printers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org